
டிசம்பர் 17, 2000 ~~ரூபா 14.00~~ அறிமுக விலை ரூபா 12.00
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි வார மலர்



# பேச்சு: அரசின் போக்கு நம்பிக்கை அளிக்கவில்லை!

## சாயி பாபா மீது அவதூறு அசிங்கமான குற்றச்சாட்டு

# வாகனத் தொடரணிகளுக்கு கூடுதல் பாதுகாப்பு ஏற்பாடு

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து 68கிலோமீற்றர் தொலைவில் உள்ள பொலநறுவை வரை படையினர் பயணம் செய்யும் வாகனத் தொடரணிக்கு வழமையை விடக் கூடுதல் பாதுகாப்பு இப்போது வழங்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சத்துருக்கொண்டானில் இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தைத் தொடர்ந்து இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகள் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினர், பொலிஸார் மற்றும் அதிரடிப்படையினர் ஆகியோருக்குத் தேவையான இராணுவத் தளவாடங்கள், உணவுப் பொருட்கள் முதலானவை வீதி வழியாகவே எடுத்துச் செல்லப்படுகின்றன.

முன்னர் இவை பெரும்பாலும் ரயில் மூலமே அனுப்பப்பட்டன. சில வருடங்களுக்கு முன்பு வந்தாறுமூலையில் வைத்து விடுதலைப் புலிகள் ரயில் மீது தாக்குதல் நடத்தினர். அதைத் தொடர்ந்து மட்டக்களப்புக்கான ரயில் சேவை நிறுத்தப்பட்டது. இன்று வரை அது மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை.

அதனால் படையினருக்குத் தேவையான, சகல விநியோகங்களும் வீதி வழியாகவே இடம் பெற்று வருகின்றன.

விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் எனக் கருதும் படையினர் மட்டக்களப்பில் இருந்து மாவட்ட எல்லையான வெலிக்கந்தை வரை வீதிக் கண்காணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர். கவச வாகனங்கள் சகிதம் வாகனத் தொடரணி செல்கிறது.

அப்படியிருந்தும் விடுதலைப்புலிகள் படையினரின் கண்களில் மண்ணைத் தூவி வாகனத் தொடரணி மீது தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

பாதுகாப்பு ஒட்டை விழுந்துள்ள பிரதேசங்களிலும் படையினரின் கண்காணிப்புத் தீவிரம் குறைந்திருந்த பகுதிகளிலும் தாக்குதல் நடத்தி வந்த விடுதலைப் புலிகள் காலப் போக்கில் மட்டக்களப்பு நகர் வரை தொடர் அணி மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இவ்வருட முற்பகுதியில் மட்டக்களப்பு நகரின் தாண்டவன்வெளிப் பிரதேசத்தில் வாகனத் தொடரணி மீது விடுதலைப் புலிகள் தொடர்ச்சியாக நடத்திய தாக்குதல் படைத் தரப்பினரை நிலைகுலைய வைத்தது குறிப்பிடத்தக்கது.

அதன் பின்னர் தொடரணிப் போக்குவரத்து இடம் பெறுவதற்கு ஒரு சில மணி நேரம் முன்னதாகச் சகல வாகனங்களும் தடுத்து நிறுத்தப்படுகின்றன. மக்கள் நடமாட்டமின்றி வீதி வெறிச்சோடிய பின்னர் வாகனத் தொடரணி இடம் பெறுகிறது. அத்துடன் வீதிகளின் இரு மருங்கிலும் உள்ள பெரிய மரங்களும் படையினரால் வெட்டி அகற்றப்பட்டுள்ளன.

படையினர் எவ்வாறு பாதுகாப்பு நடைமுறைகளைப் பலப்படுத்திய போதிலும் விடுதலைப் புலிகள் வாகனத் தொடரணி மீதான தாக்குதலை ஆங்காங்கே நடத்தி வருகின்றனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய படுவான்கரைப் பகுதியில் இருந்து வாகரை வரையிலான கணிசமான வயற்பிரதேசம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் எந்த இடத்திலும் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதல் நடத்த வாய்ப்பாக உள்ளது.

—அபிமன்யூ

# ஆயுதக் குழுக்களின் அடாவடித்தனம் ஆரையம்பதி இளைஞர் மரணம்

ஆயுதக் கும்பல் ஒன்றினால் அப்பாவி இளைஞரின் உயிர் பறிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவரே ஆயுதக் கும்பலின் அடாவடித்தனத்துக்குப் பலியாகினார்.

இறந்த இளைஞனின் பெயர் பரமேஸ்வரன் யுகேந்திரன்.

ஆயுதக் குழுவைச் சேர்ந்த சிலர் இளைஞரை வழிமறித்து சிகரெட் வாங்கிவருமாறு கேட்டுள்ளனர்.

சிகரெட் வாங்கிவரத் தாமதம் ஏற்பட்டுவிட்டது. அதனால் மதுபோதையில் இருந்த ஆயுதக் குழுவினருக்குக் கடும் கோபம் வந்தது. அந்த இளைஞனை பொல்லுகளாலும் தடிகளாலும் தாறுமாறாகத் தாக்கினர்.

"ஐய்யோ அடியாதீங்கோ, அடியாதீங்கோ" என இளைஞன் அழுதார். அழாதே என்று தலையில் பலமான ஒரு அடி, மயங்கி விட்டார் இளைஞன்.

மதுபோதையில் இருந்த ஆயுதக்குழுவினருக்கு மயக்கம், மரணம் போல் தெரியவே இளைஞரை தர, தர என்று இழுத்துச் சென்று ஆற்று மண்ணால் மூடிவிட்டுச் சென்றனர்.

மாலை ஆறுமணிக்கு மணலில் புதைக்கப்பட்ட மேற்படி இளைஞரை அவரது நண்பர்ஒருவர் இரவு 11 மணியளவில் தற் செயலாகக் கண்டார். அவரை மீட்டு எடுத்து மற்றவர்களின் உதவியுடன் மட்டக்களப்பு வைத்தியசாலையில் சேர்த்தார்.

இளைஞரின் மயக்கம் தெளியவில்லை. நான்கு நாட்களின் பின் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அவர் சேர்க்கப்பட்டார்.

கடந்த 10ஆம் திகதி அவர் மரணமடைந்து விட்டார்.

இன்று இளைஞர் யுகேந்திரனின் குடும்பம் தமது குடும்ப அங்கத்தவர் ஒருவரை இழந்து நிற்கிறது.

# தமிழ் முஸ்லிம் உறவை பிரிக்க விஷமிகள் சதி

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் உள்ள அரசாங்க அலுவலகங்கள் பலவற்றிற்கு விஷமத்தனமான துண்டுப்பிரசுரங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

தமிழ் — முஸ்லிம் அரசாங்க ஊழியர்களிடையே பகைமை, வெறுப்பு உணர்வுகளை விதைக்கும் வகையில் இந்தத் துண்டுப்பிரசுரங்களில் வாசகங்கள் காணப்படுகின்றன.

இதனால் அரசாங்க ஊழியர்கள் மட்டுமன்றித் தமிழ் முஸ்லிம் பொதுமக்களும் பதற்றமடைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் நடந்த சில துரதிஷ்ட சம்புவங்களால் இரு சமூகங்களிடையேயும் முறுகல் நிலை ஏற்பட்டிருந்தது. இரு சமூகத் தலைவர்களும் ஒன்றிணைந்து மேற்கொண்ட முயற்சிகள் காரணமாக விரைவிலேயே சுமுக நிலை திரும்பியது.

இதைப் பொறுக்க முடியாத சில தீய சக்திகளே இரு சமூகங்களையும் பரஸ்பரம் அவநம்பிக்கை கொண்டு மோதவைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன.

பாலஸ்தீனர்களுக்கு ஆதரவு தெரிவித்தும் இஸ்ரேலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கிழக்கு மாகாணத்தில் உள்ள பல முஸ்லிம் பிரதேசங்களில் ஆர்ப்பாட்டப் பேரணிகள் கடந்த மாதம் நடத்தப்பட்டன.

இதை விரும்பாத சில 'மொசாட்' சக்திகள் தமிழ் — முஸ்லிம் மக்களின் இன உறவைப் பிரிக்கும் சதித் திட்டத்திற்குப் பின்னணியாக இருக்கலாம் என ஊகிக்கப்படுகின்றது.

எது எப்படி இருப்பினும் கிழக்கு மாகாணத்தில் பிட்டும் தேங்காய்ப் பூவுமாய் இணைந்திருக்கும் தமிழ் — முஸ்லிம் மக்களின் இன உறவுகளைப் பிரிக்கும் சக்திகளை அடையாளம் காணமுயற்சிக்க வேண்டும். அத்துடன் இவ்வாறான சக்திகளின் சதிவேலைகளுக்கு இடம்கொடாது நட்புறவுடன் வாழவேண்டும் என்பதில் இரு இன மக்களும் முனைப்பாக இருக்கின்றார்கள்.

நல்லூர் ... மா நகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்.

# கடற்படைப் பெருக்கம் புலிகளுக்குச் சவாலாகுமா?

மிகப்பெரிய யானைப் பருமனைக் கொண்ட அமைச்சரவையையும் மற்றும் பிரதி அமைச்சர் குழுவையும் தற்போதைய அரசு கொண்டிருக்கிறது. அவற்றைப் பேணுவதற்கு மக்கள் பல மில்லியன் ரூபாவை பொருட்கள் சேவைகள் மீதான வரி என்றும் (GST) தேசிய பாதுகாப்பு வரி (NDL) என்றும் வாரி இறைத்துக் கொண்டிருக்கின்றனர். இதனால் விஷம் போல் வாழ்க்கைச் செலவு நாளாந்தம் உயர்ந்து செல்கிறது.

இது போதாதென்று ஆயுதக் கொள்வனவு வேறு. ஆயுதத் தரகர்களும் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்கும் தோரணையில் நாட்டின் பொருளாதாரத்தைச் சுரண்டுகிறார்கள்.

கடந்த ஏப்ரல் மாதம் ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சியினைத் தொடர்ந்து ஆக்ரோஷமாக யாழ் நகர் நோக்கிப் புலிகள் முன்னேறினர். அவர்களைத் தடுத்து நிறுத்தவும், 35,000இற்கும் மேற்பட்ட படையினரின் எதிர்காலத்தை அபாயப்பிடியில் இருந்து பாதுகாக்கவும் முயற்சி நடந்தது. அரசு பல்வேறு நாடுகளிடமிருந்து இராணுவ மற்றும் தளவாட உதவியினை வேண்டி நின்றது.

பாகிஸ்தான், இஸ்ரேல், ரஷ்யா, செக்குடியரசு மற்றும் ஈரான் போன்ற நாடுகள் உடனடியாக உதவ முன்வந்தன.

ஆனால் இந்தியாவோ "இலங்கைப் பிரச்சினை ஒரு உள்நாட்டுப் பிரச்சினை. அதில் இந்தியா இனிமேல் தலையிடாது. இராணுவ உதவிகள் எதனையும் இந்தியா வழங்காது. இந்தியாவின் ஆயுதங்களை ஈழமக்களைக் கொல்லப் பயன்படுத்த இந்தியா ஒரு போதும் அனுமதிக்காது" என்று கூறி முற்றாக மறுத்தது.

உடனடியாக விமானம் மூலமும், கப்பல் மூலமும் பாகிஸ்தான் 122 மி.மீ பல் குழல் ராக்கட் ஏவுகணைப் பீரங்கிகள் (Multi - Barrel - Rocket Launchers (MBRL) உள்ளிட்ட பல்வேறு ஆயுதங்களைப் பெருந்தொகையில் இலங்கைக்கு அனுப்பி வைத்தது.


7 க்கும் குறையாத கிபிர் மீயொலித் தாரை குண்டு வீச்சு விமானங்களை இஸ்ரேல் உடனடியாக அனுப்பி வைத்தது. செக் குடியரசிடமிருந்து யுத்த டாங்கிகளைக் கொள்வனவு செய்வதற்கு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன.

இவற்றை ஆராய்ந்து கொள்வனவு செய்வதற்கென

## களநிலைமை எப்படி?

உயர் இராணுவக்குழு அங்கெல்லாம் அனுப்பப்பட்டது. அக்குழு மேற்படி T-55 ரக யுத்த டாங்கிகளைப் பார்வையிட்ட பின் அவற்றை வாங்குவதற்கு விதந்துரை செய்தது.

ஆனால் தற்போது கிடைக்கப்பெறும் திடுக்கிடும் தகவல்களின் படி கூ55 ரக யுத்த டாங்கிகள் 1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் தயாரிக்கப்பட்டவை என்று தெரிய வருகிறது. சாதாரணமாக ஆர்.பி.ஜீ – 7 இன் தாக்குதலுக்குக்கூட தாக்குப்பிடிக்க முடியாதவை இவை என்று ராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.



இஸ்ரேலில் இருந்து பெறப்பட்ட "சார் – 4" (SAAR-4) போர்க்கப்பல் கடற்படையில் சேர்த்துக் கொள்ளப்பட்ட வைபவத்தின் போது எடுத்தபடம்.

இவற்றில் சுமார் 30க்கும் மேற்பட்ட டாங்கிகள் மிக விரைவில் இங்கு வந்து சேர இருக்கின்றன.

இக் கொள்வனவு தொடர்பாக தற்போது பரபரப்பாக இராணுவ ராஜதந்திரிகள் மட்டத்தில் பேசப்படுகின்றது. புலிகள் வசம் டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகள் [Anti - Tank Guided - Missiles (ATGM)சி இருப்பது ராணுவத்திற்குத் தெரியும். அப்படியிருந்தும் ஏன் சாதாரணமாக ஆர்.பி.ஜி – 7 க்கே தாக்குப் பிடிக்க முடியாத 50 ஆண்டுகள் வரை பழமைவாய்ந்த யுத்த டாங்கிகளைக் கொள்வனவு செய்ய வேண்டும்?

1999 செப்ரெம்பர் மாதம் 24ஆம் திகதி அப்போது இராணுவத்தின் பிடியில் இருந்த பரந்தன் பகுதியில் இரண்டு Armoured Personnel Carrier கவசவாகனங்கள் நிறுத்தப்பட்டிருந்தன. இவற்றைப் புலிகள் அழித்தபோது அவர்களிடம் டாங்கி எதிர்ப்பு ஏவுகணை இருப்பது வெளியுலகிற்குத் தெரிய வந்தது.

அழிக்கப்பட்ட இந்த யுத்த டாங்கிகளின் பகுதிகள் பகுப்பாய்விற்காக லண்டனுக்கு அனுப்பப்பட்டன.

ஆரம்ப ஆய்வுகளின் அடிப்படையில் இவை டாங்கி எதிர்ப்பு ஏவுகணைகளின் இரண்டாம் தலைமுறையைச் சேர்ந்தவையாக இருக்கலாம் என்று கருதப்பட்டது. ஆனாலும் ஒரு வருடத்திற்கு மேலாகியும் ஆய்வு அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட வில்லை.

இவ்வாறான ஏவுகணைகளை ஒரு நாடு வாங்குவதாயின் "கொள்வனவு செய்பவரே இறுதிப் பாவனையாளர்" (End-user certificate) என்று அத்தாட்சிப்படுத்திய பின்னரே அவை பெறப்பட முடியும். அப்படியாயின் புலிகளுக்கு சர்வதேச சந்தைகளில் இருந்து ஆயுதங்கள் எவ்வாறு கிடைக்கின்றன. நம்பிக்கைக்குப் பாத்திரரான சர்வதேச பங்காளர்களை (Bona Fide Partners) புலிகள் வைத்திருக்கிறார்களா என்ற கேள்வியும் எழுந்தது.

இது ஒருபுறம் இருக்க அண்மையில் இந்தியாவிடம் இருந்து 20 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதிமிக்க "சுகன்யா" ரக ஹெலிபாட் கொள்வனவு செய்யப்பட்டது. இது பாவனைக்கு வரக் குறைந்தது 6 மாதங்கள் வரை செல்லலாம். ஏனெனில் இதில் "சுடுதிறன் கட்டுப்பாட்டுக் கருவி" (Fire Control System) பொருத்தப்பட்டிருக்கவில்லை.

தாக்குதல் தேவைகளுக்கு என்று அல்லாது ஆழ்கடலில் வேறு நடவடிக்கைகளுக்கும் இக்கப்பல் பயன்படுத்தப்படும். அதனைச் சுயமாகப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய சுடுகருவியும் சுடுதிறன் கட்டுப்பாட்டுக் கருவியும் பொருத்தப்பட்டிருப்பது அவசியம்.

ஆனால் மேற்படி கப்பலின் தரம் உயர்த்தப்பட முடியும் என்ற உறுதிப்பாடு இன்றி வாங்கப்பட்டது. பிரிட்டனிலிருந்து 4.5 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் பெறுமதியில் மேற்படி கருவியை வாங்கப் பாதுகாப்பு அமைச்சு அனுமதியளித்தது. ஆயினும் சில தினங்களில் இத்தாலி நிறுவனம் ஒன்றும் அதே கருவியை வழங்க முன்வந்தது. இதனால் ஏற்கனவே பிரிட்டனிடமிருந்து அதனை வாங்கச் சம்மதித்த இலங்கை இனம்புரியாத காரணங்களினால் அதனைக் கைவிட்டு இத்தாலியிடம் அக் கட்டுப்பாட்டுக் கருவியை வாங்க உடன்பட்டது.

இதனால் சினமடைந்த பிரிட்டன் தனது கண்டனத்தை வெளியிட்டது. இறுதியில் சுடுகருவியை பிரிட்டனிடம் இருந்தும், கட்டுப்பாட்டுக் கருவியை இத்தாலியிடம் இருந்தும் கொள்வனவு செய்வதென்று முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

ஆனால் இதே காலப்பகுதியில் "சுகன்யா" ரகத்தை விட மிகவும் நவீனமானதும் தரமானதும், 76 mm கன ரக பீரங்கிகள் பொருத்தப்பட்டதுமான இரண்டு கப்பல்களை வாங்க முடிவு செய்யப்பட்டது. ஒவ்வொன்றும் தலா 27 மில்லியன் அமெரிக்க டாலர்கள் பெறுமதியில் இவற்றை வழங்க ரஷ்ய நிறுவனம் ஒன்று முன்வந்தது.

ஆயினும் வெளிப்படையான ஆனால் வெளியே கூறமுடியாத காரணங்களுக்காக அவை நிராகரிக்கப்பட்டிருக்கலாம் என ராஜ தந்திர வட்டாரங்கள் கூறுகின்றன.

இதே போன்று கடற்படையால் இஸ்ரேலிடம் இருந்து 20 வருடங்கள் பழமை வாய்ந்த SAAR-4 ரக பல்வகைப்பயன்பாடுள்ள தாக்குதல் கப்பல்கள் கொள்வனவு செய்யப்பட்டன. இந்தக் கப்பல்களில் ராடரினால் கட்டுப்படுத்தும் பீரங்கி செயல் இழந்து விட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இக்கப்பல்களின் பெறுமதி 27 மில்லியன் அமெரிக்க டாலர்களாகும்.

மேற்படி மூன்று புதிய கடற்படைக் கப்பல்களும் கடற்படையின் பொன் விழாக் கொண்டாட்டங்களின் போது உத்தியோக பூர்வமாக சேர்த்துக் கொள்ளப்பட்டன.

இலங்கை அரசின் கடற்படைப் பெருக்கமும் அதைப் பலப்படுத்தும் நடவடிக்கைகளும் புலிகளின் வளர்ந்து வரும் கடற்சமர்த்திறனுக்குச் சவாலாக அமையுமா? பொறுத்திருந்து தான் பார்க்கவேண்டும்.

–பி. ரமணன்


மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர். Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் டிசம்பர் 10 முதல் 22 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG.9492

New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street, No.10, Reclamation Road, Colombo 11.
T.P.074-715547, 074-715546 செல்லிடல்- 072-609388

கல்முனையில் ஜனவரி 6, 7 திகதிகள்

T.M.M பாமசி கல்முனை T.P.067-29329

வவுனியாவில் ஜனவரி 11,12 திகதிகளில்

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNIINN T.P.024-22074, 21405, 21406

கடிதத் தொடர்பு : RESIDANT T.P 065- 24019
DR.P.ARUMUGAM
NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA, SRILANKA.

சுடர் ஒளி

17 டிசம்பர், 2000.

36/2, பிரெட்றிக்கா வீதி, கொழும்பு-06
டெலிபோன் - பாக்ஸ் : 501409/ 599834

## பேச்சு வார்த்தைக்கு அரோகராவா?

உடனே பேசுவோம்.

நிபந்தனை எதுவுமின்றிப் பேசுவோம்.

சண்டை பிடித்துக்கொண்டே பேசுவோம்.

கால எல்லை வைத்துப் பேசுவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவது பற்றி அரசாங்கம் இப்படி அறிவித்திருக்கிறது.

அதாவது அரசாங்கம் தனது நிலைப்பாட்டைத் தெரிவித்திருக்கிறது.

நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை களுக்குத் தாம் தயார் என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப் பிள்ளை பிரபாகரன் கடந்த மாதம் 27 ஆம் திகதி தமது மாவீரர் தினக் கொள்கை விளக்க உரையில் அரசுக்கு நேசக்கரம் நீட்டினார்.

சுமுகமான சூழலையும் இயல்பான நிலையையும் ஏற்படுத்தினால் பயனுள்ள பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அது அனு கூலமாக இருக்கும் என்றும் பிரபாகரன் குறிப்பிட்டிருந்தார்.

பிரபாகரன் நீட்டிய நேசக்கரத்தைப் பற்றிப் பிடிப்பதா அல்லது அதைத் தட்டிவிடுவதா என்று முடிவு செய்வதற்கு அரசிற்கு இரண்டு வாரங்கள் பிடித்திருக்கின்றன.

அரசின் நிலைப்பாட்டைப் பாதுகாப்பு அமைச்சரான ஜனாதிபதி சந்திரிகா குமார துங்காவோ பதில் பாதுகாப்பு அமைச்சரான பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்காவோ அல்லது பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையோ வெளியிட வில்லை.

நாட்டின் பாதுகாப்பு சம்பந்தப்பட்ட இந்த முக்கிய விஷயத்தை வெளியுறவு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரே தெரிவித்தார்.

உலக நாடுகளுக்கு எல்லாம் அடிக்கடி சென்று புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாகப் பிரகடனப்படுத்தி அந்த இயக்கத்தைத் தடை செய்யவேண்டும் என்று விடாது கேட்டு வருபவர் அமைச்சர் கதிர்காமர்.

அவர் புலிகள் சம்பந்தப்பட்ட இந்த விஷயத்தையும் தனக்குரியதாகவே எடுத்துக் கொண்டதில் வியப்பில்லை.

அமைச்சர் கதிர்காமர் அரசாங்கத்தின் உத்தியோகபூர்வ அறிக்கையை வெளியிட்டு வைத்ததோடு தன்னுடைய சொந்தக் கருத்துகளையும் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததன் படி யுத்தத்தை நிறுத்திக்கொண்டு பேச்சுவார்த்தை நடத்தப் பட மாட்டாது.

சுமுகமான சூழ்நிலையும் இயல்பான நிலையும் பேச்சுவார்த்தைக்கு முன் ஏற்படுத் தப்படமாட்டா.

இவையெல்லாம் பேச்சுவார்த்தை தொடங்கிய பின்னர் பேச்சு வார்த்தை முன்னேற்றம் காணும் போது செய்ய வேண்டியவை என்பதே அரசின் கருத்து என்று கதிர்காமர் சொன்னார்.

ஆக, புலிகள் விரும்புகிறபடி பேச்சு வார்த்தைக்குச் செல்ல அரசாங்கம் விரும்பவில்லை.

அரசாங்கம் தான் நினைத்தபடியே போரை நிறுத்தாமலும், மோதலைத் தணிக் காமலும், சுமுகமான சூழலையும் இயல்பான நிலையையும் ஏற்படுத்தாமலும் காலக்கெடு ஒன்றை வைத்துப்பேச்சு வார்த்தை நடத்தவேண்டும், அதற்குப் புலிகள் வர வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறது.

அதற்கு 'புலிகள் சம்மதிப்பார்களா?' புலிகளின் போக்கு அரசுக்கு நன்கு புரியும். அப்படியிருந்தும் அரசு இப்படிச் சொல்லியிருக்கிறது என்றால் அதன் அர்த்தம் என்ன?

தான் பேச்சு வார்த்தைக்குத் தயாராக இல்லை என்பதை அரசாங்கம் சுற்றி வளைத்து மறைமுகமாகப் புலப்படுத்தியிருக்கிறது. இப் படித்தான் ஊகிக்க வேண்டியிருக்கிறது.

இந்த விஷயத்தில் புலிகளாவது சற்று விட்டுக்கொடுத்து நடக்கக்கூடாதா?

இந்தக் கேள்வியை எழுப்பினால் புலிகள் "ஏன் அந்த விட்டுக் கொடுத்தலை அரசாங்கம் செய்தால் என்ன, அது கொம்பு முளைத்ததா? என்று திரும்பக் கேட்கக்கூடும் அல்லவா?.

கொஞ்ச நஞ்சம் இருந்த நம்பிக்கையும் அமைச்சர் கதிர்காமரின் காலங்கடந்த அறிவித்தலோடு தகர்ந்துவிட்டது.

சமாதானப் பேச்சுவார்த்தைக்கு அரோ கராவா?

இனி யுத்தமும் மக்களின் அவலங்களும் தொடர் கதை தானா, கதிர்காமக் கந்தா? காப்பாற்று.

# அரசின் போக்கில் ரணில் அவநம்பிக்கை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தின் போக்கில் எதிர்க்கட்சித்தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மிகுந்த அவநம்பிக்கை கொண்டிருக்கிறார்.



சந்திரிகா

வடக்கு கிழக்கு யுத்தம் காரணமாக இந்த நாட்டில் ஜனநாயக உரிமைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.

சில இனங்களின் உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலைமை தொடருமானால் நாட்டில் பாஸிச பயங்கரவாதம் உருவாகும் என்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சி அடைந்து வருகிறது. விலை வாசிகளின் அதிகரிப்பால் உயர்ந்து வரும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்க முடியாமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள்.

வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டே ரணில் விக்கிரமசிங்க அரசாங் கத்தின் மீது அவநம்பிக்கை தெரிவித்தார்.

வடக்கு கிழக்கில் நடைபெற்றுவரும் யுத்தத்தால் நாட்டுக்கு ஏற்பட்டு வரும் இழப்புகளையும் அழிவையும் ரணில் விக்கிரமசிங்க நினைவுபடுத்தினார்.

யுத்தம் நிறுத்தப்பட வேண்டும். தமிழீழ விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தி இனப்பிரச்சினைக்கு எல்லோரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய அரசியல் தீர்வு காணப்பட வேண்டும்.

இப்போது வன்னிப் பகுதியில் உள்ள மக்கள் உணவு, மருந்து வசதிகள் இல்லாமல் பெரும் துன்பங்களுக்கு இலக்காகி வருகிறார்கள். இதை அரசாங்கம் கவனத்தில் கொண்டு ஆவன செய்ய வேண்டும்.

இந்தக் கருத்தை ரணில் விக்கிரமசிங்க நீண்டகாலமாக வலியுறுத்தி வருகிறார்.

அரசாங்கம் எதையும் காதில் வாங்கிக் கொள்வதாகத் தெரியவில்லை. அரசாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசத் தயாராக இருப்பதாகவும் தெரியவில்லை என்று ஐ.தே.க. கொழும்பு மாவட்ட எம்.பியும் ஐ.தே.க. பேச்சாளருமான கருணாசேன கொடிதுவக்கு தெரிவித்தார்.



ரணில்

சமாதானப் பேச்சுவார்த்தை களுக்கான முயற்சிகளுக்குக் குந்தகம் விளைவிப்பதில்லை என்ற நிலைப் பாட்டிலேயே ரணில் விக்கிரமசிங்க இருக்கிறார் என்று ஐ.தே.க. எம்.பி. ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையில் ஐ.தே.கவை நேரடியாகச் சம்பந்தப்படுத்த வேண்டிய அவசியம் இல்லை. அரசாங்கம் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துவிட்டு விவரங்களை ஐ.தே.கவுக்குத் தெரியப்படுத்த வேண்டும் என்பதே ஐ.தே.கவின் விருப்பம் என்றும் ராஜித சேனாரத்ன சொன்னார்.

## அரசியல் அம்பலம்



காளை இருக்கும் கோயிலின் பெயர் கொண்டவரின் தோழர்கள் கட்சிமாறிக் காலைவாரி விட்டிருக்கிறார்கள். மீன்பாடும் தேன் நாட்டில் போட்டியிட்ட நேசமான மன்னனும், மதியானவரும் இன்னும் எட்டுப் பேருடன் கட்சி மாறினார்கள்.

வவுனியாவில் உள்ள முன்னாள் எம்.பியும் கடந்த தேர்தல் வேட்பாளருமான சில்வாவும், மன்னாரில் போட்டியிட்ட காந்த தோழரும் பெருந்தோழரை "அம்போ" என்று கைவிட்டு விட்டனராம்.

இவர்கள் சேர்ந்திருக்கும் கட்சி 'டக்' என்று அதிகாரத்துக்கு வந்த கட்சியாம். எஞ்சியிருக்கும் தோழர்களும் விரைவில் சேர்ந்து கொள்ளவிருக்கிறார்கள் என்று 'டக்' 'டக்' என்று செய்திகள் கிளம்பிக் கொண்டிருக்கின்றன.

**

"அரசியல் சாணக்கியம் புரியவில்லை. தமிழைத் தவிர வேறு மொழியும் தெரியவில்லை. கண்ணைக் கட்டிக் காட்டில் விட்ட மாதிரி இருக்கிறது" என்று நெருக்கமானவர்களிடம் கூறிவருகிறார் ஒரு பிரதியமைச்சர்.

பாலஸ்தீனர்கள் தொடர்பான ஒரு கூட்டத்துக்கு இப்பிரதியமைச்சர் வந்திருந்தார். தூதரக ராஜதந்திரி ஒருவர் மரியாதைக்காக இவருடன் பேச்சுக் கொடுத்தார். இவரோ 'வட்'.... 'வட்' என்று இரண்டு மூன்று தடவைகள் கேட்டார்.

ராஜதந்திரி நிலைமையைப் புரிந்து கொண்டு அமைதியாகத் தனது ஆசனத்தில் போய் அமர்ந்து கொண்டாராம்.

இந்தப் பிரதியமைச்சர் மாவட்டப் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டக் கூட்டத்துக்கு மொழி தெரியாத காரணத்தினால் தனது அந்தரங்கச் செயலாளரையும் அழைத்துச் செல்ல முயன்றார். அதற்குக் கூட்டத் தலைவரானவர் கடுமையான எதிர்ப்புத் தெரிவித்து அந்தரங்கச் செயலாளரை உள்ளே விடக் கண்டிப்பாக மறுத்துவிட்டார். தலைவருக்கு என்ன கோபம் வந்ததோ, உரத்த தொனியில் உறைக்கப் பேசினார். இன்னும் அது அந்தக் கட்டிடத்தினுள் எதிரொலிக்கிறது.

**

பழந்தமிழ்க் கட்சி ஒன்றில் பெரும் பதவியில் இருந்தும் கூடச் சம்பந்தா சம்பந்தம் இல்லாமல் பேசிப் பல சந்தர்ப்பங்களில் மாட்டிக் கொண்டு முழிக்கும் ஒருவர் 'புதுக் கரடி' ஒன்றை உலாவ விட்டிருக்கிறார்.

அடிக்கடி போய் அயலகத்தோடு நெருக்கமாயிருக்கும் அவர் ஒஸ்லோ அல்லது லண்டன் பேச்சுவார்த்தைகளில் ஏதோ ஒரு வகையில் தாமும் பங்கு பற்றப்போவதாக முக்கியமான சிலரிடம் கூறியிருக்கிறாராம். ஆசைக்கு அளவேது என்று பலரும் சொல்லிச் சிரிக்கிறார்கள்.

**

டம்மியாக இருந்த வாத்தியார் உண்மையான எம்.பியாகி விட்டார். அவர் காலை வாரிவிட்டு விட்டாரே என்று மலையகத்து அணிக்குள் ஒரே கசமுசா. மக்கள் மத்தியிலும் பேச்சு அடிபடத் தொடங்கி விட்டது.

எவராலும் தம்மை அசைக்க முடியாது என்று "ஸ்ட்ராங்"காக இருந்த வாத்தி இப்போது சற்று அசைந்து விட்டார்.

மத்தியில் இல்லாவிட்டால் மாகாணத்திலாவது பதவியில் இருந்தால் சரி என்ற நிலைக்கு வந்துவிட்டாராம். காய் எப்படி நகர்த்தப்பட இருக்கிறது என்பதைப் பலரும் உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டு இருக்கிறார்கள்.

**

பச்சைக் கட்சி லீடர் வீதியில் இறங்கித் தீவிரமாகப் போராடுவது என்று கடுமையாக உழைக்கிறார். சுண்டியில் நடந்தது மாதிரிக் கூட்டம் குறையாமல் பார்த்துக் கொள்ளக் கூடும் நிபந்தனைகளை விதித்துள்ளாராம்.

'ஒவ்வொரு எம்.பியும் வீதிப் போராட்டத்துக்கெனத் தயார் நிலையில் நூறுபேரை வைத்திருக்க வேண்டும்' என்று கடுமையாக அறிவிக்கப்பட் டிருக்கிறது.

ஒவ்வொரு எம்.பியும் ஆமிக்கு 100 பேரை தரும்படி பாதுகாப்பானவர் கேட்டார். இவரோ வீதியில் வெயிலில் காய்ந்து தொண்டை வரளக் கத்த 100 பேரைக் கேட்கிறார் என்றும் இங்கும் கிண்டலோ கிண்டல்!

## மகாராஜா நிறுவன புதிய இயக்குநர்

மகாராஜா நிறுவனத்தின் இயக்குநராக இருக்கும் ஸ்ரீ சேனாத் கப்பு கொட்டுவ இம்மாத இறுதியிலிருந்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராகப் பதவி யேற்கிறார். கடும் உழைப்பாளியும் நேர்மையாளரும் இளமைத் துடிப்புள்ளவருமான திரு கப்பு கொட்டுவவின் இடத்துக்கு இன்னொருவரை நியமிப்பது மிகவும் கஷ்டமான காரியம் என்று மகாராஜா நிறுவனம் அறிவித்துள்ளது.

இதே வேளை, டிசம்பர் 14 ஆம் திகதி முதல் திரு கபில விஜே குணவர்த்தன மகாராஜா நிறுவனத்தின் மத்திய இயக்குநர் சபைக்கு ஒரு குறுப் இயக்குநராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நிறுவனத்தின் ஷயின்டைம் வர்த்தகப் பிரிவின் இயக்குநராக இருந்த விஜே குணவர்தன 1997 ஆம் ஆண்டு நிகழ்ந்த மகாராஜா நிறுவன வருடாந்த மகாநாட்டில் ஆண்டின் சிறந்த நிறைவேற்று அதிகாரி விருது பெற்றவராவார்.

## சக்தியின் ஆண்டு விழாவில் சங்கர் மகாதேவன் - அனுராதா

சக்தி வானொலி, சக்தி தொலைக்காட்சி நிறுவனங்களின் இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு மகாராஜா நிறுவனம் எதிர்வரும் 26 ஆம் திகதி சுகததாஸ உள்ளரங்கில் மாபெரும் இசை நிகழ்ச்சியை நடத்துகிறது.

பிரபல இந்தியப் பாடகர் சங்கர் மகாதேவன் கலந்து சிறப்பிக்கவுள்ளார். இவருடன் பாடகி அனுராதா ஸ்ரீராம் மற்றும் பிரபல ட்ரம்ஸ் வாத்தியக் கலைஞர் ஆனந்தன் சிவமணி ஆகியோர் கலந்து கொள்கிறார்கள்.



தமிழில் சங்கமம் படத்தில் ஏ.ஆர். ரகுமானின் இசையமைப்பில் "வராக நதிக்கரையோரம்...." பாடல் மூலம் அறிமுகமாகியவர் சங்கர் மகாதேவன்.

இவர் இந்தி, மராத்தி, குஜராத்தி, வங்காளி, ஒரிசா, அசாம் மலையாளம், கன்னடம், தெலுங்கு ஆகிய மொழிகளில் 500 பாடல்களுக்கு மேல் பாடியுள்ளார்.

மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

## நாம் கேட்பது சம உரிமை; மறுக்கப்பட்டால் பிரிவினைதான்

# தமிழரை மட்டும் தண்டிக்கவா இந்த அவசரகாலச் சட்டம்?

### சபையில் தமிழ்க் காங்கிரஸ் எம்.பி. விநாயகமூர்த்தி வீர முழக்கம்

**படுகொலை செய்யப்பட்ட மாமனிதர் குமார் பொன்னம்பலத்துக்கு நாடாளுமன்றத்தில் பேசும் வாய்ப்புக் கிடைக்கவில்லை.**

**அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி தமது தலைவர் குமார் பொன்னம்பலத்தின் குரலாக நாடாளுமன்றத்தில் ஒலித்தார்.**

**சிங்களவர்கள் அனுபவிக்கும் எல்லா உரிமைகளும் எமக்கும் வேண்டும். சம உரிமை கோருகிறோம். மறுக்கப்பட்டால் பிரிவினைதான். வேறு வழியில்லை. இப்படி அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் யாழ். மாவட்ட எம்.பி.யுமான அப்பாத்துரை விநாயகமூர்த்தி நாடாளுமன்றத்தில் முழங்கினார்.**

**பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், அவசர காலச் சட்டம் போன்ற கொடிய சட்டங்கள் பாரபட்சமான முறையில் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. ஏன் அப்படி என்று விநாயமூர்த்தி கேள்வி எழுப்பினார். அந்தச் சட்டங்களைச் சட்டப் புத்தகத்திலிருந்து நீக்க வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்தார்.**

**சமாதானப் பேச்சுவார்த்தை, பயங்கரவாதம், பொலிஸ் பதிவு, யாழ் பிரயாண அனுமதி, கைதுகள், அகதி வாழ்வு தொடர்பாகவும் விநாயகமூர்த்தி விளக்கமாகப் பேசி முறைகேடுகளைச் சுட்டிக்காட்டி நிவாரணம் கோரினார்.**

**கடந்த 06ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன விவாதத்தில் விநாயகமூர்த்தி கலந்துகொண்டு பேசினார்.**

**அவரது உரை இங்கே விரிவாகப் பிரசுரிக்கப்படுகிறது.**

ஜனாதிபதி இங்கு ஆற்றிய கொள்கைப் பிரகடன உரை தமிழ் சமூகத்தைப் பொறுத்தவரையில் ஏமாற்றம் தருவதாகவே அமைந்திருக்கின்றது. நோர்வே விசேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் வன்னியில் வேலுப்பிள்ளை பிரபாகரனைச் சந்தித்த பொழுது பிரபாகரன் தெரிவித்த கருத்துக்களுக்கு ஜனாதிபதியினுடைய சாதகமான பதிலையே நாம் எதிர்பார்த்திருந்தோம்.

பிரபாகரன் தான் அரசாங்கத்துடன் பேசுவதற்குத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தார், அதற்கு நிபந்தனை எதனையும் விதிக்கவில்லை.

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையில் எல்.ரீ.ரீ.ஈ. நிபந்தனைகளை விதித்திருந்ததாகக் கூறினார். அதில் எந்தவிதமான உண்மையும் இல்லை.

பிரபாகரன் தனது உரையில் அமைதிக்கான பேச்சுவார்த்தைக்கு நாங்கள் எதுவித முன் நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. அமைதிக்கான பேச்சுவார்த்தைக்கு ஏற்ற சாதாரணமான உகந்த ஒரு சூழலையையே வலியுறுத்துகின்றோம் என்றார்.

அவர் மேலும் 'சாதாரண பொதுமக்களின் வாழ்க்கை வழமை நிலைக்குக் கொண்டுவரப்பட வேண்டும்' என்பதை முன் நிபந்தனையாகத் தவறாக வியாக்கியானப் படுத்தக் கூடாது என்றும் கூறியிருந்தார்.

என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்திற்கான பொருட்கள் மீதான தடையை நீக்குவது என்பதோடு மட்டுமல்லாது பல்வேறு சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டு வாடி நிற்கும் அரசியல் கைதிகளை விடுதலை செய்யவும் வேண்டும்.

இந்தக் கைதிகளுக்கு எதிராக இருக்கக்கூடிய ஒரேயொரு சாட்சியம் அவர்களிடமிருந்து வலிந்தெடுக்கப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் மட்டுமே.

இவர்களில் பலர் ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகச் சிறைகளில் இருக்கின்றார்கள்.

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தனது நிலை என்ன என்பதை அரசு தெட்டத் தெளிவாகக் கூற வேண்டும்.

## தேர்தல்

உண்மையில் அரசாங்கம் பேச்சுவார்த்தையில் அக்கறை கொண்டிருக்கவில்லையா என்பதை அறிய ஆவலாக உள்ளேன்.

யுத்தத்தை நிறுத்திப் பேச்சுவார்த்தைக்கான உகந்த சூழலையை ஏற்படுத்தி மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் விடுதலைப் புலிகளோடு பேசுமாறு தமிழ்ச் சமூகத்தின் சார்பில் நான் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறேன்.

பொதுஜன ஐக்கிய முன்னணி அக்டோபர் மாதம் 10ஆம் திகதி பொதுத் தேர்தலில் மீண்டும் அதிகாரத்திற்கு வந்திருப்பது ஒரு குறிப்பிடத்தக்க அபிவிருத்தி என்று ஜனாதிபதி குறிப்பிட்டிருந்தார். அது சரியா?.



விநாயகமூர்த்தி நெஞ்சில் : குமார்

பொதுத்தேர்தல் பெருமளவிலான ஆள்மாறாட்டங்கள், கள்ள வாக்குகள் மற்றும் தேர்தல் வன்முறைகளுக்கு மத்தியில்தான் இடம் பெற்றது.

தேர்தல் சட்டங்கள் தேர்தல் ஆணையாளருக்கு அதிக அதிகாரத்தை கொடுக்கும் வகையிலும் அடையாள அட்டையை அறிமுகப்படுத்தும் வகையிலும் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

வாக்காளர்கள் தமது அடையாளத்தை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும். இந்த ஒரேயொரு வகையில் மட்டும்தான் நாங்கள் ஒரு நியாயமான நீதியான ஆள்மாறாட்டம் இடம்பெறாத ஒரு தேர்தலை எதிர்பார்க்க முடியும்.

## இருண்ட காலம்

ஜனாதிபதி தனது கடந்த ஆறாண்டு கால ஆட்சியில்தான் மக்கள் பயமின்றி வாழ்ந்தார்கள் என்று தனதுரையில் கூறியிருந்தார். இதுவும் தமிழினத்தைப் பொறுத்தவரையில் ஒரு செம்மையான கூற்று அல்ல.

தமிழ் மக்களுடைய வரலாற்றில் அம்மையார் அவர்களுடைய கடந்த ஆறாண்டுகால ஆட்சிதான் இருண்ட காலமாகும்.

இந்த காலப் பகுதியில் ஏறத்தாழ 24 ஆயிரம் தமிழர்கள் தமது சொந்த வீடுகளில் மீள் குடியமர அனுமதிக்கப்படவில்லை.

இந்த ஆறாண்டு காலப் பகுதியில்தான் இதுகாறும் தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பாக இருந்த யாழ்ப்பாணம் பாதுகாப்பற்ற பிரதேசமாக்கப்பட்டது.

வடக்கில் 51 கிராம சேவகர் பிரிவுகள் அதி பாதுகாப்பு வலயங்களாக பிரகடனப்படுத்தப்பட்டன.

இதில் மேலும் கவலைக்குரிய விடயம் யாதெனில் ஒரு இராணுவ அதிகாரி அண்மையில் இந்தப் பகுதியில் தமிழ் மக்கள் மீள் குடியமர அனுமதிக்கப்படுவதற்கு ஒரு அமைதிக்கான ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதில் இருந்து மேலும் 25 ஆண்டுகாலம் பொறுத்திருக்க நேரிடும் என்று கூறியிருப்பதுதான்.

கடந்த ஆறாண்டு காலப்பகுதியில் 19,000பெண்கள் விதவைகளாக்கப் பட்டிருக்கிறார்கள்.

79,000 வீடுகள் தரை மட்டமாக்கப் பட்டிருக்கின்றன.

1996இல் 600 பேர் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனதாக அறிவிக்கப்பட்டிக்கிறது. இவர்கள் செம்மணி, கிளிநொச்சி இன்னும் மற்றும் பகுதிகளில் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம்.

இன்றும் கூட எழுந்தமானமாகக் கைதுகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன.

கைது செய்யப் பட்டவர்களில் பலர் எங்கு இருக்கிறார்கள் என்று தெரியவில்லை. கடந்த சில நாட்களுக்கு முன் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள கோபாலபுரம் ஏரியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஐந்து பேர் கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

இராணுவம் பல முன்னணிப் பாடசாலைகளில் நிலை கொண்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் தமிழ் மக்கள் இராணுவத்தினரின் இம்சைக்கு உள்ளாகி வருகின்றார்கள்.

ஊரெழு இராணுவ முகாம் ஒரு சித்திரவதைக் கூடமாக இருந்து வருகிறது. இங்கு பல அப்பாவித் தமிழ் மக்கள் சித்திரவதைக்கு உட்படுத்தப்படுகின்றார்கள்.

## பிரிவினை

ஜனாதிபதி தனது கொள்கைப் பிரகடன உரையிலே பிரிவினை பற்றிக் குறிப்பிட் டிருக்கிறார்.

பிரிவினை எனப்படுவது பிரபாகரனினது மூளையில் உதித்ததோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியின் 1977 வட்டுக்கோட்டை மாநாட்டுத் தீர்மானத்தில் உருவான கருவோ அல்ல.

1956ஆம் ஆண்டு முன்னாள் பிரதமர் எஸ்.டபிள்யு.ஆர்.டி பண்டாரநாயக்கா கொண்டு வந்த சிங்களம் மட்டும் அரச கரும மொழிச் சட்டம்தான் பிரிவினைக்கு அத்திவாரமிட்டது. இந்தச் சட்டவரைவு விவாதத்தில் எமது தலைவர் அமரர் ஜி.ஜி.பொன்னம்பலம் (கியூசி) நாடாளுமன்றத்தில் பேசும்போது இந்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்படுமானால் நாம் எமது பாதைகளில் பிரிந்து செல்ல நேரிடும் என்று குறிப்பிட்டிருந்தார்.

கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா அந்தச் சந்தர்ப்பத்தில், "ஒரு மொழி, இரு தேசம், இரு மொழி ஒரு தேசம்" என்று குறிப்பிட்டிருந்தார்.

எத்தனை தீர்க்கதரிசனமான கருத்துக்கள் அவை.

இந்தச் சட்டம் வருவதற்கு முன்னர் யாழ்ப்பாணத்தின் முன்னணிப் பாடசாலைகளில் சிங்களம் ஒரு பாடமாகப் பௌத்த பிக்குமாரால் போதிக்கப்பட்டு வந்தது. நாங்கள் இந்தச் சட்டத்தின் பின் சிங்களம் படிப்பதை நிறுத்திவிட்டோம்.

இந்தச் சட்டம் தமிழ் பேசும் மக்களை இந்த நாட்டில் இரண்டாம் தரப் பிரஜைகளாக்கியுள்ளது. தமிழர்கள் வெறுமனே நடைப் பிணங்களாக நடத்தப்பட்டு வருகின்றார்கள்.

## இரண்டாம்தரப் பிரஜைகள்

நாங்கள் இன்னமும் நடைப் பிணங்களாக இரண்டாம் தரப் பிரஜைகளாக நடத்தப்படுவதை அனுமதிக்கத் தயாரில்லை.

நாங்கள் சமமானவர்களாக நடத்தப்படவில்லை என்றால் அல்லது சிங்கள சகோதரர்கள் அனுபவிக்கும் அதே உரிமைகள், சலுகைகள், எமக்கு மறுக்கப்பட்டால் பிரிவினையைத் தவிர வேறு வழியில்லை.

நாங்கள் கேட்பதெல்லாம் இந்த நாட்டினது பிரஜைகள் என்ற வகையில் சிங்கள சகோதரர்கள் அனுபவிக்கும் உரிமைகள், சலுகைகள் எமக்கும் கிடைக்க வேண்டும் என்பதுதான். அதைவிட மேலதிகமாக எதையும் நாம் கேட்கவில்லை.

## பயங்கரவாதம்

ஜனாதிபதி தனது உரையில் பயங்கரவாதத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கை பற்றியும் குறிப்பிட்டிருந்தார். 1970இன் ஆரம்ப காலங்களில் கருணையற்ற அதிகார அடக்குமுறையாளர்கள் இராணுவ ஆக்கிரமிப்பிலும் அடக்கு முறையிலும் நம்பிக்கை கொண்ட பொழுது தமிழ் மக்கள் அமைதியான வழிமுறைகள் பயனளிக்காமல் வீண்போனதை உணர்ந்தார்கள். ஆயுதமேந்திய இயக்கங்கள் உருவாவதற்கான ஏற்ற சூழல் அப்போது உருவானது.

அந்தக் கால கட்டத்தில்தான் பயங்கரவாதத்திலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் மாற்று வழியாக தமிழ் இளைஞர்கள் விடுதலை இயக்கங்களை அமைக்கத் தொடங்கினர்.

1956, 1958,1977 மற்றும் 1983 காலப் பிரிவுகளில் இடம்பெற்ற திட்டமிட்ட இனக்கலவரங்கள்தான் தமிழ் மக்களின் இறுதிப் பாதுகாப்பு நடவடிக்கையாகத் தமிழ் இளைஞர்களை ஆயுதம் ஏந்தும் நிலைக்குத் தள்ளியது.

மேலும் பல்கலைக்கழக அனுமதிக்கான தரப்படுத்தல் தமிழ் இளைஞர்களைப் பொறுத்தவரையில் ஒரு இறுதிக் கட்ட சோதனையாக அமைந்தது.

## அரச பயங்கரவாதம்

பயங்கரவாதம் என்றால் என்ன?

தமிழ் மக்கள் தமது இழந்த உரிமைகளைப் பெறுவதற்காக மேற்கொண்ட ஜனநாயக வழிமுறைகள் தோல்வி கண்டபின் உரிமைப் போராட்டம் நடத்துவது பயங்கரவாதமா?

அல்லது றிச்சட் டி சொய்சா, விஜயகுமாரதுங்க, சட்டண ஆசிரியர் ரோகண குமார, தினமுரசு ஆசிரியர் ரமேஷ் அற்புதராஜா நடராஜா, எங்கள் தலைவர் குமார் பொன்னம்பலம், பி.பி.சி. நிருபர் நிமலராஜன் போன்றவர்களுடைய கொலை பயங்கரவாதமா?


அல்லது கிருஷாந்தி, கோணேஸ்வரி, சாரதாம்பாள், மற்றும் பலர் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டதும் இன்னும் பல தமிழர்கள் செம்மணி சதுப்பு நிலங்களில் புதைக்கப்பட்டதும் பயங்கரவாதமா?

இரண்டு கிழமைக்கு முன் ஒரு 50 வயதுப் பெண்மணி ஞானாம்பிகை ராஜசேகரன் பருத்தித்துறையில் கற்பழிக்கப்பட்டு எரிக்கப்பட்டிருக்கிறார்.

இப்படியான அரச பயங்கரவாதங்கள் நியாயப்படுத்தப்பட முடியும் என்றால், நான் நினைக்கிறேன், விடுதலைப் போராட்ட இயக்கத்தின் செயற்பாட்டில்

*(தொடர்ச்சி 20ஆம் பக்கம்)*

# சாயி பாபா மீது அவதூறு அசிங்கமான குற்றச்சாட்டு



உலகெங்கும் கோடிக்கணக்கான பக்தர்களைக் கொண்டவர் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா. அவருக்கு இந்தியாவிலும் இலங்கையிலும் மட்டும் சுமார் மூன்று கோடி பக்தர்கள் இருக்கிறார்கள். அவருடைய ஆத்மீக, கல்வி, மருத்துவ, சமூக சேவைகள் ஈடு இணையற்றவை என்று எல்லோரும் ஒப்புக் கொள்கிறார்கள்.

அப்படிப்பட்ட ஒருவர் அவதூறு செய்யப்பட்டிருக்கிறார்.

அவர் மீது அசிங்கமான குற்றச் சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன.

சொல்ல வாய் கூசும். எழுதக் கை வராது. அத்தகைய கேவலமான சிற்றின்பச் சாக்கடைச் சேற்றில் பாபா இறங்கினார் என்று அவர் மீது அபாண்டப்பழி சுமத்தப்பட்டிருக்கிறது.

அவர் என்ன செய்தார், எப்படிச் செய்தார் என்றெல்லாம் எவர் எவரோ சொன்னதை இந்தியாவின் பிரபல சஞ்சிகைகளில் ஒன்றான ''இந்தியா டுடே'' கடந்த 6ஆம் திகதி (6.12.2000) இதழில் அட்டைப்படச் செய்தியாக வெளியிட்டிருக்கிறது.

சஞ்சிகைக்குத் தகவல் கொடுத்தவர்கள் தமக்கும் சத்ய சாயிபாபாவுக்கும் இடையில் என்ன என்ன எல்லாம், எப்படி எப்படி நடந்தன என்று கூறினார்களோ அவை எல்லாம் சஞ்சிகையில் பச்சையாக எதுவித லஜ்ஜையுமின்றி வெளியிடப்பட்டுள்ளன.

சஞ்சிகைக்குத் தகவல் கொடுத்தவர்களில் பலர் வெளிநாட்டுக் காரர்கள். அவர்களில் எவரும் இந்தியாவில் இப்போது இல்லை.

எல்லோரும் சஞ்சிகைக்குத் தகவல் கொடுத்தார்களே தவிர அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்யவும் இல்லை. நீதி மன்றம் செல்லவும் இல்லை.

ஒருவர் மட்டும் தாம் இருக்கும் இடத்தில் பப்ளிக் புரசிக் கியூட்டரிடம் புகார் செய்திருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறார்.

மொத்தத்தில் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளுடன் சட்ட நடவடிக்கைக்குச் செல்வதில் பயனில்லை என்ற காரணத்தாலேயே எல்லோரும் ''இந்தியா டுடே'' சஞ்சிகைக்குக் குசுகுசுத்ததோடு நின்று விட்டார்கள்.

அதை வெறும் கிசு கிசுவாக எடுத்துக் கொண்டிருந்தால் மஞ்சள் பத்திரிகை லெவலுக்கு அந்தப் பிரபல சஞ்சிகை இறங்கவேண்டி வந்திருக்காது. பல ஆண்டுகாலமாகக் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பெருமைக்குப் பங்கம் ஏற்படாமல் காப்பாற்றியிருக்கலாம்.

அது போகட்டும். குற்றச்சாட்டுகள் எவ்வளவு அசிங்கமானவை என்று பாருங்கள்.

குற்றம் சாட்டுவோர்—

1. ஜெஃப் யங் — அமெரிக்காவின் தென் மத்திய பகுதியில் சாயிபாபா ஆர்கனை சேஷனின் தலைவராக இருந்தவர். தன்னுடைய மகன் 16 வயதினராக இருந்த 1977 முதல் 1999 வரை அவரை பாபா பாலியல் பலாத்காரம் செய்தார் என்கிறார். எப்படி என்றும் வர்ணிக்கிறார்.
2. டேவிட் பெய்லி — பிரிட்டிஷ்காரர். முன்னாள் சாயி பக்தர். இன்டர்நெட்டில் தற்போது சுற்றிவரும் 'த ஃபைண்டிங்ஸ்' என்ற ஆவணத்தில் பாபா தன் முன்னாள் பக்தர்களிடம் பாலியல், அட்டூழியங்கள் செய்ததாகக் குறிப்பிட்டிருக்கிறார்.
3. ஹரி சம்பத் — சிக்காகோவில் சாஃப்ட் வேர் என்ஜினியர். பாபா ஆசிரமத்தின் உள்பாதுகாப்பு உறுப்பினராக 1992 முதல் 1995 வரை தொண்டு ஆற்றியவர். பாபாவின் லீலைகள் பற்றித் தாம் கேள்விப்பட்டவை குறித்து விசாரித்து உண்மை என்று கண்டு கொண்டதால் அவற்றை வெளியிடமுடிவு செய்ததாகக் கூறுகிறார்.
4. ஜென்ஸ் சேத்தி — ஜெர்மனியின், மியூனிச் நகரவாசி. 10 ஆண்டுகள் சாயி பக்தர். தன்னை பாபா பாலியல் பலாத்காரம் செய்ததாகப் பப்ளிக் புரசிக் கியூட்டரிடம் புகார் பதிந்திருக்கிறார்.
5. கெய்த் ஓர்ட் — ஸ்பெயினில் வாழும் முன்னாள் பக்தர். தரிசனத்தின் போது பாபா தம்முடன் பாலியல் சேஷ்டையில் ஈடுபட்டார் என்று புகார்.
6. கிருஷ்ணகுமார் — தற்போது சிங்கப்பூரில் வேலை செய்பவர். தன் வகுப்புத் தோழர்களில் நான்கு பேருடன் பாபா பாலியல் ரீதியாக எப்படி நடந்து கொண்டார் என்று விவரிக்கிறார்.
7. ஜெட் கேயெஹார்ன் — அமெரிக்கர். தன்னைப் 16 வயதில் பாபா பாலியல் பலாத்காரம் செய்தார் என்கிறார்.
8. ஹன்ஸ்டி க்ரேகர் — 5 ஆண்டுகள் பாபாவின் தீவிர பக்தன். நவம்பர் 12 தேதியிட்ட ''த சன்டே ஏஜ்'' என்ற பத்திரிகையில் பாபாமீது செக்ஸ் குற்றம் சுமத்தியிருக்கிறார்.
9. கானி லார்சான் — சுவீடன் நாட்டவர். 21 வருடங்களாகப் பாபா பக்தர். பாபா பலமுறை தம்முடன் பாலியல் தொடர்பு கொண்டதாக அக்டோபர் 20 இல் வெளியான லண்டன் ''த டெய்லி டெலிகிராப்'' நாளிதழில் எழுதியுள்ளார்

படிப்பவர்கள் மனதில் கிளர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் இந்த விவரங்களை எல்லாம் ''இந்தியா டுடே'' விஸ்தாரமாகப் பிரசுரித்திருக்கிறது.

''பாபாவுக்கு எதிராகச் செக்ஸ் குற்றம் சுமத்தும் முன்னாள் பக்தர்களின் எண்ணிக்கை அதிகமாகிறது'' என்றும் ''இந்தியா டுடே'' குறிப்பிட்டிருக்கிறது.

புனிதர்கள் என்றாலும் மனிதர்கள் அவர்களைச் சும்மாவிடுவதில்லை. அவர்களைச் சீண்டிப் பார்ப்பதும் அவர்கள் மீது வீண்பழி சுமத்துவதும் பழங்காலம் தொட்டே வழக்கமாகிவிட்டது. அதனால் பெரியவர்களும் விவேகம் உள்ளவர்களும் இதனை பொருட்படுத்துவதில்லை.

## அவதாரம்

*சாயிபாபா மற்றவர்களைப்போல மனிதராக இந்த உலகத்துக்கு வந்தாரா அல்லது கடவுளின் அவதாரமாக வந்தாரா?*

*இதை ஒருமுறை ஒரு பக்தர் சாயிபாபா விடமே கேட்டு விட்டார்.*

*அப்போது சாயிபாபா தனது அருகில் இருந்த தாயாரிடம் அவருக்கு நடந்ததைச் சொல்லுமாறு கேட்டுக் கொண்டார்.*



சாயிபாபாவின் இளமைத் தோற்றம்

*தாயார் ஈஸ்வராம்பாள் தமது மாமியார் தமக்குக் கூறியதை எடுத்துரைத்தார்.*

*மாமியார் தனது மருமகனான ஈஸ்வராம் பாளிடம் சொன்னது இதுதான்:*

*''பகவான் சத்ய நாராயணன் என் கனவில் வந்ததால், உனக்கு எது நேர்ந்தாலும் பயப்படக் கூடாது''*

*இதைச் சொன்ன அன்றைய தினம் காலையிலேயே, கிணற்றில் நீர் இறைக்கும் போது நீலநிற ஒளிப்பந்து ஒன்று தன்னுள் கலந்ததையும் தான் மூர்ச்சை அடைந்ததையும் ஈஸ்வராம்பாள் விவரித்தார்.*

*பரந்தாமன் நாராயணன் கருணைத் திருவுளம் கொண்டு சத்ய சாயிபாபாவாக மனித உருவெடுத்து அவதரிக்கத் தேர்ந்தெடுத்த தாய் ஈஸ்வராம்பாள்.*



புட்டபர்த்தி பிரசாந்தி நிலையம்

நல்லூர் [illegible] நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

# தூஷணைகள் பச்சையாக இந்திய சஞ்சிகையில் பிரசுரம்

பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவின் 75 ஆவது பிறந்த நாள் கொண்டாட்ட நாட்களோடுதான் அவர் மீதான அவதூறுகளும் அசிங்கமான குற்றச்சாட்டுகளும் "இந்திய டுடே" சஞ்சிகையில் வெளிவந்துள்ளன. அதுவும் பச்சைத் தூஷண விவரணங்களுடன்.

நல்ல வேளை சாயி பக்தர்கள் பக்குவப்பட்டவர்கள். அப்படியில்லாவிட்டால் என்ன நடக்குமோ சொல்ல முடியாது.

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் 75 ஆவது பிறந்தநாள் விழாவையொட்டி பிரசாந்தி நிலையத்தில் 10 நாட்கள் நிகழச்சிகள் நடந்தன.

நிகழ்ச்சிகளின் ஓர் அம்சமாகக் கிராமத்தில் உள்ள மக்களுக்கு இலவசமாக வேட்டி, சேலை, உணவு, இனிப்பு வகைகள் வழங்கப்பட்டன.


பூர்ண சந்திரா அரங்கில் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா நடந்தது.

விழாவிற்கு இந்தியாவின் பல்வேறு மாநிலங்களில் இருந்தும் 165 உலக நாடுகளிலிருந்தும் பக்தர்கள் வந்திருந்தனர்.

எல்லோருக்கும் உணவு வழங்குதல், தங்குமிட வசதி அளித்தல் எல்லாம் ஒரு குறையுமின்றிக் கச்சிதமாக நடந்தன.

இந்தப் பணிகளில் 60 ஆயிரம் சாயி சமித்திகளிலிருந்து வந்த 40 ஆயிரம் தொண்டர்கள் சுறுசுறுப்பாக ஈடுபட்டிருந்தனர்.

பிறந்ததின விழா இறுதி நிகழ்ச்சிகள் புட்ட பர்த்தியில் உள்ள ஸ்ரீ சத்யசாயி ஹில் வியூ அரங்கில் கடந்த மாதம் 23ஆம் திகதி நடை பெற்றன. 30 ஆயிரம் பேர் அமரக் கூடிய பெரிய அரங்கு அது. அரங்கு நிறைந்து வழிந்தது. புல் வெளியிலும் சுமார் 70 ஆயிரம் பக்தர்கள் அமர்ந்து கொண்டனர். வெளியேயும் ஒரு லட்சத்துக்கு மேலானோர் கூடி நின்றனர்.



மேடை நன்கு அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இறக்கைகளுடனான தேவதைகள். நடுவில் உலகின் முக்கிய மதங்களின் குறியீடுகள்.

தலைமை விருந்தினராக வந்திருந்த அமைச்சர் முரளி மனோகர் ஜோஷி மேடையில் அமர்ந் திருந்தார். அவருக்கு அருகே பகவான் சாயி பாபா அமர்வதற்கான வெள்ளிச்சிம்மாசனம் இருந்தது.

அதிகாலை நான்கு மணிக்கு பக்தர்கள் கூடத் தொடங்கினார்கள்.

சரியாக ஏழு மணிக்கு ஒரு நிமிஷம் இருக்க அலங்கரிக்கப்பட்ட யானை வந்தது. பின்னால் பாண்ட் வாத்தியக் கோஷ்டி. அதற்குப்பின் நடனமாடிக் கொண்டு குழந்தைகள். கடைசியில் தங்க – வெள்ளித் தேரில் சத்யசாயி பாபா வந்தார்.

உடனே சாயிபாபா படம் வரையப்பட்ட பலூன்கள் பறக்க விட்டப்பட்டன.

வாண வேடிக்கைகள் இடம் பெற்றன.

21 பீரங்கிக் குண்டுகள் முழங்க அணி வகுப்பு மரியாதை ஆரம்பமானது.

சீனா, சவூதி அரேபியா, சேமன் தீவுகள், நவ்ரு, ஆஸ்திரேலியா உட்பட 165 நாடுகளைச் சேர்ந்த பக்தர்கள் கொடி ஏந்தி வந்து சாயி பாபா முன்நின்று வணங்கினார்கள்.

பின்னர் பிறந்தநாள் வாழ்த்துத் துவங்கியது. பல இன மக்கள் அடங்கிய குழு "ஹேப்பி பேர்த்டே டுயூ" ராகத்தில் கானம் இசைத்தது.

விழாவின் நிறைவு நிகழ்ச்சியாகச் சாயிபாபா 90 நிமிஷங்கள் தெலுங்கில் உரை நிகழ்த்தினார். உரை பக்தி சிரத்தையுடன் மொழி பெயர்க்கப்பட்டது.

உரையின் கருப்பொருள் இதுதான்:—

இந்த பகவானுக்குச் சொந்தம் பந்தம் இல்லை. அன்பு ஒன்று மட்டுமே சொந்தமானது. உங்களுக்கு பகவான் அதையே கொடுக்கிறார். நீங்களும் அந்த அன்பையே பகவானுக்குத் தந்தால் போதும். இப்படி எல்லாம் விழா கொண்டாடுகிறீர்கள். பகவான் ஏற்றுக் கொண்டு மகிழ்கிறார். உங்கள் அனைவரின் சந்தோஷம்தான் பகவானின் சந்தோஷம். நீங்கள் அனைவரும் சந்தோஷமாக இருக்கவேண்டும் என்பதே பகவானின் எதிர்பார்ப்பு. இப்படி பாபா கூறினார்.

பாபாவின் உரையோடு விழா நிறைவெய்தியதும் 100 ஏக்கர் நிலப்பரப்பில் விரிந்து கிடக்கும் பிரசாந்தி நிலையத்தில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

## சாயி சேவைகள்

சாயிபாபா 1926ஆம் ஆண்டு நவம்பர் 23ஆம் திகதி ஆந்திரப் பிரதேசத்தில் கிராமவாசிகளான பெட்ட வெங்கடராஜு ஈஸ்வராம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தவர். அப்போது அவருடைய பெயர் சத்யநாராயணராஜு


கருவிலேயே திருவுடையராதலால் சிறு வயதிலேயே வித்தியாசமானவராகக் காணப்பட்டார்.

1918இல் சீரடி சாயிபாபாவின் மறுபிறப்பு தாம் என்று சத்யநாராயணன் (தனது 14 ஆவது வயதில்) அறிவித்து விட்டு மக்கள் சேவைக்கு வீட்டை விட்டுக் கிளம்பினார். சத்யசாயிபாபா ஆனார்.

1948 – 50 பகுதிகளில் புட்டபர்த்தியில் பிரசாந்தி நிலையத்தை நிறுவினார். அதையடுத்து அவரது ஆத்மீக கல்வி, மருத்துவ, சமூகப் பணிகள் ஆரம்பமாகின.

புட்டபர்த்தி அமைந்துள்ள அனந்தபூர் மாவட்டம் மிகவும் வரட்சியானது. அங்குள்ள கிராமங்கள் எல்லாவற்றிற்கும் 24 மணி நேரமும் குடி தண்ணீர் வசதி வழங்கி வருகிறது சத்யசாயி மத்திய டிரஸ்டி. இருதய மருத்துவமனை சூப்பர் ஸ்பெஷாலிட்டி ஆஸ்பத்திரி புட்ட பர்த்தியில் இருக்கிறது. இங்கே அனைவருக்கும் இலவச சிகிச்சைகள்.

மருத்துவக் கல்லூரி
சூப்பர் ஸ்பெஷாலிடி ஆஸ்பத்திரி






பெங்களூர் வைட் பீல்ட்டில் 4 லட்சம் சதுர அடியில் 400 நோயாளிகள் தங்கக் கூடிய 12 அறுவை சிகிச்சை தியேட்டர்கள் கொண்ட மிகப்பெரிய மருத்துவமனை பல கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு இருக்கிறது.

புட்ட பர்த்தியிலும் வைட்பீல்ட்டிலும் இலவச கல்வி அளிக்கும் கல்லூரிகளும் பல்கலைக்கழகமும் உள்ளன.

சைதன்ய ஜோதி மில்லினியம் மியூசியம் அமைக்கப்பட்டுள்ளது.

இன்னும் இப்படி எத்தனையோ.

உலகெங்கும் 2560 சாயி சமித்திகள் இன்று இயங்கி வருகின்றன.

இறை நம்பிக்கை, அன்பு, சத்தியம், சேவை – இவையே இவற்றின் முக்கிய குறிக்கோள்.

## பாபாவின் செய்தி



நான் இந்த உலகிற்கு வந்திருப்பது இன்னுமொரு மதத்தை உருவாக்குவதற்கு அல்ல.

கடவுள் மீதான மனித நம்பிக்கையை வலுப்படுத்தவே.

உண்மையான மக்கள் சேவையே கடவுள் என்பதை உணர்த்தவே.

எனது வாழ்க்கையே உங்களுக்கு நான் தரும் செய்தி.

# சட்டியிலிருந்து அடுப்புக்குள் யாழ் பிரயாணிகளின் நிலை

சமாதானத்தின் அறிகுறிகளால் நம்பிக்கை ஒளி பெற்றுள்ள தமிழர்களின் உள்ளங்கள் போல் வெளிச்சமாக இருந்த தேரடியில் பெரிசுகள் வந்தமர்ந்து பேச்சைத் தொடங்கினார்கள்.

"யாழ். தொழில்நுட்பக்கல்லூரி மாணவர்கள் சளைக்காமல் போராட்டம் நடத்திக் கைதாகியிருந்த அவர்களது நண்பனை விடுவித்து விட்டினம்" என்று ஆரம்பித்தார் விநாசியர்.

அதற்கு பரமலிங்கம் மாஸ்டர், "அந்தப் பொடியனிட்டை சந்தேகப்படும் படியா இருந்த பொருள்களை நீதி மன்றத்திலை சமர்ப்பித்தவையாம்" என்றார்.

"அப்படி என்னதான் கைப்பற்றினவையாம்?" என்று கேட்டான் செக்கியூரிட்டி டானியல்.

"இரண்டு வேலி அடைக்கிற குத்தூசிகள் பொலித்தீன் லஞ்ச் சீற், தண்ணியிறைக்கிற மோட்டருக்கு மின்சார இணைப்புக் கொடுக்கிற வயர் 10 யார், ஒரு ஸ்பேனர், இரண்டு வெற்றுத் தோட்டாக்கள் என்று விவரித்தார் மாஸ்டர். "அந்த மாணவனின் வீட்டுக்குக் கிட்ட கிளைமோர் வெடித்ததாம். அதுக்காக மாணவனைக் கைது செய்தவை பிறகு நிரூபணம் இல்லை" என்று சொல்லி விடுவிச்சினமாம் என்று முடித்தார்.

"ஏதோ மற்ற மாணவர்கள் தங்களுக்கென்ன என்று இல்லாமல் போராடினதாலே அந்தப் பொடியன் விடுதலையானான். இல்லாட்டி...." எல்லோருக்கும் தெரிந்த பதிலைச் சொல்லாது விட்டாள் சின்னாச்சி.

"ஆனால் சில விஷயங்கள் எங்கடை ஆக்களின்ரை பொறுப்பிலை வந்தால் குளறுபடியாகத்தானே நடக்குது" என்று பொடி வைத்தார் விநாசியர்.

"கொழும்பு – யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பொறுப்பை கச்சேரியடிக்கு மாத்தினதைச் சொல்லுறியளோ?" என்று கேட்ட லோகன், மேலும் தொடர்ந்தான்.

"முந்தி மொழிதெரியாமல் அவசரத்தைச் சொல்ல முடியாமல் திணறின மக்கள் பொறுப்பை மாற்றிக் கொடுத்த போது பிரச்சினை தீர்ந்தது என்று சந்தோஷப்பட்டினம். ஆனால் நிலமை சட்டிக்குத் தப்பி அடுப்புக்குள்ள விழுந்த கதையாகிப் போட்டுது" என்று கூறி நிறுத்திய லோகன் மணலில் சாய்ந்து தலைக்குக் கையை முட்டுக் கொடுத்தபடி தொடர்ந்தான்.

"கொஞ்ச நாளைக்கு முந்தி கொழும்பிலை சாகக் கிடக்கிற தகப்பனைப் பார்க்கப் போன குடும்பம் உட்பட 13 பேரின்ரை இடத்தைப் பறிச்சு நாளைய மருத்துவர்களின் கிரிக்கெட் அணிக்கு கொடுத்தவையாம்.

அதுக்குச் சில நாள்கள் கழித்துக் கப்பல் ஏறப் பருத்தித்துறைக்குச் கூட்டிக் கொண்டு போன சனத்திலை 600 பேரைத் திருப்பி அனுப்பிச்சினமாம்.

அதுக்குப்பிறகு கிட்டடியிலை கப்பலுக்கு டிக்கெட் எடுக்க நின்ற சனம் பொறுக்க முடியாமல் அங்கு வந்த பொறுப்பாளரான ராமாயண காலப் படகோட்டிக்கு சேர்ட்டைப் பிடிச்சு தங்கடை கை மொழியிலை கதைச்சுப் போட்டினமாம்.

நிவாரணம் கொடுக்க நீதிமன்றம் தலையிட வேண்டி இருந்தது. போக்குவரத்து நேர்மையாக நடக்க சனம் தலையிட வேண்டியிருக்கு என்று சலித்துக் கொண்டார் மாஸ்டர்.

"வெட்டத் தெரியாதவன் இடுப்பிலை 58 அரிவாளாம்" என்றாள் சின்னாச்சி.

"விரல் இல்லாதவனைச் சுற்றி 1008 வீணைகளாம்" என்றும் சொல்லலாம் என்றான் டானியல்.

புரிந்து கொண்ட அனைவரும் சிரித்தனர்.

பின்னர் டானியலே தொடர்ந்தான், "யாழ்ப்பாணக் கச்சேரி வாசலிலை பிறப்புச் சாட்சிப்பத்திரம், இறப்புச் சாட்சிப்பத்திரம், திருமணப் பதிவுப் பத்திரம் எல்லாம் சொன்ன பெயரிலை உடனை கிடைக்குதாம். கையெழுத்துகள் எல்லாம் போலி என்றே தெரியாதபடி போடப்படுகுதாம்." இதைப் பற்றிச் சொல்ல வேணாம் என்று நினைத்தனான் அதுக்குள்ளை தம்பி சொல்லிப் போட்டுது." என்றார் மாஸ்டர்.

"குறுக்கு வழியை நாடுற எங்கடை ஆக்கள் இதுகளை வாங்கிக்கொண்டு போய் பிரச்சினைகளில் மாட்டுப்படுகினமாம். ஒருத்தர் கச்சேரி வாசலிலை வாங்கின பிறப்புச் சாட்சிப் பத்திரத்தை பாஸ்போர்ட் வாங்கக் கொடுத்தாராம். அங்கை அது போலி என்று கண்டு பிடிச்சதாலை மாட்டுப்பட்டு தப்பி வாறதுக்குள்ளை நொந்து நூலாகிப் போனாராம்". என்று நிறுத்தினார் மாஸ்டர்.

கடலை வியாபாரத்தில் மும்முரமாக இருந்ததால் சின்னாச்சி எதுவும் கூறவில்லை.

அதனால் லோகன், "மானிப்பாயில் சிங்களம் படிப்பிக்கிற ஒருவர் வீட்டுக்கு இடுப்பிலை ஆயுதத்தோட போன இளைஞர் ஒருவர் தன்னை புலி உறுப்பினர் என்று கூறினாராம். இனிமேல் சிங்களம் படிப்பிக்கக் கூடாது. படிப்பித்தால்....... என்று இடுப்பைத் தட்டிக் காட்டினாராம். அதோட சிங்களம் படிக்க வந்திருந்த இரண்டு பேரையும் மிரட்டி விட்டுப் போனாராம்." என்றான்.

ஆனால் இந்தச் சம்பவத்துக்கு வேறு ஒரு காரணம் சொல்லப்படுகிறது.

"மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத் தேர்தலிலை நடந்த முறை கேடுகளை நீதி மன்றத்துக்குப் போய் தடுத்து நிறுத்தியிருந்தாராம் சிங்கள ஆசிரியர். அதுக்கும் மிரட்டலுக்கும் சம்பந்தம் இருக்கும் என்று சந்தேகம் இருக்குதாம்" என்று கூறினான் டானியல்.

"செய்யிறதையும் செய்து போட்டுப் பழியை கடவுள் மேல போடுங்கோ. எல்லாத்துக்கும் கடவுளுக்கு ஒரு நாள் பதில் சொல்லத்தானே வேணும்".

இவ்வாறு சின்னாச்சி வாடிக்கையாளிடம் கூறிக் கொண்டிருந்த வார்த்தைகள் அவருக்கா அல்லது லோகன் கூறிய சம்பவத்துக்கா என்று புரியாமல் போனது.

வெகு நேரம் மற்றவர்கள் கூறுவதைக் கேட்டுக் கொண்டிருந்த விநாசியர் தனது பங்குக்குச் சொல்லத் தொடங்கினார்.

புலோலி, மருதங்கேணி வீதியிலை ஊரடங்கிய நேரம் பச்சை ரீசேர்ட் அணிந்த இருவர் நடக்கேலாத மப்பிலை ஒரு வீட்டை வந்து வீட்டுக்காரனை கூப்பிட்டு விசாரித்துவிட்டு 'பொம்பிளை இருக்கா' என்று கேட்டினமாம், அவரும் ஏதோ சமாளித்து சொல்லி அனுப்பினாராம்.

பிறகு அவை பக்கத்திலை இருந்த வீட்டுக்கு போய் கூப்பிட அங்கை இருந்த தாயும் மகளும் சின்னப்பிள்ளையளும் வெளியிலை வந்திச்சினமாம். சின்னப் பிள்ளையளை உள்ளே போகச் சொல்லிப்போட்டு தாயையும் மகளையும் நிற்கச் சொல்லியிருக்கினமாம்.

நல்ல வேளையாக அந்த நேரம் பார்த்து பெரிய வாகனம் ஒன்று வந்தது. அதிலை இருந்தவை நல்லவை எண்டபடியால் மப்பிலை இருந்தவையை ஏசி ஏத்திக்கொண்டு போயிட்டினமாம். இல்லாட்டி என்ன கொடுமை நடந்திருக்குமோ? என்று கேட்டார் விநாசியர்.

"தட்டிக் கேட்க ஆளில்லை என்றால் தம்பி சண்டப் பிரசண்டன் தான்" இப்படிக்கூறினாள், அதுவரை கதையைக் கேட்டுக் கொண்டிருந்த சின்னாச்சி.

உலக அழகு ராணிப் போட்டிகளிலை இந்திய அழகிகள் அடுத்தடுத்துப் பட்டம் பெற்று சாதனை செய்து போட்டினமாம்" தனக்குப் பிடித்த விஷயத்தை மெல்ல அவிழ்த்தான் லோகன்.

வேகமாகத் தலையாட்டி மறுத்த மாஸ்டர், "எல்லாம் வியாபாரத் தந்திரம் தம்பி" என்றார்.

புரியாமல் அனைவரும் மாஸ்டரைப் பார்க்க அவர் விளக்கினார்.

"இந்தியாவின் ஜனத்தொகை இப்ப 100 கோடிக்குமேல் அதனால வெளிநாட்டு நிறுவனங்கள் தங்கடை பொருள்களை விக்கிற பெரிய சந்தையாக இந்தியா இருக்குது. பெண்களுக்கான அழகு சாதனங்கள், பிரத்தியேகப் பொருட்கள் ஆகியவற்றைத் தயாரிக்கிற உலகநிறுவனங்கள் தங்கடை உற்பத்தியிலை கணிசமான பங்கை இந்தியாவிலை தான் விக்கினமாம். அழகு ராணிப் போட்டிகளை நடத்திறதும் அந்த நிறுவனங்கள் தான். அவைதான் பட்டம் வெல்லும் அழகிகளை மறைமுகமாக தீர்மானிக்கிறதும்." என்று சொல்லி நிறுத்தினார் மாஸ்டர்.

தனது எண்ணக் கனவுகள் கலைவதைப் பொறுக்க முடியாத லோகன் "பொருள்கள் விக்கிறதுக்கும் அழகிகள் வெல்லுவதற்கும் என்ன சம்பந்தம்" என்று கேட்டான்.

அவனின் ஆவலைப் புரிந்து கொண்டு சிரித்த படியே கூறத் தொடங்கினார் மாஸ்டர்.

"இந்தியாவிலை நரசிம்மராவ் ஆட்சியில் தான் வெளிநாட்டுப் பொருள்கள் இந்தியாவிலை தாராளமாக விற்கத் தொடங்கியது. 50 வருடமாக நடந்துவரும் அழகு ராணிப் போட்டிகளில் இந்தியப் பெண்கள் பட்டம் வென்றதும் இதன் பிறகுதான்.

சுஸ்மிதா சென் உலக அழகி ஆனபிறகு இந்தியாவிலை வெளிநாட்டு நிறுவனங்களின் பெண்கள் அலங்காரப் பொருட்களின் விற்பனை 30 சதவீதம் அதிகரித்ததாம்.

பிறகு ஐஸ்வர்யாராய் அழகு ராணியான போது இந்த விற்பனை 47 சதவீதம் உயர்ந்ததாம்.

இதற்குப் பிறகு கலாசாரத்தைக் கட்டிக் காக்கும் தமிழ் நாட்டிலேயே "சைதாப் பேட்டை குறுக்குத் தெரு அழகு ராணி" என்று கூடப் போட்டிகள் நடந்ததாம்.

அதாவது இந்தியப் பெண்களை அழகு ராணிகளாக்கி அதைக்காட்டி இந்தியக் கிராமங்களில் இருக்கிற முனியம்மாவை, குப்பம்மாவை லிப்ஸ்டிக் வாங்கி அப்ப வைக்கிற தந்திரம் தான் இது" என்று அவர் முடித்தார்.

"ஆனால் மாஸ்டர், வெறும் அழகை மட்டும் பார்த்து பட்டம் கொடுக்கிறேல்லையாம். அறிவையும் சோதிக்கினமாம். விட்டுக் கொடுக்கவில்லை லோகன்.

தனக்குத் தானே சிரித்துக் கொண்ட மாஸ்ரர், அறிவை எப்படி சோதிக்கினம் இப்ப தெரியுமே மிஸ் வேர்ல்ட் பட்டம் வென்ற பிரியங்கா சோப்ராவிடம் இன்று இருப்பவர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்? என்று கேட்டினம். அவவும் அதுக்கு "அன்னை தெரேசா தான் என் மனம் கவர்ந்தவர் அவரின் பண்பென்ன? கருணை என்ன?" என்று அடுக்கித் தள்ளினார்.

ஆனால் அன்னை தெரேசா இன்று இல்லை எனவே பிரியங்கா சொன்ன பதில் தவறு ஆனாலும் நீதிபதிகள் அதனைப் பெரிது படுத்தாமல் இந்திய அழகிக்கே உலக அழகிப்பட்டத்தை கொடுத்து விட்டார்கள். தவறான பதிலுக்கு கிடைத்த அழகிப் பட்டம் இது."

லோகன் தலை கவிழ்ந்து யோசித்தபடி இருக்கவே பிறகும் மாஸ்டரே பேசினார்.

"தம்பி சுஸ்மிதா சென்னும் ஐஸ்வர்யாராயும் இப்படித்தான் தாய்மை சேவை அது இது என்று அப்ப சொன்னவை. இப்ப என்ன செய்யினம்? ஏழைகளுக்கும் நோயாளர்களுக்கும் சேவையா செய்யினம்? அவை திரைப்படங்களில் செய்யிர சேவையைதான் நாங்கள் பார்க்கிறமே....."

அதுவரை மௌனம் காத்திருந்த டானியல், ஏன் மாஸ்டர், லோகனுக்கு இரவிலை நித்திரை கொள்ளும் போது அவை கனவிலை வந்தும் சேவை செய்யினமாம்." என்று சீண்டினான்.

சீண்டலுக்குப் பதில் சொல்லும் நிலையில் லோகன் இல்லை, தனது கனவுக் கன்னியான ஐஸ்வர்யாராய் பற்றி கொண்டிருந்த பெருமை கரைந்ததால்.

பேச்சு சுவாரஸ்யத்தில் சின்னாச்சி கடலைக் கடையைக் கட்டிவிட்டு புறப்பட ஆயத்தமாவதைக் கவனிக்கத் தவறியவர்கள், அப்போது தான் சுதாகரித்துக் கொண்டு தாமும் புறப்படத் தொடங்கினார்கள்.

எழுந்து நின்ற மாஸ்டர் வேட்டியைத் தட்டிக்கொண்டே கனடாவிலை இருக்கிற எங்கடை ஆட்கள் ஆதரிச்ச கட்சி அங்கை ஆட்சி அமைச்சது தெரியும் தானே இதனால, அமெரிக்காவிலை வாழுற இந்தியர்களுக்கு கொஞ்சம் மனவருத்தமாம். இதைப்பற்றி அடுத்த முறை சொல்லுகிறேன்" என்றபடி விநாசியருடன் நடக்கத் தொடங்கினார்.

தேரடி அமைதியானது.

–கண்ணன்



# நீதித்துறையுடன் முட்டி மோதி மூக்குடைபடும் யாழ் பொலிஸ்!

ஒரு காலத்தில் நீதிமன்ற நடவடிக்கைகளே முற்றாகச் செயலிழந்து போயிருந்தன யாழ். குடாநாட்டில், நீதிமன்ற நடவடிக்கைகளை மீண்டும் உரிய முறையில் நடைபெற வைப்பதற்கு ஒரு பெரும் இழுபறிப் போரையே நடத்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார் யாழ். மாஜிஸ்திரேட் இ.த. விக்னராஜா.

யுத்த மேகங்களால் சூழப்பட்டிருக்கும் யாழ். குடாநாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இப்போது குந்தகமாக இருப்பவர்கள் புலிகள் அல்லர்; நீதிமன்ற நிர்வாகத்துக்குப் பக்கபலமாக - ஒத்துழைப்பாகச் செயற்படவேண்டிய பொலிஸார் தான் என்று விடயமறிந்த வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன.

1995 பிற்பகுதியில் யாழ். குடாநாட்டைப்படையினர் மீளக் கைப்பற்றும் வரை சுமார் ஏழு, எட்டு வருடங்கள் குடாநாட்டில் நீதிமன்றச் செயற்பாடுகள் ஸ்தம்பித்துப் போயிருந்தன.

1996 ஏப்ரலில் குடாநாட்டின் கணிசமான பகுதிகள் படையினரின் கட்டுப்பாட்டில் வந்த பின்னர்தான் யாழ். நகரப் பகுதியில் நீதிமன்றம் ஒன்றை மீள நிறுவும் முயற்சிகள் மெல்ல மெல்ல ஆரம்பிக்கப்பட்டன.

ஆனால், புலிகளின் உள்ளூர்த் தலைவர்களிடமிருந்து அவ்வப்போது அறிவுறுத்தல் கடிதங்கள் கிடைப்பதும், அதன் காரணமாக நீதிமன்றத்தை இயக்க வந்த அதிகாரிகள் 'துண்டைக்காணோம்; துணியைக் காணோம்!' என்று ஓடித் தப்புவதும் தொடர் கதையானது.

நீதிவான்கள் ரி.ஆர். இராமச்சந்திரா, என். அருள்சாகரன், எஸ்.ஏ.ஈ. ஏகநாதன், எம். இளஞ்செழியன், இ.த.விக்னராஜா என்று பலருக்கு செம்மணிப் புதைகுழி வழக்குவிசாரணைமுன்னர் கைமாறியதற்கு இதுதான் முக்கிய காரணம்.

எனினும்-

நீதிமன்றங்களை இயங்க அனுமதிப்பதன் அவசியம் குறித்து பல தரப்புகளில் இருந்தும் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களை அடுத்து, நீதிமன்றங்களை - அவை நீதிமன்றங்களாக இயங்கும் வரை - செயற்பட அனுமதிப்பது என்று புலிகள் கொள்கைரீதியான முடிவுக்கு வந்ததாகக் கூறப்படுகின்றது.

அதனை அடுத்து குடாநாட்டின் நீதிமன்றங்களுக்குச் சவால் விடும் தமது போக்கைப் புலிகள் 'அமுக்கி' வாசிக்கத் தொடங்கினார்கள். யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் ஒன்றைத் திறப்பதற்கும் புலிகள் பல மாதங்களுக்கு முன்னரே 'பச்சைக்கொடி' காட்டிவிட்டதாகவும் கூடத் தகவல்.

காரணமின்றிக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்படும் குடாநாட்டு இளைஞர்கள், பின்னர் அனுராதபுரம் மேல்நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுகிறார்கள், சட்ட உதவி ஏதும் பெறமுடியாமல், தடுப்புக் காவலில் நீண்ட காலம் கிடந்து அழுந்துகிறார்கள் இந்தப் பிரச்சினைக்கு, யாழ்ப்பாணத்தில் மேல் நீதிமன்றம் ஒன்று திறக்கப்படுவது ஒரு நல்ல தீர்வாக அமையும் என்று சட்ட வட்டாரங்கள் கருதுகின்றன.

இது விடயத்தில் அந்த வட்டாரங்கள் அழுத்தம் கொடுத்தன. இதன் காரணமாகவே யாழ்ப்பாணத்தில் மேல்நீதிமன்றம் திறக்கப்படும் நடவடிக்கையைக் கண்டும் காணாததும் போல விட்டுவிடுவது என்ற முடிவுக்குப் புலிகள் வந்தனர் என்றும் கூறப்படுகின்றது.

மேல் நீதிமன்றம் திறப்பதற்கு மும்முரமான முயற்சிகள் ஒருபுறம் நடக்க....

எப்படியோ நடைபெற்றுக் கொண்டிருக்கும் மாஜிஸ்திரேட் நீதிமன்றச் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைபோடுவது போலப் - பொறுப்பின்றி - மறுபுறத்தில் பொலிஸார் நடப்பதாகக் கவலை தெரிவிக்கின்றனர் யாழ். சட்டத்தரணிகள்.

## நெடுந்தீவு விவகாரம்

1998இல் நெடுந்தீவில் இளைஞர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அதுபற்றிய தகவல் பத்திரிகைகளில் வெளியானதை அடுத்து தீவகத்துக்குப் பொறுப்பான அப்போதைய யாழ். மாஜிஸ்திரேட் எஸ்.ஏ.ஈ. ஏகநாதன் இந்தச் சம்பவம் பற்றிய விசாரணைகளை ஆரம்பித்தார்.

இது தொடர்பாக நெடுந்தீவிலுள்ள ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் சிலரைப் பெயர் குறிப்பிட்டு, அவர்களைக் கைதுசெய்து தம்முன் ஆஜர் செய்யும்படி அவர் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பித்தார்.

ஆனால் தம்மால் அவர்களைக் கைதுசெய்யமுடியாது என்று கைவிரித்தனர் பொலிஸார். அதனையடுத்து தீவகப் பகுதிகளுக்குப் பொறுப்பான கடற்படை அதிகாரிக்கு அத்தகைய உத்தரவை நீதிவான் விடுத்தார். ஆனால், அவரும் கைவிரித்தார். நீதிவான் விடவில்லை. இறுக்கிப் பிடித்தார்.

விளைவு...?

நீதிவான் ஏகநாதனை யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறைக்கு இடம்மாற்றுவதில் அது போய் முடிந்ததாகத் தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப தலைவர் வீ. ஆனந்தசங்கரி தமது அறிக்கை ஒன்றில் சுட்டிக் காட்டியுள்ளார்.

முன்னர் யாழ்ப்பாணத்தில் நீதிவான் ஏகநாதனுக்கு எத்தனையோ முட்டுக்கட்டைகள் போடப்பட்டன. அந்த நிலைமை இன்றும் யாழ்ப்பாணத்தில் தொடர்வதாகத் தெரிகிறது.

## ரூ. 9 லட்சம் ரூ. 49 லட்சமானது!

கடந்த மே மாதம் ஆனையிறவு மற்றும் அரியாலையை அண்டிய பகுதிகளில் விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதை அடுத்து யாழ்நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டது. அப்போது - ஜூன் 2ஆம் திகதி - குருநகரில் உள்ள அரச களஞ்சியத்தில் பெரும் திருட்டு இடம்பெற்றது. இது தொடர்பாக 37 பேர் கைதுசெய்யப்பட்டு வழக்குத் தொடரப்பட்டது. ஆனால் போதிய சாட்சியங்கள் இல்லாததால் அவர்களை நீதிமன்றம் விடுவித்தது.

அன்றைய தினம் களஞ்சியத்திலிருந்து காணாமற்போன பொருள்களின் பெறுமதி குத்துமதிப்பாக சுமார் 1 லட்சம் ரூபா இருக்கும் என்று தெரிவித்து, அதன் பட்டியலைக் குருநகர் இராணுவ முகாம் கட்டளை அதிகாரி யாழ். பொலிஸாரிடம் சமர்ப்பித்தார்.

குருநகர் களஞ்சியப் பொறுப்பாளர் பொலிஸாருக்குக் கொடுத்த முதல் முறைப்பாட்டில் காணாமற்போன பொருள்களின் தொகை 9 லட்சம் ரூபாவாக இருக்கும் என்று தெரிவித்திருந்தார்.

ஆனால் ஒரு மாதம் கழித்து அவர் பொலிஸாருக்குச் சமர்ப்பித்த கணக்கு அறிக்கையில் அன்றைய தினம் களவு போன பொருள்களின் தொகை 49 லட்சம் என்று குறிப்பிட்டிருந்தார்.

**நீதிமன்றம் கட்டளை பிறப்பித்திருந்தும் நீண்ட காலமாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்காமல் இருந்த பொலிஸாரைக் கலக்கிய யாழ் நிதிவானின் அதிரடி அறிவிப்பு, அதை அடுத்து பொலிஸார் 24 மணி நேரத்தில் செயலில் இறங்கினர்.**

இதனை அவதானித்த நீதிமன்றம் களஞ்சியப் பொறுப்பாளரைக் கைது செய்து விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டதுடன், அது குறித்துப் பொலிஸாரை விசாரணை நடத்தவும் பணித்தது.

ஆனால் காலம் இழுபட்டதே தவிர யாழ். பொலிஸார் விசாரணை எதையும் ஆரம்பிக்கவே இல்லை. உரிய விசாரணை நடத்தப்படுமானால் பல 'சுறா'க்கள் சிக்கும் என்று எதிர்பார்க்கப்பட்ட பின்னணியில் தான் பொலிஸாரின் பராமுகச் செயற்பாடுகள் தொடர்ந்தன.

களஞ்சியப் பொறுப்பாளரின் பிணை விண்ணப்பத்தை விசாரணை செய்த வவுனியா அமர்வு மேல் நீதிமன்றம் கூட இந்த விடயத்தை - இன்ன சட்டத்தின் கீழ் - பொலிஸார் விசாரிப்பதே நல்லது என்று பொலிஸாரை வழிப்படுத்தி இருந்தது.

ஆனால் கடந்த 04ஆம் திகதி வரை ஐந்து மாதங்களாகப் பொலிஸார் விசாரணையை ஆரம்பிக்கவே இல்லை. முறைப்பாட்டுக்காரர் யாரும் இல்லாததால் விசாரணையை ஆரம்பிக்க முடியாதிருப்பதாகப் பொலிஸார் தரப்பில் நொண்டிச்சாட்டுக் கூறப்பட்டது. ஆனால் நீதிவான் விடவில்லை. காட்டமான உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார்.

''யாழ்.குடாநாட்டில் கஷ்டப்பட்ட மக்களுக்கு இழைக்கப்பட்ட அக்கிரமம் குறித்து விசாரணை நடத்தும்படி நீதிமன்றம் கட்டளை பிறப்பித்தும் பொலிஸார் விசாரணை செய்யத் தவறியுள்ளனர். நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்து பொலிஸார் நடப்பதால், குடாநாட்டில் இந்த நீதிமன்றம் தொடர்ந்து இயங்க வேண்டுமா என்ற கேள்வி நீதிமன்றத்தின் முன் எழுந்துள்ளது.

இது விடயத்தில் அடுத்த 24 மணித்தியாலத்திற்கள் உரிய விசாரணை நடத்தி நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். யாழ்.குற்றத்தடுப்புப் பொலிஸ் பொறுப்பு அதிகாரி இதில் தவறும் பட்சத்தில் குடாநாட்டில் நீதிமன்றங்கள் தொடர்ந்து இயங்க வேண்டுமா என்பது குறித்து பிரதம நீதியரசரின் கவனத்துக்குக் கொண்டு வருவேன்'' - என்று நீதிவான் நீதிமன்றில் பகிரங்க அறிவிப்பு விடுத்தார்.

இதனையடுத்துப் பெட்டிப் பாம்பாய் அடங்கிய யாழ்.பொலிஸார் உடனடியாக அடுத்த நாளே நீதிவான் முன் ஆஜராகினர். தாங்கள் விசாரணையை உடன் ஆரம்பித்து விட்டதாகவும், அடுத்த ஒரு வாரத்தில் விவர அறிக்கை சமர்ப்பிப்பதாகவும் உறுதி அளித்தனர்.

இதே போன்று மற்றொரு சம்பவத்திலும் யாழ்.நீதிவான் யாழ்.பொலிஸாருக்கு எதிராகக் காட்டமான உத்தரவைப் பிறப்பித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

## பொலிஸாருக்குச் சாட்டையடி

யாழ்.கஸ்தூரியார் வீதியிலுள்ள 'ஹோட்டல் பார்' ஒன்றில் மது அருந்திக் கொண்டிருந்த இரு பொலிஸார் மீது கடந்த நவம்பர் மாதம் 20ஆம் திகதி இனந்தெரியாதோர் துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பிச் சென்றனர்.

துப்பாக்கிச் சூட்டில் ஒரு கான்ஸ்டபிள் உயிரிழக்க, காயமடைந்த மற்றொரு கான்ஸ்டபிள் சற்றுநேரம் கழித்து 'பார்' கட்டிடத்துக்கு வெளியே வீதிக்கு ஓடிவந்து, வீதியில் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார். அதனால் அருகில் கார் ஒன்றில் அமர்ந்திருந்த முரளிதரன் என்ற சிவிலியன் உயிரிழந்தார்.

ஆனால் அடுத்தநாள் யாழ்.பொலிஸாரோ காருக்குள் உயிரிழந்த முரளிதரனே, அதற்கு முன்னர் பாருக்குள் வைத்துப் பொலிஸார் மீது சுட்டார் என்று கதையைச் சோடித்தனர். இறந்த முரளிதரனுடன் காரில் வந்த ஐவரை நீதிமன்றில் ஆஜர் செய்து அவர்களை விளக்க மறியலில் வைக்கும்படி கோரினர்.

ஆனால் அந்தச் சமயத்திலேயே பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்த நீதிவான், பொலிஸாரின் சோடனையைப் புரிந்து கொண்டார். பொலிஸாருக்குச் சாட்டையடி கொடுக்கும் விதத்தில் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார்.

முரளிதரனைச் சுட்டுக் கொன்ற- அதற்கு முன்னைய சம்பவத்தில் காயமடைந்து கொழும்பு ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகின்ற- பொலிஸ் கான்ஸ்டபிளைக் கைதுசெய்து தம்முன் ஆஜர் செய்யும்படி அவர் உத்தரவிட்டார். அத்தோடு வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கும் அவர் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்தார்.

''குடாநாட்டில் பொலிஸார் பல நெருக்குதல்களை எதிர்கொள்ள வேண்டி இருந்தாலும் கூட, தமது கையில் உள்ள ஆயுதங்களை அப்பாவி மக்களுக்கு எதிராகப் பிரயோகிப்பதை இந்த நீதிமன்றம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது''.

''காயமுற்ற கான்ஸ்டபிள் தனது கையில் ஆயுதமிருந்தது என்ற காரணத்தினால், அவரைச் சுட்ட சம்பவத்தில் சம்பந்தப்படாத ஓர் அப்பாவியைச் சுட்டுக் கொலைசெய்திருப்பதை இந்த நீதிமன்றம் பாரதூரமாகக் கருதுகிறது''.

''எனவே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்ட வேண்டிய பொலிஸார் எதிர்காலத்தில் உணர்ச்சிகளுக்கு இடம் கொடுத்து அப்பாவிகள் எவரையும் தண்டிக்கக்கூடாது. அதனால் பொலிஸ் சேவையில் கடமையாற்றும் அனைவருக்கும் இது விடயத்தில் உயரதிகாரிகள் மூலம் உரிய பயிற்சிகளையும் அறிவுறுத்தல்களையும் வழங்க வேண்டும்.

எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடைபெறாதிருக்க நடவடிக்கை எடுக்குமாறு வடமாகாணப் பிரதிப் பொலிஸ்மா அதிபருக்கு உத்தர விடுகிறேன்'' - என்று தமது உத்தரவில் குறிப்பிட்டார் நீதிவான் விக்னராஜா.

## படை பொலிஸ் எல்லை மீறல்

குடாநாட்டில் நீதிமன்றங்களினால் விசாரிக்கப்படவேண்டிய சிவிலியன்களின் சிறிய கொடுக்கல் வாங்கல் பிணக்குகள் முதல் பெரிய காணிச் சச்சரவுவரை தமக்குச் சம்பந்தப்படாத பல சிவில், கிரிமினல் விவகாரங்கள். - இவற்றை இராணுவத்தினரும் பொலிஸாரும் தமக்கு ஏதோ நீதிமன்ற அதிகாரம் அளிக்கப்பட்டிருப்பது போல விசாரிக்கிறார்கள்.

விசாரணையின் பின் தீர்ப்பளித்து, அந்தத் தீர்ப்புகளை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளையும் மேற்கொள்கிறார்கள். இது கடந்த நான்கு வருடங்களாக- இராணுவம் குடாநாட்டை மீளக் கைப்பற்றியதன் பின்னர்- சர்வசாதாரணமாகத் தொடர்ந்து நடந்து வருகிறது.

இந்த அதிகார எல்லை மீறலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் உத்தரவு ஒன்றை யாழ்.நீதிவான் விக்னராஜா விடுத்திருக்கிறார்.

சிவில் வழக்கொன்றை விசாரித்த அவர், வழக்கின் எதிரி ஒருவரை ஒரு திகதியில் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவிட்டார். ஆனால் அதே திகதியில்- அதே விடயத்துக்காக- தாம் திருநெல்வேலியிலுள்ள இராணுவ முகாமில் ஆஜராக வேண்டி இருப்பதாக அந்த எதிரி நீதிமன்றத்தில் குறிப்பிட்டபோதே இராணுவத்தின் அதிகார எல்லைமீறல் நீதிமன்றத்தின் கவனத்துக்கு வந்தது.

அதனை அடுத்தே ''சிவில், கிரிமினல் பிணக்குகளில்- தமக்கு அதிகாரமில்லாத விவகாரங்களில்- இராணுவத்தினரோ, பொலிஸாரோ அதிகார எல்லை மீறி மூக்கை நுழைக்கக் கூடாது'' - என்ற கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்தார் நீதிவான்.

-விண்ணன்.

# ஜனவரியில் தேர்தல் நடத்தும் திட்டம் தோல்வி

இலங்கைக் கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபையின் வருடாந்தத் தேர்தலை முன்கூட்டியே நடத்த எடுக்கப்பட்ட முயற்சிகளை விளையாட் டுத் துறை அமைச்சர் தடுத்துள்ளார்.

எதிர்வரும் 11ஆம் திகதி வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகிகள் தெரிவும் நடத்தப்படும் என கிரிக்கட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்தது.


திலங்க

விளையாட்டுச் சங்கங்களுக்கு இதுதொடர்பான அறிவித்தல் விடுக்கப்பட்டதுடன் பத்திரிகைகள் மூலம் விளம்பரங்களும் செய்யப்பட்டன.

வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்யும் இறுதித் தினம் டிசம்பர் 20ஆம் திகதி என்றும் அறிவிக்கப்பட்டது.

தற்போதைய நிர்வாகிகளின் பதவிக்காலம் மார்ச் 31ஆம் திகதியே முடிவடைகிறது.

ஆனால் ''ஜனவரி 25ஆம் திகதி முதல் ஏப்ரல் 5ஆம் திகதி வரை இங்கிலாந்து அணி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது. முதல் தடவையாக இலங்கையுடன் 3 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணி மோதவுள்ளது.

இப்போட்டிகளைப் பார்வையிட சுமார் 5000 இங்கிலாந்து நாட்டவர்கள் இலங்கைக்கு வரவுள்ளனர். அவர்களுக்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது அவசியம்.

அத்துடன் பெப்ரவரி 10ஆம் திகதி கிரிக்கட் சபை நிர்வாகிகளின் சர்வதேச மாநாடு அவுஸ்திரேலியாவில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் பங்குபற்றும் போது சபையில் உறுதி யாகவிருக்க வேண்டும். இவற்றைக் கவனிக்கும் போது தேர்தலை நடத்துவது சிரமமானது. அதனால்தான் முன்கூட்டியே தேர்தலை நடத்துகிறோம்'' என்றார் சபைத் தலைவர் திலங்க சுமதிபால.

ஆனாலும் எதிரணியினர் தயாராவதற்கு முன்னர் தேர்தலை நடத்துவதே இதன் நோக்கம் என்றும் சிலரால் விமர்சிக்கப்பட்டது.

பல விளையாட்டுக் கழகங்கள் இம் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து விளையாட்டுத்துறை அமைச்சரிடம் முறையிட்டுள்ளன. இத னால் ஏப்ரல் 15க்கும் மே 15க்கும் இடையில் தேர்தலை நடத்துமாறு அமைச்சர் கூறியுள்ளார்.

மே 11-15க்கு இடையில் தேர்தலை நடத்துவதை சபையின் நிறைவேற்றுக் குழுவினர் விரும்புவதாகத் தெரிகிறது.

# விளையாட்டுச் செய்திகள்!

-ஆர். சேதுராமன்

## பாக். - பங்களாதேஷ் போட்டி சந்தேகத்தில்

பாகிஸ்தான், பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான கிரிக்கட் சுற்றுப்போட்டிகள் பங்களாதேஷில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ளன.

இரு டெஸ்ட் போட்டிகள், ஒருநாள் போட்டிகள் இரண்டில் விளையாட பாகிஸ்தான் இணக்கம் தெரிவித்துள்ளது.

எனினும் இப்போட்டிகள் திட்டமிட்டபடி நடைபெறுவது சந்தேகம் என பங்களாதேஷ் கிரிக்கட் சபைத் தலைவர் சபார் ஹுஸைன் சௌத்ரி கூறியுள்ளார்.

''உரிய காலத்துக்கு முன் தொலைக்காட்சி ஒளிபரப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுவது கடினம். விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒளிபரப்பும் 'வேர்ல்ட்டெல்' நிறுவனத்திற்கு ஒரு மாதகாலத்திற்கு முன்னரே இதற்கான அவகாசம் வழங்கப்பட வேண்டும்'' என்கிறார் அவர்.

அத்தோடு அரசியல் பிரச்சினையொன்றும் இப்போட்டிகளை நடத்துவதில் தடங்கலை ஏற்படுத்தியுள்ளது.

டாக்காவிலுள்ள பிரதிப் பாகிஸ்தான் துது வர் இர்பான்-ராஜாவின் கூற்றொன்றே இதற்குக் காரணம்.

அண்மையில் கருத்தரங்கில் பேசிய அவர் 1971ல் பங்களாதேஷ் சுதந்திரப் போரின் போதும் அதற்கு முன்பும் ஏற்பட்ட சில அனர்த்தங்களுக்கு பாகிஸ்தான் இராணுவம் காரணமல்ல, பங்களாதேஷின் அவாமி லீக் கட்சியினரே காரணம் (தற்போதைய ஆளும் கட்சி) என அவர் கூறியிருந்தார்.

அத்தோடு போரில் பங்களாதேஷ் கூறுவது போன்று 30 லட்சம் பேர் இறக்கவில்லை. 26,000 பேரே இறந்தனர் என்றும் அவர் கூறினார்.

இக்கூற்று பங்களாதேஷ் ஆட்சியாளர்களைக் கோபப்படுத்தியுள்ளது. இதனால் பாகிஸ்தானுடன் சில ராஜதந்திர ரீதியிலான முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன. எனவே பாகிஸ்தான் அணி பங்களாதேஷ் வருவதற்கு அரசாங்கத்திடம் புதிதாக அனுமதிபெற வேண்டியுள்ளது என பங்களாதேஷ் கிரிக்கட் சபையின் செயலாளர் செயிட் அஷ்ரப் ஹக் கூறியுள்ளார்.

இந்திய கிரிக்கட் அணி பாகிஸ்தான் செல்வதற்கு இந்திய அரசாங்கம் மறுப்புத் தெரிவித்ததையடுத்து, பாகிஸ்தான் - பங்க ளாதேஷ் போட்டிகளை நடத்த திட்டமிடப் பட்டது.

# பிரட்மனின் காதல் கடிதங்கள் மீட்பு!

அவுஸ்திரேலியாவின் கிரிக்கட் மேதையான டொனால்ட் பிரட்மனின் காதல் கடிதங்கள் ஏல விற்பனையிலிருந்து மீட்கப்பட்டுள்ளன.

1940களில் பிரட்மன் தனது மனைவி ஜெஸிக்கு இக்கடிதங்களை எழுதியிருந்தார்.

1933இல் பிரட்மன் - ஜெஸி திருமணம் நடைபெற்றது. பிரட்மனின் வாழ்க்கையில் மிகவும் உறுதுணையாக இருந்தவர் ஜெஸி. புற்றுநோய் காரணமாக ஜெஸி காலமானபோது தனது வாழ்க்கையே முடிந்துவிட்டதுபோல் உணர்வதாக பிரட்மன் குறிப்பிட்டிருந்தார்.

போல் ஃபெய்ன் எனும் புத்தக விற்பனையாளர் இக்கடிதங்களை 20000 டொலர்களுக்கு விற்பனை செய்யத் திட்டமிட்டிருந்தார்.

தற்போது 92 வயதாகும் பிரட்மன், தனது அந்தரங்கக் கடிதங்கள் லாபநோக்கில் விற்பனை செய்யப்படுவதை அறிந்து கடும் கோபமடைந்தார்.

அதன்பின் கிரிக்கட் அபிமானிகள் அரசியல் தலைவர்கள் ஆகியோரும் கண்டனம் தெரிவித்ததையடுத்து கடிதங்களை விற்பனை செய்யும் முயற்சியை பெய்ன் கைவிட்டார்.

தனது செய்கைக்குப் பகிரங்கமாக மன்னிப்புக் கோரியுள்ள அவர், இக்கடிதங்களை டொம் தொம்ஸன் என்பவர் ஒரு மாதத்திற்கு முன்னர் தனக்கு விற்றதாகக் கூறியுள்ளார்.

பிரட்மனின் தொடர்பு அதிகாரியாகப் பணியாற்றியவர் தொம்ஸன். பிரட்மன் எழுதிய 'ஃபெயார்வெல் ரு கிரிக்கட்' எனும் நூலையும் இவரே வெளியிட்டார்.

ஆனால் இக்குற்றச்சாட்டுக்களை தொம்ஸன் மறுத்துள்ளார். ''நான் எதையும் விற்பனை செய்யவில்லை'' என்கிறார் அவர்.

எனினும் பிரட்மனின் ஆக்கங்களை வெளியிடுவதற்கு தொம்ஸனுக்கு வழங்கப்


பிரட்மனுடன் ஜெஸி

பட்டிருந்த அதிகாரம் இச்சம்பவத்தையடுத்து மீள்பரிசீலனை செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கடிதங்கள் பிரட்மன் அரும்பொருட் காட்சியகத்துக்கு வழங்குவதெனத் தீர் மானிக்கப் பட்டுள்ளது.

# இங்கிலாந்து அணிக்கு அரிய வெற்றி

இங்கிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் கராச்சியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து அணி 6 விக்கட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.


நஸார் ஹுஸைன்

லாகூரிலும் பைஸலாபாத்திலும் நடைபெற்ற டெஸ்ட் போட்டிகள் வெற்றிதோல்வியின்றி முடிவுற்றிருந்தன. இதனால் நஸார் ஹுஸைன் தலைமையிலான இங்கிலாந்து அணிக்கு போட்டித் தொடரிலும் வெற்றி கிடைத்துள்ளது.

இத்தோடு பாகிஸ்தான் அணி இறுதியாகச் சொந்த மண்ணில் விளையாடிய நான்கு டெஸ்ட் தொடர்களில் தோல்வியடைந்துள்ளது.

பாகிஸ்தான் அணி கராச்சியில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியொன்றில் தோல்வியடைந்தமையும் இதுவே முதல் தடவை.

1962க்குப் பின் முதல் தடவையாக இங்கிலாந்து அணி பாகிஸ்தானில் டெஸ்ட் தொடர் வெற்றியைப் பெற்றுள்ளது.

இவ்வருட ஆரம்பத்தில் மேற்கிந்தியத் தீவுகளுடனான டெஸ்ட் தொடரில் இங்கிலாந்து வெற்றிபெற்றபோது அது 31 வருடங்களின் பின் பெற்ற வெற்றி யாக விளங்கியது.

''ஒரு வருடத்திற்கு முன்பு பலவீனமான நிலையி லிருந்த இங்கிலாந்து அணி தற்போது மிகவும் பலமடைந் துள்ளது என ஆஸி அணித் தலைவர் ஸ்டீவ்வோ கூறி யுள் ளார்.

விரைவில் ஆஸி. இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஆஸஸ் டெஸ்ட் தொடர் நடைபெறவுள்ளது.

# நூற்றாண்டின் சிறந்த வீரர் தெரிவில் மோதல்

இருபதாம் நூற்றாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரர்களாக பிரேஸில் நாட்டின் பேலே, ஆர்ஜென்டீனாவின் மரடோனா ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பேலே 1958 ,1962,1970 ஆகிய வருடங்களில் நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டிகளில் பிரேஸிலுக்கு வெற்றி தேடிக் கொடுத்தவர்.


பேலே

1324 முதல்தரப் போட்டிகளில் பங்குபற்றி 1282 கோல்களை அடித்தவர் பேலே.

மரடோனா 1986இல் ஆர்ஜென்டீனாவுக்கு உலகக் கிண்ணத்தைப் பெற்றுக் கொடுத்தவர். 1994ல் உலகக் கிண்ணப் போட்டிகளின் போது தடை செய்யப்பட்டிருந்த ஊக்க மருந்து உட்கொண்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டதால் 15 மாதகாலத் தடைக்குள்ளானார்.

சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனத்தால் நடத்தப்பட்ட இத்தெரிவுகளில் சில சுவாரஸ்யமான விடயங்களும் இடம்பெற்றன.

இன்டர்நெட் மூலம் வாக்கெடுப்பை நடத்தி சிறந்த வீரர் ஒருவரை தெரிவு செய்யவே முதலில் திட்டமிடப்பட்டது.

இதில் ஆர்ஜென்டீனா நாட்டவரான மரடோனா அதிக வாக்குகளைப் பெற்றுக் கொண்டார்.

இது பிரேஸில் நாட்டவர்களுக்குக் கடும் கோபத்தை ஏற்படுத்திவிட்டது.

பேலே, மரடோனா இருவரையும் ஒப்பிடுவதே தவறு என்றனர் பிரேஸில் நாட்டவர்கள்.

''பேலே விளையாடிய காலத்தில் பிரேஸில் நாட்டிற்கு வர்ணத் தொலைக்காட்சி அறிமுகமாகவில்லை. அதனால் அவரது ஆட்டத் திறமையைக் கண்டுகளிக்கும் வாய்ப்பு பலருக்குக் கிடைக்கவில்லை.

மரடோனா அண்மைக் காலத்து வீரர். இன்டர்நெட் பாவிக்கும் இளையதலைமுறையினர் மரடோனாவின் ஆட்ட நுணுக்கத்தைத் தொலைக் காட்சிகள் மூலம் பார்த்து மகிழ்ந்துள்ளனர்.

எனவே இன்டர்நெட் மூலம் நூற்றாண்டின் சிறந்த வீரரை தெரிவு செய்வது முறையல்ல'' என்று பேலேவுடன் விளையாடிய பல பிரேஸில் நாட்டவர்கள் கூறினர்.

இதையடுத்து இன்டர்நெட் மூலமான வாக்கெடுப்பு 'கடந்த தசாப்தத்திற்குரிய வீரரைத் தெரிவு செய்வதற்கே' என அறிவித்தது சர்வதேச கால்பந்தாட்டச் சம்மேளனம்.

பின்னர் அது தவறுதலாக குறிப்பிடப்பட்டுள்ளதெனவும் தசாப்தங்களின் வீரர் தெரிவு என அது வாசிக்கப்பட வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டது.

அத்துடன் இரண்டு வீரர்கள் தெரிவு செய்யப்படுவர் என்றும் இரண்டாவது வீரர் கால்பந்தாட்டச் சம்மேளனத்தின் அதிகாரிகள், பயிற்றுநர்கள், ஊடகவியலாளர்கள் ஆகியோரால் தெரிவு செய்யப்படுவர் என்றும் அறிவிக்கப்பட்டது.

இன்டர்நெட் மூலமான கணிப்பில் மரடோனாவுக்கு 58.60 சதவீத வாக்குகளும் பேலேவுக்கு 18.5 சதவீத வாக்குகளும் கிடைத்தன. மற்றொரு ஆர்ஜென்டீனா நாட்டவரான அல்ஃப்ரடோ டி ஸ்டெஃப்னோ (1954-60 களில் 'ரியல் மட்ரீட்' அணிக்காக விளையாடியவர்) மூன்றாவது இடத்தைப் பெற்றார்.


மரடோனா

சம்மேளன அதிகாரிகளின் தெரிவில் பேலேவுக்கு 72.75 சதவீத வாக்குகளும் அல்ஃப்ரடோ டி ஸ்டெஃபானோவுக்கு 9.75 சதவீத வாக்குகளும் கிடைத்தன. மரடோனா 6 சதவீத வாக்குகளே பெற்றார்.

நூற்றாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீராங்கனைகளுக்கான விருதுகளும் வழங்கப்பட்டுள்ளன. சம்மேளனத்தின் தெரிவில் அமெரிக்காவின் மைக்கேல் அக்கேர்ஸ் முதலிடம் பெற்றார். இன்டர்நெட் கணிப்பில் சீனாவின் சுன்வென் வோ வென்றார்.

கடந்த 12ம் திகதி ரோம் நகரில் இவ் விருதுகள் வழங்கப்பட்டன.

இதன்போதும் மரடோனா- பேலே பூசல் பகிரங்கமாகியது.

முதலில் மரடோனாவுக்கு விருது வழங்கப்பட்டது. பேலே மேடைக்கு அழைக்கப்படும் முன்னர் மரடோனா மண்டபத்திலிருந்து வெளியேறிவிட்டார்.

பேலேயை சிறந்த மிகச்சிறந்த வீரராக மரடோனா ஏற்றுக் கொள்ளாததே இதற்குக் காரணம் என கருதப்படுகிறது.

மரடோனா வெளியேறும் முன் ''இருபதாம் நூற்றாண்டின் சிறந்த வீரர் யார்?'' என்று அவரிடம் ஊடகவியலாளர்கள் கேட்டனர்.

''ஒரு ஆர்ஜென்டீனா நாட்டவன் என்ற வகையில் அல்ஃபர்டோ டி ஸ்டெஃப்னோ தான் எனது தெரிவுக்குரியவர். ஆனால் பிளாட்டினி பேலே, க்ரையிப், ரிவால்டோ ஆகியோரும் சிறந்த வீரர்களே'' என்றார் மரடோனா.

மரடோனாவின் நடத்தை குறித்து பேலேயும் கவலையடைந்தார்.

''நானும் மரடோனாவும் சிறந்த நண்பர்கள் அல்ல. ஆனால் நான் அவரை மெச்சுகிறேன். தானே மிகச்சிறந்த வீரர் என அவர் கருதினால், அது அவரது பிரச்சினை'' என்று கூறியுள்ளார் பேலே.

இவ்வாண்டின் சிறந்த வீரராக பிரான்ஸ் வீரர் ஸெனடின்ஸிடனே தெரிவு செய்யப்பட்டுள்ளார். போர்த்துக்கல் வீரர் லுயிஸ் ஃபிகோ இரண்டாமிடத்தைப் பெற்றார். கடந்த ஆண்டின் சிறந்த வீரரான ரிவால்டோவுக்கு இம்முறை மூன்றாவது இடம் கிடைத்தது.

# வவுனியா வைத்தியசாலை டாக்டர்கள் ஊழல் விவரம்

வவுனியா டாக்டர்கள் பற்றிய அதிர்ச்சித்தகவல்களில் ஒன்றைக் கடந்தவாரம் தொட்டுக் காட்டினோம்.

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்ட இளம்பெண் ஒருவரின் பிறப்பு உறுப்பின் உள்ளேயோ வெளியிலோ காயங்கள் எதுவும் இல்லை என்றும் கன்னித்திரை கிழியவில்லை என்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர் ஒருவர் சான்றிதழ் வழங்கியிருந்தார்.

சம்பந்தப்பட்ட இளம்பெண் குழந்தை ஒன்றைப் பெற்றுவிட்டதால் சான்றிதழ் பொய்யானது என்று நீதிமன்றத்தில் தெரியவந்துவிட்டது.

மகப்பேற்று வைத்திய நிபுணர் வவுனியா நீதிவான் எம்.இளஞ்செழியனிடம் வகையாக மாட்டிக்கொண்டார்.

இவர் சொந்தத்தில் இரண்டு இடங்களில் வைத்தியசாலைகளை வைத்து நடத்திவருவதையும் அந்த வைத்தியசாலைகளை விட்டு விட்டு நேரே அரசாங்க வைத்தியசாலையில் இவருடைய கிளினிக்கிற்குச் செல்லும் கர்ப்பிணிப்பெண்களுக்கு என்ன நடக்கிறது என்பதையும் ஏற்கனவே கண்டோம்.

இனி இந்தக் கட்டுரையைப் படியுங்கள்.

இந்த மகப்பேற்று வைத்திய நிபுணர் தமது சொந்த ஆஸ்பத்திரிக்கு வேறு வழியின்றி வரும் கர்ப்பிணிப் பெண்களிடம் இல்லாதது பொல்லாதது எல்லாவற்றையும் சொல்லி ஏதோ பெரிதாச் செய்வதாகக் காட்டிப் பெருந்தொகையில் பணத்தைக் கறந்து விடுகிறாராம்.

இவருடைய பில்லுக்குப் பணம் செலுத்தும் போது உரிய தொகையை அப்படியே கொடுத்தால் சரி, பெரிய நோட்டு எதையாவது கொடுத்தால் மாட்டுப்பட வேண்டியதுதான். மிகுதிப் பணம் கிடைக்கவே கிடைக்காது. மருந்துக்கடையிலே இருக்கும் பால்மா முதல் பனடோல் வரை எதையாவது கொடுத்து கணக்கைச் சரிக்கட்டி விடுவாராம்.

இது தவிர இந்த மகப்பேற்று வைத்திய நிபுணரிடம் ஏதாவது வயிற்றிலே கோளாறென்று யாராவது கன்னிப் பெண் சிகிச்சைக்குப் போனால் போதும் அவரது வயிற்றிலே குழந்தை உருவாகியிருப்பதாக ஒரு புதுக்கதை ஜோடித்து அந்தப் பெண்ணை மிரட்டிப் பணம் பறித்து விடுவாராம்.

உதாரணத்துக்கு ஒரு கேஸ். இதே வைத்தியசாலையில் வேலை செய்த ஒரு கன்னிப் பெண் வயிற்றிலே பிரச்சினையென்று இவரிடம் சிகிச்சைக்குப் போயிருக்கிறார்.

அவரது வயிற்றை ஸ்கான் செய்து பார்த்த நிபுணர் வயிற்றிலே பிள்ளை வளர்வதாகச் சொல்லி வைத்தியசாலை ஊழியர்களையெல்லாம் கூட்டி வைத்து சிகிச்சைக்காகச் சென்ற பெண்ணை மோசமாகத் திட்டியிருக்கிறார்.

அவமானம் தாங்க முடியாத அந்தப் பெண் ஊழியர் வைத்தியசாலைக்கு லீவு கூடப் போடாமல் சொல்லாமல் கொள்ளாமல் போய்விட்டார்.

போனவர் கொழும்பு சென்று வேறொரு மகப்பேற்று வைத்திய நிபுணரிடம் காட்டி ஸ்கான் செய்து பார்த்த போது வயிற்றில் கட்டி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது. அதற்குச் சிகிச்சையும் அளிக்கப்பட்டது. பின்னர் அந்த வைத்திய அறிக்கையைக் கொண்டு வந்து வவுனியா வைத்தியசாலையில் உள்ள ஊழியர்களுக்குக் காட்டி அழுதிருக்கிறார் அந்தப் பெண்.

இந்த வைத்திய நிபுணர் பற்றி இன்னும் ஏராளமான குற்றச்சாட்டுகள். வவுனியாவில் சிறு அசம்பாவிதம் நடந்தாலும் உடனே தலையைப் போட்டுத் தீர்த்து வைக்க முனையும். தமிழ்க் கட்சிகள் இவரது விடயத்தில் மௌனமாக இருப்பது ஏன்?. இந்தக் கேள்விக்கு மக்கள் சாதாரணமாகப் பதிலளிக்கிறார்கள்.

அவ்வப்போது இந்த வைத்திய நிபுணரின் அட்டகாசங்கள் அதிகரிக்கும். அந்த வேளைகளில் வைத்திய நிபுணர் காணாமல் போய் விடுவது வழக்கமாம்.

தமிழ்க்கட்சி ஏதாவது அவரைக்கடத்திச் சென்று தீவிரமாக விசாரித்து விட்டு கணிசமான தொகைப் பணத்தைக் கறந்து விட்டு விடுதலை செய்வது வழக்கமாம்.

இந்த மகப்பேற்று நிபுணர் சம்பந்தமாக வவுனியா மாவட்டத்திற்குப் பொறுப்பான சுகாதார அதிகாரியிடம் கேட்டோம். இவ்வாறான குற்றச்சாட்டுகள் தமக்குக் கிடைத்தன என்று அவர் ஒப்புக் கொண்டார், ஆயினும் ஒன்று. எல்லாமே வாய் மொழி மூலமான குற்றச்சாட்டுகள் என்றும் எதுவுமே எழுத்திலே வழங்கப்பட வில்லையென்றும் அதனால் தாம் எதையும் செய்ய முடியாமல் இருக்கிறது என்றும் கூறினார்.

இதே வைத்திய நிபுணர் வன்னியிலிருந்து வந்த ஒரு நோயாளியிடம் பணம் கேட்கவே அந்த நோயாளி பணம் கொடுக்க மறுத்து விட்டாராம். நோயாளியை சிகிச்சையின்றியே வன்னிக்குத் திருப்பி அனுப்பி விட்டார் நிபுணர்.

வன்னிக்குத் திரும்பிச் சென்ற நோயாளி எம்.எஸ்.என். என்ற வரையறையற்ற மருத்துவக் குழுவிடம் இந்த நிபுணர் பற்றி எழுத்து மூலம் முறைப்பாடு செய்தார் எனத் தனக்கு அறிவிக்கப்பட்டது என்று வவுனியா மாவட்டச் சுகாதாரப் பொறுப்பதிகாரி கூறினார். ஆயினும் அந்த முறைப்பாடு இன்னும் தமக்குக் கிடைக்கவில்லை என்றும் அவர் கூறினார்.

- பாலியல் சேட்டையில் ஒருவர்
- மருந்துக் கடத்தலில் இன்னொருவர்
- உணவில் மோசடி மற்றொருவர்
- தனியார் வைத்தியசாலையில் மகப் பேற்று சிகிச்சையின் போது இறந்த குழந்தையை அரசினர் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் போட்டு மாட்டிக் கொண்டார் பிறிதொருவர்.
- பெரிய மகப்பேற்று வைத்திய நிபுணரின் அட்டகாசம் அடிக்கடி அதிகரிக்கும். உடனே அவர் காணாமல் போய்விடுவார். கடத்திக் கொண்டு போய் விசாரித்தவர்களுக்கு நோயாளிகளிடமிருந்து கறந்த பணத்தைக் கொட்டிக் கொடுத்து விட்டுத் திரும்பி வருவார்.

முறைப்பாடு கிடைத்தால் தாம் உரிய நடவடிக்கை எடுக்கத் தயார் என்றும் சுகாதாரப் பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

வவுனியா அரசாங்க ஆஸ்பத்திரியில் இன்னொரு வைத்தியர், இவர் மகப்பேற்று சத்திர சிகிச்சை ஒன்றை மேற்கொண்டார். அது வெற்றியளிக்கவில்லை. தாயும் பிள்ளையும் இறந்து விட்டார்கள்.

இதே டாக்டர் ஏற்கனவே ஒரு மகப்பேற்று சத்திர சிகிச்சையை மன்னார் வீதியிலுள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் வைத்து செய்தார். குழந்தை இறந்து விட்டது.

இறந்த குழந்தை வவுனியா வைத்திய சாலையின் சவச்சாலையில் போடப்பட்டது.

மறுநாள் சவச்சாலை ஊழியர்கள் குழந்தையின் சடலத்தைப் புதைக்காததால் விஷயம் வெளியே வந்து விட்டது. வைத்தியர் சிக்கலில் மாட்டிக் கொண்டார்.

இந்த சம்பவங்கள் தொடர்பான வழக்குகள் வவுனியா நீதிமன்றில் நடந்து கொண்டிருக்கும் போது வைத்தியர் கொழும்புக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றார். அங்கிருந்து வெளிநாடு போக வைத்தியர் முயற்சித்ததை வவுனியா நீதிவான் அறிந்து கொண்டார். அவரது இடமாற்றத்தை ரத்துச் செய்து வழக்கு முடியும் வரை அவர் வவுனியாவிலேயே கடமையாற்ற வேண்டுமென உத்தரவிட்டிருக்கிறார்.

மருத்துவ ஆய்வு கூடத் தொழில் நுட்பவியலாளரான இன்னொரு டாக்டர் சிகிச்சைக்கு வந்த கர்ப்பிணிப் பெண்ணிடம் பாலியல் சேஷ்டை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டார். அது எப்படியோ மூடி மறைக்கப்பட்டிருந்தது.

அந்தச் சம்பவத்துடன் தலைமறைவான டாக்டர் சுமார் 3 மாதங்களின் பின் இப்போது வவுனியாப் பக்கம் தலைகாட்டி வருகிறார்.

இன்னொரு டாக்டருக்கு கொழும்பிலே தமிழ் மக்கள் அதிகமாக வாழும் பகுதியில் பாமசி ஒன்றிருக்கிறது. அந்தப் பாமசிக்கு வவுனியா வைத்தியசாலையிலிருந்துதான் மருந்துகள் விநியோகிக்கப்படுகின்றனவாம்.

வைத்திசாலைக் களஞ்சியத்திலிருந்து மருந்துகள் காணாமல்போன சம்பவம் பற்றி விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டது. எனினும் அதுவும் பின்னர் மூடி மறைக்கப்பட்டுவிட்டது.

வைத்தியர்கள்தான் இப்படியென்றால் வைத்தியசாலை நிர்வாகம் படு மோசமானதாகவே காணப்படுகிறது. இரவு நேரத்தில் வைத்தியசாலை டெலிபோன் ஊழியர்களின் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பயன்படுத்தும் பொதுச் சொத்தாகி விடுகிறது.

நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவு விடயத்திலும் பெரும் மோசடிகள் நடைபெறுகின்றனவாம்.

காலையில் ஒப்பந்தக்காரர்களால் கொண்டுவரப்படும் உணவு வகைகளில் பாதி நண்பகலில் ஒப்பந்தக்காரர்களிடமே திரும்பிச் சென்று விடுகிறதாம். நோயாளர்களுக்கு வழங்கச் சிபாரிசு செய்யப்பட்ட உணவில் பாதிதான் வழங்கப்படுகின்றதாம். இதனை மேற்பார்வை செய்யும் அதிகாரிக்கு மாதாந்தம் சுளையாக 5 ஆயிரம் ரூபா போய்ச் சேர்ந்துவிடுமாம்.

கடந்த வாரத்தில் திடீரென வைத்திசாலையின் சவச்சாலைக் காவு வண்டி (ஸ்டெச்சர்) காணாமல் போய்விட்டது. தேடிப் பார்த்த போது அது பின்னால் இருக்கும் மலர்ச்சாலையின் வாழைத் தோட்டத்தில் மறைத்து விடப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஆயினும் அது பற்றி பொலிசிலே ஏதும் முறைப்பாடு செய்யப்படவில்லை. சத்தம் சந்தடியின்றி திரும்பக் கொண்டு வந்து வைத்தியசாலையில் விடப்பட்டுவிட்டது. விசாரித்தால் விற்றவரிலிருந்து வாங்கியவர் வரை ரகசியம் அம்பலமாகி விடுமென்பதால் மூடி மறைக்கப்பட்டது.

வைத்தியசாலையின் தாதிமார் பற்றாக்குறை காரணமாக 7, 8ஆம் வார்ட்டுகளில் தாதியர் எவருமில்லாத நிலை. இதனால் அங்கு வெளியார் பலரும் தங்கி லொஜ்கள் போலவே அந்த வார்ட்டுகள் இயங்குகின்றன.

சாராயம், கசிப்பு என்பனவற்றின் புழக்கமெல்லாம் அங்கு இரவு வேளையில் தாராளமாம்.

இவ்வளவு அநியாயமும், அட்டூழியங்களும் நடைபெறும் போது உயரதிகாரிகள் என்ன செய்கிறார்கள்?.

இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய பொறுப்புள்ள அதிகாரியாக முன்னர் இருந்தவர் ஒரு டாக்டர்.

அவர் மன்னார் வைத்தியசாலைக்கு ஒரு கிலோ சீனி விநியோகிக்க 175 ரூபாவும், ஒரு கிலோ முட்டைக்கு 200 ரூபாவும் ஒப்பந்தக்காரர்களுக்கு ஒதுக்கிக் கொடுத்து மாட்டுப் பட்டிருக்கிறார். அவர் தனது சிகிச்சை நிலையத்தில் தாதியாக இருந்த பெண்ணைக் கற்பழித்தார் என்று தமிழ்க் கட்சி ஒன்றிடம் வாங்கிக் கட்டியவர்.

இன்னொரு பணிப்பாளராக இருந்தவர் தென்பகுதிக்குச் செல்வதற்காக எடுக்க வேண்டிய பாதுகாப்பு அனுமதிப்பத்திரத்தை எடுக்காமலே பலரை நோயாளிகளாகக் காட்டி அம்புலன்ஸ் மூலம் தென்பகுதிக்கு அனுப்பி வைத்தவர். அதன் மூலம் சம்பாதித்தவர் என்று சொல்லப்படுகிறது.

இப்போதிருக்கும் பணிப்பாளர்கள் பற்றியும், பல்வேறு புகார்கள், இவர்களெல்லாம் யாரை, எங்கே, என்னத்தைத் தட்டிக் கேட்கப் போகிறார்கள்? பாதிக்கப்பட்ட மக்கள் இப்படி அலுத்துச் சலிக்கிறார்கள்.

— வன்னி மைந்தன்



# "நான் ஏற்றுவதும் இல்லை இறக்குவதும் இல்லை" - தேவயானி

திரைத் தாரகைகளுள் அதிஷ்டக்காற்று இப்போது சிறிது காலமாகத் தேவயானியின் பக்கமே வீசிக்கொண்டிருக்கிறது. குடும்பப்பாங்கான கரெக்டரா? கூப்பிடு தேவயானியை என்ற அளவுக்கு குடும்பப் பாங்கான வேடங்களில் நடித்து வருகின்றார்.

இவரது நடிப்புக்கு பிளஸ் பொயின்டாக அடக்கமான முகம். ஆர்ப்பாட்டமில்லாத தோற்றம், படங்களில் பார்க்கும்போது சகோதரியை, பக்கத்து வீட்டுப்பெண்ணை நண்பியைப் பார்த்த உணர்வு ஒவ்வொருவர் மனதிலும் தோன்றுகிறது என்றால் அது மிகையாகாது.

சமீபத்தில் வெளிவந்து வெற்றிநடை போட்டுக் கொண்டிருக்கும் 'வல்லரசு', 'என்னம்மாகண்ணு', 'தெனாலி' என்று வெற்றிப்படங்களின் நாயகியாக வலம் வந்து கொண்டிருக்கும் தேவயானியை சைதாப்பேட்டையிலுள்ள நடிகை லட்சுமியின் வீட்டில் 'விண்ணுக்கும்மண்ணுக்கும்' படப்பிடிப்பில் சந்தித்தபோது, நூறு நாட்களுக்கு மேல் நடந்து கொண்டிருக்கும் இப்படத்தின் படப்பிடிப்பில் பொறுமையாக நடித்துக்கொண்டிருந்தார்கள் விக்ரமும் தேவயானியும்.

படப்பிடிப்பின் இடைவேளையின்போது, தேவயானி நம்முடன் உரையாடினார்.

**கே:- கலைமாமணி விருது, 'பாரதி'யில் செல்லம்மாவாக நடித்த பெருமை என்று ஏகப்பட்ட சந்தோஷத்தில் இருக்கிறீர்களாமே!**

ப:- சந்தோஷம் மனதில் நிறைந்திருப்பது என்னமோ உண்மைதான். அதிலும் மகாகவி பாரதியாரின் மனைவியாக எனக்கு நடிக்கக் கிடைத்தது வரப்பிரசாதமே.

**கே:- ராசியான நடிகை என்று உங்களைக் கூறுகின்றார்கள். உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன?**

ப:- ஐஸ்தானே. எனக்கு குளிர் ஒத்துக்காதுங்க. ஜலதோஷம் பிடிச்சிடும் என்று கூறிச் சிரித்தவர். சிரித்தபடியே தொடர்கிறார். நான் நடிக்கும் படங்களில் மாறுபட்ட கதைகள் இருக்கும்படியாகப் பார்த்துக் கொள்கிறேன். ஒன்று ஆக்ஷன் சென்டிமென்ட்ஸா இருந்ததுன்னா மத்தது பேமிலிடைப்பாக இருக்கும்.

இப்போ என்னோட சமீபத்திய ரிலீஸ் 'வல்ரசு', 'என்னம்மா கண்ணு', 'பாரதி', 'தெனாலி' படங்களின் கதை ஒன்றுக்கொன்று வித்தியாசமானது.

'வல்லரசு' ஆக்ஷன் + சென்டிமென்ட்ஸ் கலந்த கதை. இதில் ஹீரோயிசம் தான் அதிகம் இருந்தது.

'என்னம்மா கண்ணு'வில் நடுத்தர குடும்பத்துப் பெண்ணுக்குரிய ஆசாபாசங்கள் நிறைஞ்ச ஒரு கரெக்டர் எனக்குக் கிடைச்சது. 'பாரதி'யில் யதார்த்தமான செல்லம்மா கரெக்டர்.

'தெனாலி'யில் மனநோயாளி ஒருவரைக் குணப்படுத்தும் டாக்டரிற்கு மனைவியாக நடிக்கும் வேடம். ஸோ! நான் கதைகளைத் தேர்ந்தெடுக்கும் முறையே எனது வெற்றியின் ரகசியம்.

**கே:- நீங்கள் நடிக்க ஆசைப்படும் கரெக்டர் எது?**

ப:-ஆசைப்படும் கரெக்டரை சொல்வதை விட, எனக்குக் கிடைத்த செல்லம்மா கரெக்டரை நான் ஆர்வமுடன் செய்த கரெக்டர் என்று சொல்லலாம்.

**கே:- சமீபத்தில் தீபாவளி ரிலீஸாக வெளிவந்த 'கண்ணுக்கு கண்ணாக'வில் முரளிக்குத் தங்கையாக நடித்திருக்கிறீர்களே! இதனால் உங்கள் ஹீரோயின் இமேஜ் பாதிக்கப்படாதா?**

ப:- இதுவரை வெளிவந்திராத மாறுபட்ட அண்ணன்- தங்கை கதையிது. அதில் எனக்குத் தங்கை கரெக்டர் என்றாலும், கதையே என் கரெக்டரைச்சுற்றித்தான்.

**கே:- கதாநாயகிகளெல்லாம் கவர்ச்சி அலையில் அடிபட்டுப் போய்க் கொண்டிருக்கும் போது நீங்க மட்டும் இந்த அலையில் எப்படித் தாக்குப் பிடிக்கிறீங்க?**

ப:- எந்தத்தயாரிப்பாளரும், இயக்குநரும் அந்த மாதிரியான கதையோட என்கிட்டே வர்றதில்ல. நான் எப்படிப்பட்ட கரெக்டர்ஸை செய்து வர்றேன்னு அவங்களுக்கு நல்லாவே தெரியும்? ரசிகர்கள் அவங்க குடும்பத்தில் ஒருத்தியாவே குடும்பப் பொண்ணாவே பார்க்கிறாங்க. அதனால் நான் கிளாமராக நடிச்சாலும் ஏத்துக்க மாட்டாங்க. அதுமட்டுமல்ல கரெக்டர் ரோல் செய்றவங்களோட பீரியட் முடிஞ்சிடுச்சு (ரேவதி, சுஹாசினி, சங்கீதா, ராதிகா, ஊர்வசி) அதனால் எனக்குப் போட்டின்னு யாரும் கிடையாது.

**கே:- தற்போது நடித்து வரும் படங்கள் பற்றி!**

ப:- விக்ரம் ஜோடியாக 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' பார்த்திபன் ஜோடியாக 'நினைக்காத நாளில்லை' முரளிக்கு ஜோடியாக 'ஆனந்தம்' விஜய்க்கு ஜோடியாக 'ப்ரன்ட்ஸ்' லிவிங்ஸ்டன் ஜோடியாக 'என் புருஷன் குழந்தை மாதிரி', 'உனக்கும் எனக்கும் கல்யாணம்'

**கே:- உங்களுக்கும் ரம்பாவுக்கும் இடையே இருந்த மனக்கசப்பு 'ஆனந்தம்' படஷூட்டிங்கில் விலகி விட்டதாமே?**

ப:- நாங்கள் எப்போதுமே நல்ல நண்பிகள்.

**கே:- திரையுலகில் இப்போது நடிக - நடிகையரின் சம்பளம் குறைக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினை எழுந்துள்ளது. உங்கள் நிலைப்பாடு என்ன?**

ப:- என்னைப் பொறுத்த வரை எனக்கு நியாயமான நிரந்தரமான சம்பளம் கிடைக்கிறது. நான் சம்பளத்தை ஏற்றுவதுமில்லை. இறக்குவதுமில்லை.

இந்தப் பிரச்சினை சினிமா இன்டஸ்ரியிலே பெரிய பொறுப்பில் இருக்கிறவங்க பேசி முடிவெடுக்க வேண்டிய விஷயம்.

ஷாம்



வையாபுரி

## பெண்தேடும் நடிகர்

பெண் தேடும் நடிகர்

**சிரிப்பு நடிகர் வையாபுரி கார், செல்போன் என்று ஓரளவு முன்னேறி விட்டார். இனி என்ன ஒரு பெண்ணைப் பார்த்து கால்கட்டுப் போட்டுக் கொள்ளடா என்று வையாபுரியின் தாயார் கூறவே பெண்தேட ஆரம்பித்தார். ஆனால் பெண்தான் இன்னும் கிடைத்த பாடாக இல்லையாம்.**

'தெனாலி'யையும் மிஞ்சி விட்டதாம் 'ஆளவந்தான்' விற்பனை. இந்த சந்தோஷத்தில் மிதக்கும் கலைப்புலி தாணுவும் இதுவரை இல்லாத அளவு செலவு செய்திருக்கிறாராம்.



முரளி, விக்ரம், தேவயானி. படம்- கண்ணுக்குக் கண்ணாக



## திரை மறைவில்

*"இப்ப புதுசா வர்ற நடிகைகள் வாய்ப்பைப் பிடிக்கிறதுக்காக என்ன மாயம் பண்றாங்களோ தெரியல்ல" அலுத்துக் கொண்டார் சினிமாக் குருவியார். காரணம் கேட்டதற்கு "பின்ன என்ன ஸார் இன்னும் முதன்முதல்ல நடிச்ச படமே வெளிவரல. அதுக்குள்ள கடல்ல பூவெடுத்த பொண்ணு கைவசம் நாலஞ்சு படங்கள். எப்படின்னு கேட்டா முரளி ஸார் சிபாரிசு பண்றார், பிரபு ஸார் சிபாரிசு பண்றார் என்று 'உல்டா' விடுதுப்பா." (ஒண்ணுமே புரியல உலகத்தில என்னமோ நடக்குது. மர்மமா இருக்குது) சினிமாக் குருவியார் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு பாட, பாடியவரை இடைமறித்து "நமக்கேன் வம்பு. நாலுபடம் கிடைச்சு நல்லா இருந்தா நல்லதுதானே" நாம் உசுப்பேற்றவே.*

*"நாலுபடம் நடிச்சு நல்லா இருந்தா பரவாயில்லை. நமக்கே பந்தா காட்டினா" சினிமாக்குருவியார் முகத்தில் கோபம் தெரிந்தது.*

*"என்ன சொல்றீங்க குருவியாரே பந்தாவா?" ஏற்கனவே விஷயத்தை அரசல் புரசலாக கேள்விப்பட்டிருந்தாலும் குருவியாரின் வாயைக் கிளறினால் புது விஷயம் ஏதாவது அகப்படும் என்றெண்ணி அவரையே பார்த்துக் கொண்டிருந்தோம் "மும்பையிலிருந்து வந்த தாஜுப்பொண்ணு பண்ற தாஜாவிலே தயாரிப்பாளர்களும் நடிகர்களும் அப்படியே கிறங்கிப் போச்சினமாம்.*

*ஷூட்டிங்கில் ஏதாவது சிக்கல் என்றாலும் மூக்கை நுழைச்சு ஐடியாக்களை இலவசமாக வழங்கி சிக்கலை விக்கவின்றித் தீர்த்து விடுகிறாராம்." "அப்போ அது நல்ல விஷயம் தானே! யார் குத்தினாலும் அரிசி மாவானா சரிதானே!"*

*நாம் இடைமறித்துக் கூற.*

*"படப்பிடிப்பில் இப்படி காஷுவலாக நடந்து கொள்வதனால் தான் தாஜா நடிகை சினிபீல்டில இப்போ படுபிஸி, இன்றைய திகதியில பிஸி நடிகை அவங்கதான். ஆனா பப்ளிக்கில் அம்மணி காட்டும் பந்தாவைத்தான் தாங்க முடியல்லையாம். அதுமட்டுமா? தற்போது காமெடியில் கலக்கிக் கொண்டிருக்கும் விவேகமான நடிகரும் அம்மணியின் காலடியில் சரண்டராம்." அப்போது, "இதக் கேள்விப்பட்டனீங்களே!" என்றவாறு திடீரென்று ஆஜரானாள் நிம்மி.*

*"விஷயத்தைச் சொன்னாலெல்லோ கேள்விப்பட்டனாங்களோ? இல்லையோ என்று சொல்லலாம்." சினிமாக்குருவியார் தன் புத்திசாலித்தனத்தை உள் நுழைத்தார்.*

*"நடிகரான இரண்டெழுத்து இயக்குநரை உடும்புப்பிடியாகப் பிடித்து விட்டாராம் கறுப்புக்கலரை விரும்பும் நாயகி. நாயகியைக் காதலித்து வந்த பூப்பறித்த மூன்றெழுத்து நாயகன் கடும் கோபத்தில் இருக்கிறாராம்."*

*நிம்மி கூறி முடிக்கவும் "அப்படியே! காதலருக்குத் தாடி தான் பரிசாமோ?"*

*எனக்கும் கொஞ்சம் அலுவல் கிடக்கு. அடுத்த வாரம் இன்னும் பல தகவல்களோடு சந்திப்போம் என்றவாறு எழுந்தார் குருவியார்.*



சிம்ரன்-விஜய் படம்-'ப்ரியமானவளே'

# பிரிந்த தம்பதியரை இணைத்த "ப்ரியமானவளே"

சினிமாப்படம் இரு பிரிந்த தம்பதியரை ஒன்று சேர்த்திருக்கிறது.

திருப்பத்தூரைச் சேர்ந்த விஜயகாந்தன் —அமுதா வாணியம்பாடியில் வசிக்கும் கோவிந்தசாமி—கோவிந்தம்மாள் ஆகிய இரு தம்பதியினரும் சில காலமாகப் பிரிந்து இருந்தவர்கள்.

'ப்ரியமானவளே' படம் பார்த்ததும் திருந்தி ஒன்று சேர்ந்து விட்டார்களாம். இதைக் கேள்விப்பட்ட விஜய் ரசிகர்கள் அந்தத் தம்பதியினரை சென்னைக்கு அழைத்து வந்தனராம். அவர்களுக்குப் பட்டுச்சேலை, பட்டுவேட்டி, இனிப்புக் கொடுத்து வாழ்த்தி அனுப்பியிருக்கிறார் விஜய்



பாளையத்து அம்மன்

# வசூல் மழை!

'பாளையத்து அம்மன்' படம் பெருமளவில் வசூலை அள்ளிக் குவித்திருப்பதைத் தொடர்ந்து பக்திப் படங்களின் வரவு அதிகரித்திருக்கின்றது.

'சிவகாமி', 'தாலிகாத்தஅம்மன்', 'ஸ்ரீராஜ ராஜேஸ்வரி', 'நாகேஸ்வரி', ஆதிசக்தியின் அற்புதங்கள் என்று பக்திப் படங்களின் பட்டியல் நீளுகின்றது. இதில் இயக்குநர் சிகரத்தின் மகள் தயாரிக்கும் 'ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி' படத்தில் தமிழ் நாட்டில் உள்ள 160 அம்மனின் பெயர்களும், வருவது போன்று பாடல் எழுதி கிராபிக்ஸில் படமாக்கி இருக்கிறார்களாம்.

# லைலா... ஜாலி

லைலாவின் அருகில் அமர்ந்தால், அமர்ந்தவர் பாடு அவ்வளவு தான். டயலாக்கோடு டெயில் பீஸாக. ஒரு 'ஏ' ஜோக்கை சொல்லித் தூள் கிளப்பி விடுகின்றார். அமர்ந்தவர் லொள்ளு பார்ட்டி என்றால் ஓகே. கொஞ்சம் டீசன்ட்டான மனிதர் என்றால்...



லைலா

## குட்டிச் செய்திகள்

* அஜித்குமார் ஹீரோவாக நடிக்கும் 'தீனா' படத்தில் முக்கியமான வில்லன் பாத்திரத்தில் மலேஷியா வாசுதேவனின் மகன் யுகேந்திரன் நடிக்கிறார்.

* 'முகவரி' துரையின் இயக்கத்தில் விக்ரம் நடிக்க உருவாகி வரும் 'காதல் சடுகுடு', 'வருஷம் 16' போன்று முழுக்க முழுக்க ஒரு குடும்பத்தையே உள்ளடக்கிய படமாக உருவாகி வருகிறதாம்.

## காதலிக்க நேரமில்லை



அருண்குமார், ரம்பா படம்: அன்புடன்

'காதலிக்க நேரமில்லை, காதலிக்க பெண்ணும் கிடைக்கவில்லை' என்கிறார் நடிகர் அருண்குமார். இதுவரை நடித்த படங்களில் இல்லாத எதிர்பார்ப்பைத் தேக்கி வைத்துக் கொண்டு நடித்த 'அன்புடன்' வெளிவந்து சறுக்கலைக் கொடுத்திருக்கிறது. இப்போது நடித்து வரும் 'புத்தன்' படத்தின் கதையும் ஸ்டெடியாக இருப்பதனால் தயாரிப்பாளர்களின் பார்வை அருண்குமாரின் மீது விழுந்திருக்கிறது.

# செஞ்சுரி அடிக்கும் ரோஜா



'செம்பருத்தி' மூலம் திரையுலகில் காலடி எடுத்து வைத்த ரோஜா தனது காதலர் செல்வமணியின் புதிய தயாரிப்பு 'பொட்டு அம்மன்' மூலம் செஞ்சுரி அடிக்கப்போகின்றார். 'பொட்டுஅம்மன்' ரோஜாவுக்கு நூறாவது படம். (சபாஷ் ரோஜா)

புதுமுகம் வேணு என்பவர் கதாநாயகனாக அறிமுகமாகின்றார். இவர்களுடன் கே. ஆர். விஜயா, சுவலட்சுமியும் நடிக்கின்றார்கள்

# அஜித்துக்கு இப்படியா?



'தீனா', 'சிட்டிசன்' படங்களில் பிஸியாகவுள்ள அஜித்குமாரை வைத்து அடுத்து படத்தைத் தயாரிக்கப் போகின்றவர் ஆஸ்கார் பிலிம்ஸ் ரவிச்சந்திரன். இதன் இயக்கத்தை எழில் கவனிக்கப் போகின்றார்.

படத்திற்காக அஜித் கொடுத்திருந்த கால்ஷீட் நெருங்கிவிட ஷூட்டிங் தொடங்க ஏற்பாடு செய்யப்பட்டது.

இந்நேரத்தில் புதுப்படப்பிடிப்பு தொடங்கக் கூடாது என்கிற தயாரிப்பாளர் சங்க முடிவுக்கு கட்டுப்பட ரவிச்சந்திரன் மறுப்பு தெரிவித்தார். சங்கம் டைரக்டர் எழிலை அழைத்துப் பேசியது அவரும் இடக்கு மடக்காகப் பேசவே.

என்ன நிர்ப்பந்தமோ... ''படப்பிடிப்பை இப்போதைக்குத் தொடங்குவதில்லை'' என்று ரவி உறுதி கொடுத்து விட்டார். இவர்களும் குழம்பி என்னையும் குழப்பி விட்டார்களே என்ற எரிச்சலில் இருக்கிறார் அஜித்.

ஏதாவது வித்தியாசமாக செய்து சாதிக்க வேண்டும் என்று ''சிட்டிசன்'' படத்தில் அஜித்குமார் ஒன்பது வேடத்தில் நடித்து வருகின்றார். அஜித்தை விட்டேனா பார் என்று கூறும் விதமாக 'ஜீன்ஸ்' நாயகன் பிரசாந்தும் புதிய படமொன்றில் 5 வேடங்களில் நடிக்கப் போகின்றார். (வேடத்தைக் கூட்டினால் மட்டும் போதாது கதையின் தரத்தைக் கவனிங்கப்பா!)

# விஜி தற்கொலை மர்மங்களின் அம்பலம்!

'கோழி கூவுது' என்ற தமிழ்ப்படத்தில் கதாநாயகியாக அறிமுகமாகிப் பல படங்களில் நடித்த பிரபல நடிகை விஜி கடந்த மாதம் 27ஆம் திகதி தற்கொலை செய்து கொண்டார்.

கராத்தேயில் கறுப்புப் பட்டியைப்பெற்ற துணிச்சலான நடிகை எனப்பெயர் பெற்றவர் இப்படித் தன் வாழ்வை முடித்துக் கொள்வதற்கு காதல் தான் காரணம்.

'தாயகம்' படத்தை இயக்கிய டைரக்டர் ரமேஷ் என்பவரையே விஜி காதலித்துள்ளார். (ரமேஷ் ஏற்கனவே திருமணமானவர்) தன்னைத் திருமணம் செய்யுமாறு விஜி வற்புறுத்தவே கழுவிய மீனில் நழுவிய மீனாக மறுத்திருக்கிறார் ரமேஷ். காதல் தோல்வியின் காரணமாக விஜி தற்கொலை செய்து கொண்டார்.

விஜி கைப்பட எழுதி வைத்திருந்த கடிதங்களையும் முதல்வருக்குத்தானே பேசிப்பதிவு செய்துள்ள கசெட் ஒன்றையும் பொலிஸார் கைப்பற்றியிருக்கின்றார்கள்.



# சகல சமூக நோய்களுக்கும் அல்குர்ஆனில் சிறந்த மருந்து

இன்று உலகிலே எத்திசை நோக்கினும் ''பிரச்சினை, குழப்பம், நோய், ஒழுக்கச் சீர்கேடு'' இப்படியான சொற்களே எமது காதுகளில் எதிரொலித்துக்கொண்டு இருக்கின்றன.

இவைகளை இல்லாதொழிக்க அரசாங்கங்கள் தத்தமது நாடுகளில் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்ட வண்ணம் இருக்கின்றன. எனினும், எதிர்பார்க்கப்படும் பயன் இல்லை. காரணம்...?

அதனை பின்வரும் அல்–குர்ஆன் வசனம் எமக்குத் தெளிவு படுத்துகின்றது:

''ஒரு சமூகம் தன்னைத் தானே மாற்றிக் கொள்ளாத வரை இறைவன் அதனை மாற்றுவதில்லை''

இங்கு ''தன்னைத் தானே திருத்திக் கொள்ளல்'' என்பது ஒருவன் தான் மேற்கொள்ளும் ஒவ்வொரு நடவடிக்கையும் சமூகத்திற்கு என்ன பலனைக் கொடுக்கப் போகிறது, என்பதை சீர்தூக்கிப் பார்த்து அதனை மேற்கொள்ள வேண்டும் என்பதையே குறிக்கிறது.

மனிதனை இறை பயம், இறை சட்டம் என்பன ஆளும் போதே அவனது செயல்கள் சமூகத்திற்கு பிரயோசனமளிப்பவையாக அமைவது சாத்தியமாகும்.

ஏனெனில் ஒருவன் செய்யும் தவறுகள் மற்றவர்களின் கண்களில் படாத போது அவன் சட்டத்தின் பிடியிலிருந்து தப்புவதற்குத் தயங்கமாட்டான். இதனால் உலகில் தீமைகள், அனாசாரங்கள் தொற்று நோய் போல் பரவுவதைத் தடுப்பது சிரமமான காரியமாகும்.

இதனாலேயே இஸ்லாம் தீமைகளைக் களைய முற்படு முன் அவை உருவாக்கி வளர்க்கப்படும் ஒரு சூழல் தோன்றுவதைத் தடுப்பதில் அதி முக்கிய கவனம் செலுத்துகிறது.

விபசாரம் என்பது ஒரு பஞ்சமா பாதகமாக இருந்தாலும், அதைத் தடுக்கும் விடயத்தில் கூட இஸ்லாம் ;

''நீங்கள் விபசாரத்தை நெருங்க வேண்டாம்'' என்ற வசனத்தினூடாக விபசாரம் என்ற சமூகத் தீமையை விட அது உருவாகும் சூழலைத் தடுப்பதே தலையாய கடமை என்பதை உணர்த்தி நிற்கிறது.

இங்கு 'விபசாரத்திற்கு நெருங்குதல்' என்ற சொற்றொடரினூடாக அது சமூகத்தில் பரவுவதற்கு ஏதுவாக திறந்து விடப்பட்டிருக்கும் அனைத்து வழிகளையும் குறிக்க வருகிறது என்பதில் இரு

**குற்றங்களை விட அவை உருவாகும் சூழலைத் தடுப்பதிலேயே இஸ்லாம் அதிக கவனம் செலுத்துகிறது!**

கருத்திற்கு இடமில்லை. அதாவது, ஆபாச பாடல்கள், காட்சிகள் இன்னும் பல...

அதேவேளை, பெண்கள் தங்கள் கணவன் மாத்திரம் காண வேண்டிய அழகைச் சந்தையில் கடைபோட்டு விளம்பரப்படுத்த ஆரம்பிக்கும் போது அதற்கான கேள்வி சமூகத்தின் பல மட்டங்களிலிருந்தும் எழுவதைத் தவிர்க்க முடியாது.

ஆனால் ஒரு பொருளை ஒருவர் மாத்திரமே விலைகொடுத்து வாங்கலாம். பணமிருந்தும் அதனைத் தன்னால் பெற முடியாது போய்விட்டதே என்று ஆதங்கப்படுபவன் என்ன செய்வான்?

பாவம்...! அவனது மனோ இச்சை அவனது அறிவை விஞ்சிவிட்டால்...? விளைவு...? பலாத்காரமாகவேனும் அதனை அடைய முயற்சிகள் நடக்கும். இது சமுகத்தில் அன்றாடம் நாம் காணும் நிகழ்வு. அதனைத் தடுப்பதற்கான நமது நடவடிக்கை...?

இத்தகைய சமூகத் தீமைபரவாதிருக்கவே அல்–குர்ஆன் ;

''நபியே! உம்முடைய மனைவியருக்கும் முஸ்லிமான பெண்களுக்கும் நீர் சொல்வீராக, அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ளவும். தமது உடலில் வெளிப்படையாகத் தெரியும் பகுதிகளைத் தவிர (முகம், கை) ஏனைய பகுதிகள் அனைத்தையும் மறைத்துக் கொள்ளவும்'' என 1400 ஆண்டுகளுக்கு முன்பே முன்னெச்சரிக்கை செய்துவிட்டது.

இதே போன்று களவு இல்லாது ஒழிக்கப்பட வேண்டுமெனில், வறுமை இல்லாத ஒரு சமூக அமைப்பு முதலில் உருவாக்கப்பட வேண்டும்; அல்லாதவிடத்து திருட்டுக்குரிய தண்டனை வழங்கப்பட முடியாது என்பதுவே இஸ்லாத்தின் ஆணித்தரமான கருத்தாகும்.

இதன் காரணமாகவே நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின் ஆட்சி செய்த 'நேர்மையான ஆட்சி' என உலகத் தலைவர்களால் வர்ணிக்கப்படும் இரண்டாம் கலீபா(பிரதிநிதி) உமர் (ரழி) அவர்களின் ஆட்சியில் பஞ்சத்தின் காரணமாகத் திருடிய ஒருவருக்குத் தண்டனை வழங்கப்படவில்லை.

இப்படியாக ஒட்டுமொத்தமாக அனைத்து தீமைகளையும், அதற்கு இஸ்லாம் வழங்கியுள்ள தண்டனைகளையும் ஒரு முறை அலசிப் பார்த்தால் இந்த உண்மையை மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளலாம்.

ஆகவே, புகையிலை உற்பத்தியைத் தடுக்காது விட்டுவிட்டுப் 'புகை பிடித்தல் உடல் நலத்திற்குக் கேடாக அமையலாம்' என்று பிரசாரம் செய்வதும் –

பெண்களைச் சந்தையில் ஆண்களின் கண்களுக்கு விருந்தாக ஆக்கிவிட்டு, 'விபசாரத்தினால் எய்ட்ஸ் பரவுகிறது ; இதயத்தை ஒருவருக்கே உரிமையாக்குங்கள்' என்று உபதேசம் செய்வதும் பயனற்ற செயல்கள். இப்படியான வைத்தியத்தால் சமூக நோய் தீரப்போவதில்லை.

நோய் எங்கோ இருக்க எதற்கோ வைத்தியம் செய்வதால் உரிய பரிகாரம் கிடைக்காது. அதுவே இஸ்லாத்தின் அறுதியானதும் இறுதியானதுமான முடிவாகும்.

—பைஸால் எம்.மதனி

# விண்வெளி நிலையத்தில் எண்மர் கொண்டாட்டம்



விண்வெளியில் ''அல்பா'' ஆராய்ச்சி நிலையம்

5 விண்வெளி வீரர்களுடன் அமெரிக்க ரொக்கட் விண்ணில் செலுத்தப்பட்டது. அது விண்வெளியில் கட்டப்பட்டு வரும் ஆராய்ச்சி நிலையத்தை அடைந்தது. அங்கு விண்வெளி வீரர்கள் கிறிஸ்துமஸ் பண்டிகையைக் கொண்டாடுவார்கள்.

விண்வெளியில் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகள் ஜப்பான் ஆகியவை சேர்ந்து 'அல்பா' என்று பெயர் கொண்ட சர்வதேச ஆராய்ச்சி நிலையத்தை அமைத்து வருகின்றன. 13 மாடி கொண்ட இந்தக் கட்டிடத்தில் ஏற்கனவே 3 விண்வெளிவீரர்கள் தங்கி இருந்து பணியாற்றி வருகிறார்கள்.

அந்த ஆராய்ச்சி நிலையத்துக்குத் தேவையான மின்சாரத்தை சூரிய சக்தி மூலம் உற்பத்தி செய்வதற்காக 'சோலார் விங்க்ஸ்'களுடன் 5 விண்வெளிவீரர்கள் ஒரு ரொக்கட்டில் விண்வெளிக்கு அனுப்பப்பட்டனர்.

240 அடி நீளமும் 38 அடி அகலமும் கொண்ட இந்த சோலார் பேனல் 15,750 கிலோ எடை உள்ளது. இதில் பற்றரிகளும், ரேடியேட்டர்களும் இணைக்கப்பட்டுள்ளன.

விண்வெளி ஓடத்தில், 5 விண்வெளி வீரர்கள் உள்ளனர். அவர்கள் பிரெண்ட்ஜெட் தலைமையில் செயற்படுவார்கள். அவர் அல்பா நிலையத்தில் பணியாற்றும் 3 வீரர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசுப்பொருள்களையும் கொண்டு சென்றிருக்கிறார். ஏற்கனவே அங்கு தங்கியிருக்கும் 3 வீரர்களுடன் இப்போது செல்லும் 5 வீரர்களும் சேர்ந்து கிறிஸ்துமஸ் பண்டிகையை அல்பா நிலையத்தில் கொண்டாடுவார்கள்.

கென்னடி விண்வெளி நிலையத்தில் இருந்து புறப்பட்ட விண்வெளி ஓடம், விநாடிக்கு 8 கிலோமீற்றர் வேகத்தில் பறந்து 2 நாட்களில் 'அல்பா' விண்வெளி நிலையத்தை அடைந்தது.

2,700 கோடி ரூபா மதிப்புள்ள சோலார் பேனல்களை விண்வெளி வீரர்கள் பொருத்துவார்கள்.

இது பொருத்தப்பட்டதும், அல்பா விண்வெளி நிலையத்துக்கு இப்போது கிடைப்பதைவிட 5 மடங்கு அதிகமாக மின்சாரம் கிடைக்கும்.

சோலார் பேனல்களில் உள்ள ஆயிரக்கணக்கான போட்டோ எலக்ட்ரிக் செல்கள் சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றும்.



விண்வெளி நிலையத்தில் பணிகள் ஆரம்பம்

பி. சின்னலெப்பை, கல்முனை

கே : ஆண்கள் பெண்களிடம் காட்டும் அன்பு எத்தகையது?

ப : "பட்டரி" போன்றது. அதாவது "சார்ஜ்" குறைந்ததும் "வீக்" ஆகிவிடும்.

ஆ. இராஜமனோகரன், கண்டி

கே : நம்நாட்டில் காதல் கல்லூரிகள் திறக்கப்பட்டால் எப்படியிருக்கும்?

ப : கல்விப் புனரமைப்பு மாறி புணரமைப்பு ஆகிவிடும்.

எஸ். அன்பன், மூதூர்

கே : ஏழையின் வியர்வையில் உருவாகுவது எது?

ப : பணக்காரனின் சொகுசு.

கே.ரி. றோஸ்மேரி, சிலாபம்

கே : சட்டம் ஏழைகளை அடக்கி ஆளுகிறது, ஆனால் பணக்காரனோ சட்டத்தை அடக்கி ஆளுகிறான். அது ஏன்?

ப : சட்டம் ஒரு கழுதை என்கிறார்களே. அதனால் தான்.

கே. சேகர், மட்டக்களப்பு

கே : பிரம்மச்சாரிக்கும் சம்சாரிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

ப : பிரம்மச்சாரி முனியப்பருக்குநேர்ந்த கடா. சம்சாரி வேள்விக்கு வந்த கடா. இருவரும் அப்பாவிகள் தான்.

வி.பி. சரஸ்வதி, தலவாக்கலை

கே : நல்ல பெயர் வாங்குவது எப்படி?

ப : எல்லாருக்கும் வளைந்து கொடுப்பதன் மூலம்.

ஆர். நிமலன், யாழ்ப்பாணம்

கே : கண்ணடிப்பது என்றால் என்ன?

ப : பருவக் கோளாறு.

என். ரகுநாதன், ஊரெழு

கே: மனிதன் இன்பத் திலும் துன்பத்திலும் நாடுவது எதை?

ப: அழகை. இல்லாவிட்டால் பாடையைக் கூடச் சோடிக்க முனைவானா?

வை. கோபால், செங்கலடி

கே : நடனத்தை விட நாடகத்தையே மக்கள் அதிகம் விரும்புவது ஏன்?

ப : நடனம் பெரும்பாலும் ஒருவரால் ஆடப்படுவது. நாடகம் பலரால் நடிக்கப் படுவது. அரசியல்வாதிகள் கூட்டுச் சேர்ந்து நடிப்பதைப் பார்த்துப் பார்த்து மக்களுக்கு இந்தப் பழக்கம் ஏற்பட்டுவிட்டது.

டி. தனசேகரன், ஹெந்தளை

கே : பணம் எத்தகையது?

ப : கவலைதருவது. பணம் உள்ளவன் பயத்தோடு வாழ்கிறான். பணம் இல்லாதவன் கவலையுடன் வாழ்கிறான்.

எப். குறூஸ், பாணந்துறை

கே : கடவுளுக்கு அடுத்தபடியாக நாம் மதிக்க வேண்டியது யாரை?

ப : யாரையும் மதிக்காவிட்டாலும் நேரத்தை மதித்து நடந்தாலே போதும்.

ஆர். தனபாலன், அக்கரைப்பற்று

கே : இளம் வயதில் காதலித்துக் கல்யாணம் செய்து கொள்பவர்களின் வாழ்க்கை எப்படி இருக்கும்?

ப : அவர்களின் வாழ்க்கை படமாளிகைகளிலும் கடற்கரைகளிலும் ஹோட்டல்களிலும் கழிந்துவிடுகிறது. எனவே அது "கை" இழந்த நிலையில் இருக்கிறது.

அக்பர், ஹல்ஸ்டோர்ப்

கே : உலகத்தில் எதை வெல்ல முடியும்? எதை வெல்ல முடியாது?

ப : பகையை வெல்ல முடியும். பசியை வெல்ல முடியாது. ஆனால் பசிக் கொடுமை காரணமாகப் பகைவர்கள் பலர் ஏற்பட்டு விடுகிறார்கள்.

எம். மெண்டிஸ், நுவரெலியா

கே : கட்டுக்காவல் இல்லாத கன்னியர் எப்படி இருப்பர்?

ப : வீதி ஓரத்தில் உள்ள சுமை தாங்கிபோல் இருப்பர்.


## சிங்கப்பூரில் கல்வியுடன் வேலைவாய்ப்பு

*1. டிப்ளோமா பாட நெறிகள் -*

சிங்கப்பூர் கல்வி நிலையங்களில் 3 வருட படிப்பு. க.பொ.த (சா/த) பரீட்சையில் தேர்ச்சியுடன் ஆங்கிலம், கணிதம், விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி அவசியம். டிப்ளோமா பெற்ற பின்னர், சிங்கப்பூரிலேயே மூன்று ஆண்டுகள் வேலைசெய்வதாக ஒப்பந்தம் செய்வோருக்கு கல்விக் கட்டணத்தில் 80 சதவீத மானியம் சிங்கப்பூர் அரசினால் வழங்கப்படும். அத்துடன் கல்லூரியில் சேர்ந்த ஆறு மாதங்களின் பின்னர் நடைபெறும் முதலாம் தவணைப் பரீட்சையில் நன்கு சித்தியடைவோர் தொடர்ந்து படித்தபடியே பகுதிநேர வேலை செய்வதற்கு அனுமதி பெற முடியும். 30 வயதுக்குக் குறைந்தவர்கள் விரும்பத்தக்கது.

*2. தொழில்துறை சார்ந்த பாட நெறிகள் -*

இரண்டு ஆண்டுகால சான்றிதழ் படிப்பும் பயிற்சியும். க.பொ.த.(சா/த) பரீட்சையில் சாதாரண சித்தி போதும். படிப்புக்கான முழுச் செலவையும் மாணவர்களே செலுத்த வேண்டும். அரச மானியம் கிடையாது. ஆனால் சிங்கப்பூர் கல்லூரியில் முதலாம் ஆண்டு படிப்பை வெற்றிகரமாக முடிப்பவர்கள் தொடர்ந்து படித்தபடியே அது தொடர்பான நிலையங்களில் வேலை செய்வதற்கான அனுமதி பெறவும் வாய்ப்பு உண்டு. இவ்வேலைக்கு கணிசமான அளவு அலவன்ஸ் கிடைக்கும். 27 வயதுக்குக் குறைந்தவர்கள் விரும்பத்தக்கது.

*3. ஹோட்டல் பாட நெறிகள்*

சர்வதேச தரமும் அங்கீகாரமும் பெற்ற ஓராண்டுகால படிப்பும் பயிற்சியும். க.பொ.த.(சா/த) பரீட்சையில் ஆங்கிலத்தில் திறமைச்சித்தி அல்லது 'டோபல்' (TOEFL) ஆங்கில பரீட்சையில் (500 புள்ளிகள்) பெற்றிருத்தல் கட்டாயம். படிப்புக்கான முழுச செலவையும் மாணவர்களே செலுத்தல் வேண்டும். அரச மானியம் கிடையாது. ஹோட்டல் பள்ளியில் சேர்ந்த இரண்டு மாதங்களின் பின்னர், தொடர்ந்து படித்தபடியே அதனைச் சார்ந்த தொழில்துறைகளில் வேலைசெய்வதற்கான அனுமதிபெறும் வாய்ப்பும் உண்டு. இவ்வேலைக்கென கணிசமானளவு அலவன்ஸ் கிடைக்கும். விரும்பத்தக்க வயது 17-24.

மேற்கண்ட பாடநெறிகளுக்கு ஆண், பெண் ஆகிய இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

விசா ஒழுங்கு செய்து தரப்படும். தங்குமிட வசதி விருப்பத்தின் பேரில். எமது சிங்கப்பூர் கல்வி ஆலோசகர் டிசம்பர் 3 ஆம் வாரத்தில் கொழும்பு வருகிறார். சந்திக்க விரும்புவோர் தொலைபேசி மூலம் அலுவலக நேரத்தில் பதிவு செய்யவும்).

Co-ordinator
NSK International (Pvt) Ltd.,
Phone / Fax : 075-520928
(P/Calls during office hours - 9.00 am to 5.00pm only)
E-Mail : sing_study @hotmail.com


# சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

சக்தி TV

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 11.00-11.30 | | | | | | பெப்சி உங்கள் சொய்ஸ் | காலைக்கதிர் (நேரடி ஒளிபரப்பு) |
| 11.30-12.00 | | | | | | பாட்டுக்குப் பாட்டு | |
| 12.00-12.30 | | | | | | பொலிஸ் டயரி | |
| 12.30-13.00 | | | | | | ஸ்டார் சமையல் | சன் டிவி நிகழ்ச்சி |
| 13.00-13.30 | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சன் செய்திகள் | சக்தி வீக்கென்ட் மெட்னி | சக்தி வீக்கென்ட் மெட்னி |
| 13.30-14.00 | அக்கா | அக்கா | அக்கா | வணக்கம் தமிழகம் | வணக்கம் தமிழகம் | | |
| 14.00-14.30 | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | சக்தி மெட்னி | | |
| 14.30-15.00 | | | | | | | |
| 15.30-16.00 | | | | | | நலந்தானா | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 16.00-16.30 | | | | | | டொப் 10 மூவிஸ் | வசந்த நிலா |
| 16.30-17.00 | சுப்பர் 10 | கலைச்சோலை | நம்மநேரம் | மீண்டும் மீண்டும் சிரிப்பு | திரை விமர்சனம் | சன் டிவி நிகழ்ச்சிகள் | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.00-17.30 | தமிழ் கார்ட்டூன் | தில்லானா தில்லானா | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | பூஞ்சோலை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 17.30-18.00 | கிருஸ்ண தாஸி | கிருஸ்ண தாஸி | குலவிளக்கு | குலவிளக்கு | குலவிளக்கு | இளமை புதுமை | சன் டிவி நிகழ்ச்சிகள் |
| 18.00-18.30 | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | கங்கா ஜமுனா.. | மீண்டும் கோமாளிகள் | காற்றாய் வருவேன் | கேள்வியின் நாயகன் | அரட்டை அரங்கம் |
| 18.30-19.00 | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | அம்மா | இசைக் கோலம் | ஆனந்தபவன் |
| 19.00-19.30 | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | அர்ச்சனைப் பூக்கள் | சாவித்ரி | சப்தஸ்வரம் |
| 19.30-20.00 | கதைநேரம் | தித்திக்கும் ஓசை | சத்யா | சீமான்களே சீமாட்டிகளே | பணம், பெண் பாசம் | இளையகானம் | புன்னகை |
| 20.00-20.30 | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் | செய்திகள் |
| 20.30-21.00 | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | வாழ்க்கை | நிம்மதி உங்கள்... | யன்னல் |

குடாநாட்டு வீதிகளில் இராணுவ வாகனங்களைக் கண்டால் பொதுமக்கள் அஞ்சி ஒதுங்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

இராணுவ வாகனங்கள் மோதிய சம்பவங்களில் அடுத்தடுத்து மாணவிகள் இருவர் சிக்கியதை அடுத்தே இந்த அச்ச நிலை தோன்றியுள்ளது.

பலாலியில் இருந்து யாழ். நகரம் நோக்கிச் சென்றுகொண்டிருந்த இராணுவ வாகனம் ஒன்று கடந்த 7ஆம் திகதி காலை உரும்பிராய்ப் பகுதியில் ஒரு பாடசாலைச் சிறுமியை மோதியதில் அவர் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

வசாவிளான் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த விக்கினேஸ்வரன் திவ்யா (தரம் 9) என்ற மாணவியே இந்த விபத்தில் கோரமாகப் பலியானார். பரீட்சைக்குச் சென்றுகொண்டிருந்த இந்த மாணவியை வேகமாக வந்த இராணுவ வாகனம் மோதிச் சிறிது தூரம் இழுத்துச் சென்றுள்ளது. இரத்தம் தோய்ந்த சீருடையுடன் மாணவி வாகனத்தின் கீழ்ப்பகுதியில் இருந்து வெளியே எடுக்கப்பட்டே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுசெல்லப்பட்டார்.

மறுநாள் 8ஆம் திகதி பலாலி வீதியில் வேகமாக வந்த இராணுவ அம்புலன்ஸ் ஒன்று பரமேஸ்வராச் சந்தியில் பல்கலைக்கழக மாணவி ஒருவரை மோதித் தூக்கி வீசியதில் அவர் படுகாயமடைந்து சுயநினைவிழந்த நிலையில் அவசர சிகிச்சைப்

அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

பரமேஸ்வராச் சந்தியில் இடம்பெற்ற விபத்தின்போது படையினர் நடந்துகொண்ட விதம் குறித்தும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

பொதுமக்களைப் பாதிக்கும் படையினரின் நடவடிக்கைகளுக்குப் பல்கலைக்கழக விரிவுரை யாளர்கள் மட்டத்தில் இருந்து எதிர்ப்புக் காட்டப் பட்டிருப்பது இதுவே முதல் முறை. அந்த வகையில் இந்த அறிக்கை பாதிக்கப்பட்டவர்களுக்குச் சற்று ஆறுதல் அளிப்பதாய் உள்ளது.

## கொல்லப்பட்டவர் அர்ச்சுனனா?

யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் படையினருடன் இடம்பெற்ற ஒரு மோதல் சம்பவத்தில் விடுதலைப்புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினரான அர்ச்சுனன் என்பவர் கொல்லப்பட்டிருப்பதாக இராணுவம் அறிவித்துள்ளது.

இணுவில் சிவகாமி அம்மன் கோயில் பின் வீதியில் கடந்த 10ஆம் திகதி முற்பகல் 11மணியளவில் படையினரும் விடுதலைப் புலிகளும் எதிர்பாராத விதமாக மோதியுள்ளனர். கிரனேட் குண்டு வெடிப்பு மற்றும் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களால் அந்தப் பகுதி சுமார் அரை மணிநேரம் அதிர்ந்தது.

முடுக்கிவிட்டிருந்தனர்.

## மணி ஓசை

கோப்பாய் பிரதேசத்தில் உள்ள ஆலய மணிகள் ஒலிக்க அப்பகுதிப் படையினர் தடைவிதித்திருப்பது குறித்து ஏற்கனவே இப்பகுதியில் தகவல் வெளியாகி இருந்தது.

மாவீரர் வார காலப்பகுதியில் – இந்த உத்தரவைப் படையினர் விடுத்திருந்ததால் அது மாவீரர் தினப் பாதுகாப்பு ஏற்பாடுகளில் ஒன்றாக இருக்கலாம் என்று கருதப்பட்டது.

ஆனால் மாவீரர் தினம் முடிந்து சில வாரங்கள் கழிந்த பிறகும் கூட இத்தடை நீடிப்பதாகத் தகவல். அங்குள்ள ஆலயங்களில் பூஜை வேளைகளில் மணி ஒலிக்காமலேயே அனைத்தும் இடம்பெறுகின்றன. இத்தடை இன்னும் எவ்வளவு காலத்துக்குத் தொடரும் என்று அங்கலாய்க்கின்றனர் ஆலய நிர்வாகிகள்.

திருக்கார்த்திகைத் தினத்தை ஒட்டிக் கடந்த 11ஆம் 12ஆம் திகதிகளில் மட்டும் இந்தத் தடையைப் படையினர் தளர்த்தி இருந்தனர். நீண்ட நாள்களின் பின் அந்த இரு தினங்களும் மணி ஓசையைக் கேட்கக் கூடியதாக இருந்தது.

## செபமாலை பேரணிக்குத் தடை

கடந்த சர்வதேச மனித உரிமைகள் தினமன்று யாழ். நகரில் சமாதானத்தை வலியுறுத்தி நடத்தப்பட

# இராணுவ நடமாட்டத்துக்கு யாழ் பல்கலை உயர்மட்டம் பலத்த கண்டனம்



## வடபுலத்தில்

பிரிவில் சேர்க்கப்பட்டார்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட இரண்டாம் வருட மாணவியான ஆனந்தராசா ராதிகா (வயது24) என்பவரே விரிவுரை முடிந்து விடுதிக்குச் சைக்கிளில் திரும்பிய சமயம் இராணுவ வாகனத்தால் மோதுண்டார். படுகாய மடைந்த நிலையில் மாணவி சுமார் 20நிமிட நேரம் வீதியில் கிடந்துள்ளார்.

அம்புலன்ஸ் சாரதி அவரை அவசரமாக ஆஸ்பத்திரிக்கு ஏற்றிச் செல்வதை விடுத்து மாணவி யின் அடையாள அட்டையைப் பரிசோதிப்பதில் ஈடுபட்டிருந்தாராம்.

பின்னர் மாணவியை அந்த இடத்திலேயே விட்டுவிட்டு அம்புலன்ஸ் கிளம்பிச் சென்றது. அது அப்பகுதியில் நின்ற பலருக்கும் வேதனையையும் ஆத்திரத்தையும் ஏற்படுத்தியது.

காயமடைந்த மாணவி பிறகு பொதுமக்களின் உதவியுடன் மோட்டார் சைக்கிள் ஒன்றில் ஏற்றப்பட்டு யாழ். ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சேர்க்கப்பட்டார்.

இராணுவ அம்புலன்ஸ்களில் இருந்தவர்களின் இந்நடத்தையை யாழ். பல்கலைக்கழக சமூகம் கண்டித்து அதிருப்தி வெளியிட்டிருக்கின்றது.

"படையினரின் கண்மூடித்தனமான நடமாட்டங்கள் குடாநாட்டு மக்களின் சுதந்திரமான போக்குவரத்துக்குப் பெரும் இடையூறு விளைவிக்கின்றன. எனவே கண்மூடித்தனமான வாகன நடமாட்டங்களைப் படையினர் உடன் நிறுத்த வேண்டும்"– இவ்வாறு கோரி யாழ். பல்கலைக்கழக சமூகவியல் சமூகம்

விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் சிலர் படையினரை எதிர்கொண்டபோது இந்த மோதல் வெடித்தது. மோதலின் இடையே ஒருவர் வீதியின் ஓரமாக இருந்த மதில் மீது பாய்ந்து வீடு ஒன்றினுள் புகுந்துள்ளார்.

மோதல் வெடித்த சிறிது நேரத்தில் மேலதிக படையினர் மோட்டார் சைக்கிளில் அந்தப் பகுதிக்கு விரைந்து வந்து சுற்றிவளைத்துக் கொண்டனர்.

வைத்தியலிங்கம் சின்னராசா என்பவரது வீட்டுக்குள் புகுந்த நபரின் சடலம் அன்று மாலை பொலிஸாரால் மீட்கப்பட்டது. வீட்டில் இருந்தோர் விசாரணை செய்யப்பட்டனர்.

அந்த வீட்டுக்குள் இருந்து மீட்கப்பட்ட சடலம் விடுதலைப்புலிகளின் அரசியல் பிரிவைச் சேர்ந்த அர்ச்சுனன் என்பவருடையது எனத் தெரியவந்துள்ளதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் குறிப்பிட்டுள்ளது.

படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் பகுதிகளில் உள்ள புலிகளின் நடவடிக்கைகளுக்குத் தலைமை வகித்துச் செயற்பட்டவர் இவர் என்று படை வட்டாரங்கள் நம்புகின்றன.

எனினும் அர்ச்சுனன் கொல்லப்பட்டிருப்பதை விடுதலைப்புலிகள் இன்னமும் உறுதிசெய்யவில்லை.

இணுவில், மல்லாகம், சுன்னாகம் பகுதிகளில் புலிகளின் நடமாட்டங்கள் அண்மைக்காலத்தில் அதிகரித்திருந்தன. புலிகளைத் தேடிப்பிடிக்கப் படையினர் இப்பகுதிகளில் தீவிர கண்காணிப்பையும்

இருந்த செபமாலைப் பேரணிக்குப் பொலிஸார் அனுமதி வழங்கவில்லை.

யாழ். கத்தோலிக்க மக்கள் இணைந்து இந்த செபமாலைப் பேரணியை நடத்த இருந்தனர். அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பொலிஸ் அனுமதியும் கோரப்பட்டது. பேரணியை நடத்த முதலில் அனுமதி வழங்கிய யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பின்னர் அனுமதியை ரத்துச் செய்துவிட்டார்.

இது யாழ். கத்தோலிக்க சமூகத்துக்குப் பெருத்த ஏமாற்றத்தைக் கொடுத்துள்ளது. பேரணி ரத்துச் செய்யப்பட்டதைத் தொடர்ந்து யாழ்.கத்தோலிக்க மறைமாவட்ட நீதி சமாதான ஆணைக்குழுவினால் யாழ். மரியன்னை பேராலயத்தில் அன்றைய தினம் சமாதான வழிபாடுகள் மட்டும் நடத்தப்பட்டன.

வழிபாட்டின் இறுதியில் சமாதானப் பேச்சுக்களை வலியுறுத்தி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கும் வே.பிரபாகரனுக்கும் அனுப்பிவைக்கப்பட்ட கடிதங்களின் பிரதிகள் அங்கு வாசிக்கப்பட்டன.

மனித உரிமைகள் தினத்தன்று வன்னி உட்பட நாட்டின் பல பகுதிகளிலும் ஊர்வலங்கள், பேரணிகள் நடத்தப்பட்டன. ஆனால் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரேயொரு அமைதிப் பேரணிக்கும் தடை விதிக்கப்பட்டுவிட்டது.

குடாநாட்டு மக்களின் மனித உரிமைகள் எந்தளவுக்குப் பேணப்படுகின்றன என்பதற்கு இதுவும் ஓர் எடுத்துக்காட்டு.

— வலிகாமத்தான்

# வாசகர் இதயம் பேசுகிறது

"மட்டக்களப்பு அபிவிருத்தி ரிமோட் கன்ரோல் மூலமா" என்னும் தலைப்பில் சுடர்ஒளியில் வெளிவந்த கட்டுரை தெளிவாகவும் சுவைபடவும் எழுதப்பட்டிருந்தது.
– பானுமதி நிவேந்திரா, செங்கலடி.

ராக்கிங் நிலைமைகள் அசிங்கமான நிலைக்குப் போய்விடக்கூடாது. ஆனால் அதனைத் தடை செய்யக்கூடாது என்று ஒரு பல்கலைக்கழக மாணவன் வாதிட்டிருந்தது சுவையாய் இருந்தது.
–எம். சதாசிவம், பட்டிருப்பு.

"சுடர்ஒளி" தரும் அரசியல் அதிரடி அபாரம். சிரிக்க வைக்கிறது. சிந்திக்கவும் வைக்கிறது. "பசாசா மிக்ஸ்" பகுதியில் வர்ணப்படங்கள் கூறும் நகைச்சுவைகள் பிரம்மாதம். பத்திரிகைகளில் நீ சுப்பர் ஸ்டார்தான்.
–ஜே.எம்.பாரீஸ், தெல்தெனிய.

ஜனாதிபதியின் அட்டைப்படம் கண்களைக் கவர்ந்தது. "ஜனாதிபதியின் ராஜதந்திரம்" என்னும் தலைப்பில் வெளியான கட்டுரையின் கருத்து சிந்திக்க வைத்தது.
– பா.சத்தியகுமார், வவுனியா.

அரசியல் கட்டுரைகள் அதிகரித்திருப்பது சுவையூட்டுகிறது. விளையாட்டுப் பகுதியும் பரவசமூட்டுகிறது.
– சே.நசூத்தீன், தெல்தோட்ட.

அனைத்து நாடுகளுக்கும் புலிகள் அதிரடிச் செய்தி விடுத்திருப்பது புதிய அரசியல் மாற்றத்தை ஏற்படுத்தவே செய்யும்.
– ஆ. சிவசாமி, சிலாபம்.

"தடுப்பற்ற வீதிக் குழியில் விழுந்த வாலிபன் மரணம்" என்னும் செய்திக் கட்டுரை எங்களை அதிர்ச்சியடைய வைத்துவிட்டது. இது போன்ற மரணங்கள் இனியும் வேண்டாமே.
– எல்.கணேசன் சேகர், கொழும்பு–13.

பாலியல் வல்லுறவுக்குள்ளான இளம் பெண் தன் சொந்த அனுபவங்களைத் துணிந்து நூல் வடிவில் வெளியிடும் துணிவுக்கு வந்துவிட்டாரே. தனது அவல வாழ்வு வேறு பெண்களுக்கு ஏற்படக்கூடாது என்ற அவரது சிந்தனை பாராட்டுக்குரியது.
–எ.மங்களேஸ்வரி,பண்டாரவளை.

யாழ்ப்பாணத்தில் தங்கப் புதையல் கண்டுபிடிக்கப்பட்ட விபரம் சுவையாக இருந்தது. அந்தப் புதையலின் சொந்தக்காரர் யார் என்பதை அறிய ஆவலாக இருக்கின்றது.
–தே. மாரிமுத்து, பாணத்துறை

மலையகம் எதிர்நோக்கும் தலைமைப் பிரச்சினை எங்களைச் சிந்திக்க வைத்திருக்கின்றது.
– ந. வேலுமணி, தலவாக்கலை.

"வவுனியா டாக்டர்கள் பற்றி பல அதிர்ச்சித் தகவல்கள்" கட்டுரையைப் பரபரப்புடன் படித்தோம். மிகுதி அடுத்த வாரம் என்று அறிவித்து விட்டீர்கள். அடுத்த இதழுக்காக ஆவலுடன் காத்திருக்கிறோம்.
– க. மோகன், மன்னார்

# பாலம் பழுது, வீதி வெள்ளக்காடு அம்பாறை மக்களுக்கு அநீதி!

அம்பாறை மாவட்டத்தில் பாலங்கள் நீண்ட காலமாகப் பழுதடைந்து கிடக்கின்றன. பல வீதிகள் சிறு மழைக்குக் கூட வெள்ளக்காடு ஆகிவிடுகின்றன. நெடுஞ்சாலைகள் அமைச்ச



பாலம் பழுதடைந்துள்ளதால் 04 தொன் எடைக்கு மேற்பட்ட வாகனங்கள் இப் பாலத்தினூடாகச் செல்ல வேண்டாமென - வீதி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளரின் அறிவித்தல் பலகை பாலத்தின் முன் பகுதியில் நடப்பட்டுள்ளது.

நித்திரை கொள்கிறதா? இப்படிப் பாதிப்படைந்துள்ள அம்பாறை மாவட்ட மக்கள் ஆத்திரத்தோடு கேட்கிறார்கள்.

மக்கள் நலனில் கண்ணும் கருத்துமாக இருக்கும் நெடுஞ்சாலைகள் அமைச்சர்




1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி களிஓடைப் பாலத்தின் புனர் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டதை "எதிர்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் பொருட்டு" நடப்பட்டுள்ள நினைவுக் கல்கள் மும்மொழிகளிலும் பாலத்தின் முன்பாக.

பௌசி கூட இந்த விஷயத்தில் கவனம் செலுத்தாமல் இருக்கிறாரே என்று பலரும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் மிக முக்கியமான போக்குவரத்துக்குரிய பிரதான பாதை ஒன்றில் அமைந்திருக்கும் மிகப் பழைமை வாய்ந்ததும், முக்கியமானதுமான பாலம் களிஓடைப் பாலம் ஆகும்.

கல்முனை - அக்கரைப்பற்று பிரதான வீதியைக் குறுக்கறுத்தோடும் கல்லோயா ஆற்றின் ஒரு பிரிவான களி ஓடை ஆற்றின்மேல் போடப்பட்டுள்ளது இப்பாலம்.

தினமும் பெரும் எண்ணிக்கையில் வாகனங்களும், பயணிகளும் போக்குவரத்துச் செய்யும் இந்தப் பாலம் 1903ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது.

இதனைக் குறிப்பிடும் வகையில் Ec.Davies, Engineer, 1903 - Government Factory எனும் தகவல் பாலத்தில் பொறிக்கப்பட்டுள்ளது.

இவ்வளவு பழைமையும் முக்கியத்துவமும் மிக்க இந்தப் பாலத்தின் கோலம் பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது.

பாலத்தின் பெரும்பாலான பகுதிகள் சிதைவுற்று ஓட்டை உடைசலாகவே காணப்படுகின்றன. அதனால் இப்பாலத்தினூடாக வாகனங்களைச் செலுத்திச் செல்வதில் சாரதிகள் பெரும் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

இதற்கும் மேலாக பாலத்தின் முன்பாக "ஒலுவில், களிஓடைப்பாலம் பழுதடைந்துள்ளதால் 4 தொன் எடைக்கு மேற்பட்ட வாகனங்கள் இப்பாலத்தினூடாகச் செல்ல வேண்டாம்" எனும் வீதி அபிவிருத்தி அதிகார சபைப் பொறியியலாளரின் "அபாயச்சங்கொலியாக" அறிவித்தல் பலகையும் நடப்பட்டுள்ளது.

கடந்த பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆட்சிக் காலத்தில் நீலாவணை தொடக்கம் அக்கரைப் பற்று வரையுமான பிரதான வீதியை அகலமாக்குவதற்கும், இந்தக் களிஓடைப் பாலத்தை புனரமைப்பதற்கும் முக்கிய அரசியல்வாதிகள் (மர்ஹூம் அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் உட்பட) முனைப்புக் காட்டினர்.

அப்போது போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சராகவிருந்து இந்த வேலைத் திட்டங்களுக்கு அனுமதி அளித்த இன்றைய நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி நேரில் வருகை தந்து ஆரம்பக் கட்டத்தில் வேலைகளைப் பார்வையிட்டார். ஆனால் வீதி அகலமாக்கும் வேலைத் திட்டம் ஆண்டுகள்கடந்தும் நத்தை வேகத்தில்தான் நடைபெறுகின்றன.


"நீயா? நானா?" போட்டியும், புழுக்கமும்தான் இத்தகைய நத்தை வேக செயற்பாட்டுக்குக் காரணங்கள் என மக்கள் அப்பொழுது பேசிக் கொண்டதையும் மறக்க முடியவில்லை.

களி ஓடைப் பாலத்தைப் பொறுத்த வரை இப்பாலத்தை முற்றாகப் புனரமைத்து அதனை இருமருங்கிலும் நடைபாதையுடன் கூடிய நவீன பாலமாக மிளிரச் செய்யப் போவதாக ஆரம்பத்தில் சூளுரைக்கப்பட்டது.

தடபுடலாகப் பாலப்புனரமைப்புக்கென ஆரம்ப வேலைகள் தொடங்கப்பட்டன. முதலில் பழைய பாலத்திற்கு அருகே தற்காலிக பாலம் ஒன்று அமைக்கும் வேலைகள் நடைபெற்றன.

அவ்வளவுதான்! மாதங்கள் எத்தனையோ கடந்து விட்டன. பாலப்புனரமைப்பு வேலைகளுக்கென யாரையுமே காணோம்! களி ஓடைப் பாலத்தின் தலைவிதி இவ்வளவுதானா? வினவிக்கொள்கிறார்கள் மக்கள்.

இருப்பினும், திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம்.முகைதீனின் அழைப்பின்பேரில் வருகைதந்த அமைச்சர் அல்ஹாஜ் ஏ.எச்.எம். பௌஸி 1998ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி இப்பாலத்திற்கான (புனரமைப்பு) அடிக்கல் நட்டதைக் குறிக்கும் நினைவுக்கல் (மூன்று மொழிகளிலும்) பாலத்தின் ஒரு முனைப்பகுதியில் கம்பீரமாகக் காட்சியளிக்கிறது.



குன்றும், குழியுமாகக் காணப்படும் களி ஓடைப்பாலம். பாலம் முழுவதும் இதே ஓட்டை, உடைசல்கள் தான்.

"எதிர்காலச் சந்ததியினர் அறிந்து கொள்ளும் பொருட்டு" என்ற வாசகமும் நினைவுக் கல்லில் காணப்படுகிறது.

"இன்றுள்ள நிலைமையை நோக்கினால் எதிர்காலச் சந்ததியினர் காலத்தில்தான் இப்பாலம் புனரமைக்கப்படுமோ?" எனப்பொதுமகன் ஒருவர் நகைப்புடன் கேள்வி எழுப்பினார்.

எது எப்படியிருப்பினும் இப்பாலத்தின் கோலத்தை மாற்றிப் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிக்க நெடுஞ்சாலைகள் அமைச்சு தாமதமின்றி ஆவன செய்ய



அமைக்கப்பட்டுள்ள தற்காலிக பாலம்.

வேண்டும்.

இதனை இப்பாலப் புனரமைப்பில் மிகுந்த அக்கறை கொண்ட திகாமடுல்ல நாடாளுமன்ற உறுப்பினர் யூ.எல்.எம். முகைதீன் முன்னெடுக்க வேண்டும். - இவ்வாறு மக்கள் கோருகின்றனர்.

நடக்குமா காரியம்? கிடைக்குமா புதிய பாலம்?

# நிந்தவூரில் இந்த அவலம்!

நிந்தவூர்ப் பிரதேசத்தின் மிக முக்கியமான வீதி நிந்தவூர் மாவட்ட வைத்தியசாலை வீதி. அது வீதி என்று சொல்லும் தரத்தில் இன்று இல்லை.

உடைந்து, தகர்ந்து, பழுதடைந்து பாழடைந்து படு மோசமாகக் கிடக்கிறது.

ஒரு சிறு மழை பெய்தாலே போதும் வீதி வெள்ளக் காடாகிவிடுகிறது. பெரு மழை என்றால் கேட்கவா வேண்டும்?



வீதி முழுவதும் வெள்ளக்காடு

இந்த வீதிக்குப் பொறுப்பான, வீதி அபிவிருத்தித் திணைக்களம் என்ன செய்கிறது? இந்த வீதியைக் கைகழுவி விட்டு விட்டதா? நீண்ட காலமாகப் பராமரிப்பும் இல்லை. புனரமைப்பும் இல்லை.

வீதியால் செல்லும் எல்லோருடைய திட்டுக்கும் இலக்காகி விட்டது வீதி அபிவிருத்தித் திணைக்களம்.

இந்த வீதியில் நிந்தவூரின் பல முக்கிய பொது ஸ்தாபனங்கள் அமைந்துள்ளன.

சுமார் ஐம்பதாயிரம் நிந்தவூர் மக்களுக்கும், அயல் கிராமத்தவர்களுக்கும் வைத்திய சேவை அளித்துவரும் நிந்தவூர் காஷிபுல் உலூம் அரபுக் கல்லூரி, நிந்தவூர் அல்-மஸ்ஹர் பெண்கள் உயர்தரப் பாடசாலை, நிந்தவூர் மீனவர் வங்கி என்பவற்றுக் கெல்லாம் இப்பிரதான வீதி வழியாகவே செல்ல வேண்டும்.

அத்துடன் கடற்றொழிலாளர்கள், மீனவர்கள் இந்த வீதியூடாகவே தமது போக்குவரத்தை வைத்துக் கொள்கின்றனர்.

இவ்வளவு முக்கியத்துவம்மிக்க இந்த மாவட்ட வைத்தியசாலை வீதியால்தான் ஜும்ஆ பள்ளிவாசலுக்குத் தொழுகைக்காகச் செல்வதும், நிந்தவூர் மத்திய மையவாடிக்கு ஜனாஸாக்களைக் கொண்டு செல்வதும் வழக்கமாகும்.

இத்தனைக்கும் இந்த மாவட்ட வைத்தியசாலை வீதி, சிறுமழை பெய்தால் கூட வெள்ளக்காடாகவே காட்சியளிக்கும். தேங்கும் மழைநீர் வற்றாது சேறும், சகதியும், குன்றும், குழியுமாகவே காணப்படும் அவலம் நீடித்து வருகிறது.

மாவட்ட வைத்தியசாலைக்கு அவசர நோயாளர்களைக் கொண்டு செல்வதற்கு, அம்பாறை வைத்திய சாலைக்கு ஏற்றிச் செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டிகூட இந்த அவல நிலையிலுள்ள வீதி வழியாகவே செல்ல வேண்டியுள்ளது.

இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த வீதியை சம்பந்தப்பட்டவர்கள் பாராமரிக்காமல் விட்டிருப்பது ஏன் எனப் பொதுமக்கள் கேள்வி எழுப்புகிறார்கள்.

அபிவிருத்தி சகாப்தத்தை உருவாக்கிக் காட்டியுள்ளோமெனத் தம்பட்டம் அடிப்போர் கண்களுக்கும் குளமாகக் காட்சியளிக்கும் இந்த வீதியின் நிலை தெரியவில்லையா? - இப்படி மக்கள் கேட்கிறார்கள். இக்குறைகள் சம்பந்தப் பட்டவர்களின் காதுகளில்



மதில் சுவரில் தொற்றி வெள்ளத்தைக் கடக்கும் மாணவிகள்

விழுமா?

வீதியின் அவலத்தைப் போக்கக் கண்கள் திறக்குமா? காரியம் நடக்குமா?

- ஏ.எல்.எம். சலீம்

# மனோபலம் இருந்தால் துன்பம் தூசு!

''துன்பம்'' யாருக்குத்தான் இல்லை? சிலருக்கு நோய், சிலருக்குக் குடும்பப் பிரச்சினை, சிலருக்குப் பணக் கஷ்டம், சிலருக்குத் தோல்விகள் இப்படியாக எல்லோருடைய வாழ்க்கையிலும் துன்பம் வந்து போகின்றன. அப்படியிருக்க நாம் ஏன் துவண்டு போகின்றோம்?



துன்பத்தை ஏற்கும் விதமும், விலக்கும் விதமும் நம் மனதில் தான் இருக்கின்றது.

அன்றாட வாழ்வில் எல்லோருக்கும் துன்பங்கள் ஏற்படுகின்றன. துன்பம் வந்ததும் எனக்கு மட்டுந்தான் ஏன் துன்பம் வந்தது என்று பலர் புலம்புகின்றனர். தம்மைப் போன்றே பலபேர் துன்பப்படுகிறார்கள் என்ற உண்மையை மறந்து விடுகின்றனர்.

ஏன் நமக்குத் துன்பம் வந்தது என்று மனம் வெதும்புபவர்கள், துன்பம் வந்துவிட்டது இதிலிருந்து எப்படி மீள்வது என்பதையே சிந்தனையாகக் கொள்ள வேண்டும்.

ஏனெனில் துன்பம் ஏன் வருகின்றது என்ற வினாவுக்கு இன்றுவரை விடை காணப்பட வில்லை. எனவே, அதைப் பெரிது படுத்தி எமது சக்தியையும், நேரத்தையும் நாம் வீணடிக்க வேண்டியதில்லை.

பரீட்சையில் தோற்றி அதில் தோல்வியடைந்த இருவரில் ஒருவன் சோகத்தில் மூழ்குகின்றான். வாழ்க்கையில் தன்னால் முன்னுக்கு வர முடியாது என்று மனம் நோகின்றான்.

மற்றவனோ, போனது போகட்டும், அடுத்த முறை பரீட்சையில் அதிக புள்ளிகளோடு வெற்றி பெறுவேன் என்று உறுதி கொண்டு முயற்சி செய்கின்றான். வெற்றியும் அடைகின்றான்.

எனவே, எல்லாத் துன்பங்களும் நிரந்தரமானவை அல்ல, தற்காலிக மானவையே. சில நாட்களிலோ, சில மாதங்களிலோ, சில வருடங்களிலோ அவை தீர்ந்து விடும் என்று நெஞ்சில் நிலை நிறுத்திக் கொள்ளுங்கள்.

துன்பம் ஏற்பட்டுவிட்டால் சில நாட்கள் அழுதே ஆகவேண்டும். கஷ்டம் இருக்கத்தான் செய்யும், ஆனாலும் அதற்குப் பின் துணிவோடு ஆக்க பூர்வமான மனோ திடத்தை ஏற்படுத்திக் கொள்ள முடியும் அல்லவா?

எனவே துன்பத்திலிருந்து விடுபட முயற்சிப்போம். துன்பத்தை நீக்க மற்றவர்களிடம் ஆலோசனை கேட்போம். உடற்பயிற்சி, மனப்பயிற்சி, தேவையானால் அவற்றை மேற்கொள்வோம். துன்பம் நீங்க உறவினர்கள், நண்பர்கள் உதவுவார்களாயின் அவர்களின் உதவியை நாடுவோம். இறைவனைத் தொழுதால் துன்பம் நீங்குமெனத் தோன்றினால் அவனைச் சரணடைவோம்.

''இனிப் பிழைக்க மாட்டீர்கள்''. என இருவரிடம் ஒரு வைத்தியர் சொன்னாராம். ஒரு நோயாளி அதனை நம்பி மனதில் இழப்பிற்கு இடம் கொடுத்தாராம். மற்றொரு நோயாளி நான் வேறு வைத்தியரிடம் சென்று மேலும் முயன்று நோயை நீக்குவேன் என நம்பிக்கையோடு செயற்பட்டாராம். அதனால் அவர் பிழைத்துக் கொண்டாராம்.

இது எந்த நேரத்திலும் நாம் நம்பிக்கையை இழந்து விடக்கூடாது, என்பதையே வலியுறுத்துகிறது.

நமது மனோபாவம் தோல்விக்கு இடமளிக் காதவரை நாம் தோற்றுப் போக மாட்டோம். துன்பத்தை வெற்றி கொள்ள முடியும் எனும் மனோபாவம் மிகமிக முக்கியம். துன்பத்திலிருந்து மீள முடியும் என்ற நம்பிக்கையே வாழ்க்கையின் அத்திபாரம்.

# பிரசவத்துக்கு முன் எடை அதிகரிப்பு அழகிற்கு ஆபத்து

பிரசவ நேரத்தை நெருங்கும் பெண்ணின் உடல் எடை சாதாரணமாக 12.5 கிலோ - 13 கிலோ வரை அதிகமாகும். இது எவ்வாறு எனின்,

- * வளரும் குழந்தை, நச்சுக் கொடி மற்றும் அதைச் சுற்றியுள்ள நீரின் நிறை சுமார் 4.5 கிலோ.
- * கருப்பையும், மார்பகங்களும் ஹோர்மோன் சுரப்புகளால் விரிவடைந்து விடுவதால் ஏற்படும் கூடுதல் எடை 1.5 கிலோ.
- * அதிகமாகும் இரத்தத்தின் நிறை 1 கிலோ.
- * உடல் முழுவதும் படர்ந்து மினுங்கும் கொழுப்பின் அளவு 2 கிலோ.
- * அதிகமாகி உடலில் தங்கிவிடும் எடையின் அளவு சுமார் 4 கிலோ.

12.5 கிலோ - 13 கிலோ வரை பெண்ணின் நிறை அதிகமாயினும், இயல்பான மகப் பேற்றின் பின் அதிகரித்த நிறை குறைந்து முன்னிருந்த உடல் நிறையின் அளவுக்கு விரைவில் திரும்பும்.

16 கிலோவுக்கு மேல் பெண்ணின் நிறை அதிகமாகி விடுமானால் அந்தப் பெண் முன்னர் இருந்த அழகிய தோற்றத்தை அடைவது கடினம்.



# நேரம் இல்லை என்பது சுத்தப் பொய்!



- தினமும் இரவில் நித்திரைக்குச் செல்லும் முன் ஒரு தாளில் நாளை செய்யவேண்டிய வேலைகளைக் குறித்துக் கொள்ளுங்கள்.

  அந்த வேலைகளை உத்தேசமாக எந்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள் என்பதையும் குறித்து வையுங்கள்.

  மிக முக்கியமானது என நீங்கள் கருதும் வேலையை அடிக்கோடிட்டு வையுங்கள்.
- அலுவலகத்துக்கு அணியவுள்ள ஆடைகளை முதல் நாள் இரவே அயர்ன் பண்ணி ஆயத்தப்படுத்தி வையுங்கள்.

  உங்கள் கணவர், குழந்தைகளின் ஆடைகளையும் தயார்ப்படுத்தி வைத்துவிட்டால் காலையில் பரபரப்பு இருக்காது.
- மறுநாள் சமையலுக்குத் தேவையான காய்கறிகளுள் சிலவற்றை இரவிலேயே வெட்டி வைத்துவிடுங்கள். இதனால் காலையில் பரபரப்பின்றிச் சமைக்க முடியும்.
- வேலை நாட்களில் விரைவான சுருக்கமான சமையலைச் செய்து விடுங்கள். விடுமுறை அல்லது விசேஷ தினங்களில் விசேஷமாகச் சமைக்கலாம்.
- நாளுக்குரிய பணிகளைத் திட்டமிடுவதில் விரைவில் எழும் பழக்கம்தான் முக்கியமானது. எனவே இரவில் அதிக நேரம் விழித்திருந்து தொலைக்காட்சி பார்ப்பதைத் தவிர்த்து நேரத்தோடு தூங்கச் செல்லுங்கள்.
- சமையலறை, படுக்கையறை, சாப்பாட்டறை, குளியலறை ஆகியவற்றில் கடிகாரங்களை வையுங்கள். நேரம் கட்டுக்குள் வந்துவிடும்.

  எனவே சகோதரிகளே உங்கள் வேலைகளைத் திட்டமிட்டு உரிய நேரத்தில் செய்து முடித்து, பத்து நிமிடம் முன்பாக அலுவலகம் சென்றுபாருங்கள் பதற்றமே இல்லாமல் உங்கள் வேலைகளை ஆரம்பிக்க முடியும்.

# பெண

பிரதீபா — பரீனா

# "அலர்ஜி"க்கு அரோகரா!

ஒவ்வாமை எனப்படும் ''அலர்ஜி'' இன்று சாதாரணமாகப் பலரையும் தாக்கும் ஒரு நோய் ஆகும்.

''அலர்ஜி''யை முற்றாகத் தவிர்க்கச் சில விதி முறைகள் இருக்கின்றன.

- * அலர்ஜி, ஆஸ்துமா நோயுள்ள குடும்பத்தாருள்ளும் நெருங்கிய உறவினர்களுள்ளும் திருமணம் செய்துகொள்ள வேண்டாம்.
- * அலர்ஜி, ஆஸ்துமா குடும்ப வழிப் பிள்ளைகளுக்குச் சிறுபராயத்திலிருந்தே பஞ்சடைத்த பொம்மைகள், குளிர்பானங்கள், சொக்லேட், ஐஸ்கிறீம் போன்ற இனிப்பு வகைகளைக் கொடுக்கவேண்டாம்.
- * மருத்துவரின் ஆலோசனையின்றித் தாமாகவே மருந்து மாத்திரைகளைச் சாப்பிடுவதும் அவற்றை மற்றவர்களுக்குக் கொடுக்கவும் வேண்டாம்.
- * அனைத்து வகையானதும்பு, தூசி, புகை, பனி, குளிரான சூழ்நிலைகளில் இருக்க வேண்டாம்.
- * ''அலர்ஜி'' உள்ளவர்கள் வீடுகளில் நாய், கிளி, பூனை, கோழி என்பவற்றை வளர்க்கவேண்டாம்.
- * அதிகமான பொருட்களை வைத்துப் படுக்கையறையை அசுத்தம் ஆக்கவேண்டாம்.
- * எண்ணெயில் பொரித்த உணவுப் பொருட்களையும், இரவில் பால், வாழைப்பழம் என்பவற்றையும் உண்ணவேண்டாம்.
- * உணவு எவ்வளவுதான் சுவையாக இருந்தாலும் வயிறு முட்ட உண்ண வேண்டாம்.
- * இரவு உணவைப் பலமானதாகவும் காலம் கடந்தும் உண்ண வேண்டாம்.
- * விருந்தும் வேண்டாம், விரதமும் வேண்டாம்.
- * ஆறு மாதங்களுக்கு இருமுறை வயிற்றுப் பூச்சிகளுக்கு மாத்திரைகள் சாப்பிடாமல் இருக்க வேண்டாம்.
- * தினமும் மூச்சுப் பயிற்சிகள், தியானம், மன அடக்கம், யோகாசனம் போன்றன செய்யாமல் இருக்க வேண்டாம்.




கரடிகளில்தான் எத்தனை விதம். அவற்றில் அமெரிக்க மலைப் பிராந்தியத்தில் வாழும் **Black Bear** எனப்படும் கறுப்புக் கரடியின் வாழ்க்கை முறை சுவையானது. குளிர் காலத்தில் கறுப்புக்கரடி "கும்பகர்ண" தூக்கத்தில் ஆழ்ந்துவிடுகிறது. இந்தக் கரடி இனம் பிறக்கும் போது வெண்ணிறமாக இருக்கும். வளர்ந்ததும் கறுப்புக் கரடி ஆகிவிடும். ஒரு கறுத்தம்மா கரடி தனது வெள்ளைக் குட்டியுடன் வேட்டைக்குப் புறப்பட்டிருக்கும் காட்சி இது.

# கறுத்தம்மா பிள்ளை பிறந்ததுமே வெள்ளை!



அதிகாலையில் ஆதவன் உதித்ததும் எமக்கு ஒரு நாள் மலர்கிறது. ஆனால் மேல் நாடுகளிலோ நள்ளிரவு வேளையிலும் சூரியன் உதிக்கிறது. நோர்வே நாட்டில் வருடத்தின் பெரும்பகுதி நாட்களில் இரவே வருவதில்லை. அதிலும் சுமார் இரண்டரை மாதங்களில் நள்ளிரவில் சூரியன் உதிக்கும். அத்தகையதொரு நள்ளிரவுச் சூரியனையே இங்கு காண்கிறீர்கள்.



# நள்ளிரவு நேரத்தில் உதிக்கும் சூரியன்

# தொப்பி போடும் கலையில் வல்லமை

மற்றவர்களைப் போற்றிப் புகழ்ந்து தங்களுடைய கருமங்களைச் செய்பவர்களை "தொப்பி போடும் கலை" யில் வல்லவர்கள் என்று குறிப்பிடுவார்கள். ஆஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் பிளமிங்டன் குதிரைப் பந்தய மைதானத்தில் இந்த அழகிகள் வித்தியாசமாக வடிவமைக்கப்பட்ட தொப்பிகளை அணிந்து வந்து பார்வையாளர்களைக் கவர்ந்தார்கள்.




சொக்லெட் இனிப்பானது தான். ஆனால் சொக்லெட்டில் உடைகளைத் தயாரித்து அணிந்து கொண்டால் எப்படி இருக்கும்? பாரிஸ் நகரில் சொக்லட் உடை அணிந்து அழகிகள் பவனி வந்த காட்சி அண்மையில் நடைபெற்றது. சொக்லெட் அடுக்கப்பட்டிருந்த அங்கியையே அணிந்து பவனி வந்த இந்த அழகிக்கு அமோகமான வரவேற்பு.



# சொக்லெட் உடையில் இனிப்பான பெண் இவள்

மனித இனத்தின் மூதாதையர் ஆதாமும் ஏவாளும் ஆடை இன்றி வாழ்ந்தார்கள். ஏதேன் தோட்டத்தில் இருந்த அப்பிள் பழத்தை உண்டதால் சபிக்கப்பட்டு ஆடைகளை அணியத் தொடங்கினார்கள் என்பது வரலாறு. இலைகளையும் மலர்களையும் ஏவாள் அன்று ஆடையாக அணிந்தாள். ஆனால் இங்கே இந்த நவீன ஏவாள்களோ தங்கள் முழு உடலையும் இலை, தளைகளால் மறைத்து ஆடை அணிந்து விட்டார்களோ?



# நாகரிக உலகில் நவீன ஏவாள்கள்



டிசம்பர் 03 "சுடர் ஒளி" மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை மீனாவினுடையது. சரியான விடையைக் கண்டு பிடித்து "சுடர் ஒளி"க்கு எழுதி அனுப்பி வைத்தவர்களில் மூன்று அதிஷ்டசாலிகளின் பெயர் விவரம் வருமாறு.

1. சி. கருணாநிதி, ஹிக்கடுவ
2. யு. எல். எம். ஜலீல், சாய்ந்தமருது- 10
3. ச. நிதர்சன், வவுனியா

சரியான விடையைக் கண்டு பிடித்து எழுதி அனுப்பிய அனைவரையும் பாராட்டுகின்றோம். அதிஷ்டசாலிகள் மூவருக்கும் எமது வாழ்த்துக்கள்.

கடந்த வாரம் (10-12-2000)

மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகத்திற்குரிய நடிகர் யார்? தபால் அட்டையில் எழுதி அனுப்பும் வாசகர்களில் மூன்று அதிஷ்டசாலிகள் தெரிவுசெய்யப்பட்டு அவர்கள் பெயர் விவரம் அடுத்த வாரம் வெளியிடப்படும்.

இந்த வாரம் பிரசுரமாயிருக்கும் முகம் தெரியாத இந்த உருவம் யாருடையது? அழகே தனது சொத்து எனக் கூறி உலகைக் கலக்கியவர். பின்னர் சினிமா உலகில் காலடி பதித்தவர்.

இந்த முகத்திற்குரிய நடிகையைக் கண்டுபிடித்து அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

சுடர் ஒளி
36/2, பிரெட்றிகா வீதி
கொழும்பு-06



# ஒளிந்திருக்கும் முகம் எது?

# பாகிஸ்தானில் முஷாறப்பின் மிகப்பெரிய சாதனை

## அரசியல் எதிர்ப்புகளுக்கு ஆப்பு


பார்வீஸ் முஷாரப்

பாகிஸ்தானில் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பர்வீஸ் முஷாரப் ஆட்சியேற்று ஓராண்டு முடிவடைந்திருக்கிறது.

ஜனநாயகமுறையில் தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் லீக் தலைவர் நவாஸ் ஷெரிப்பின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு இவர் ஆட்சியைக் கைப்பற்றியிருந்தார். இராணுவ ஆட்சி சபையின் தலைமையிலுள்ள இவருக்கு சபையில் ஏகமனதான ஆதரவு இல்லையென்ற நிலையும் இருக்கிறது.

தேசிய, சர்வதேசிய செய்தி ஊடகங்களின் கண்டனங்களுக்கும் இவர் அவ்வப்போது இலக்காகி வந்திருக்கிறார். ஆயினும் மக்களின் உறுதிப்பாட்டைக் குலைப்பதற்காகச் செய்யப்படும் பிரசாரங்கள் என்ற தொனியில் ஊடகத்துறையை அவரும் கண்டித்து விடுகின்றார்.

முஷாரப்பின் ஆட்சி ஒரு ஆண்டு முடிவுற்ற நிலையில் இப்போது சில நன்மாற்றங்கள் நிகழ்வதற்கான அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன.

அதாவது, சர்வதேச நாணய நிதியம் பாகிஸ்தானைப் பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்கான உதவி நடவடிக்கைகள் சிலவற்றை அறிவித்திருக்கின்றது.

இதனை ஒரு வரப்பிரசாதமாகவே ஆட்சியாளர்கள் கருதுகின்றனர். காரணம் இராணுவஆட்சி வருவதற்கு முன்னரே இதற்கான விண்ணப்பம் அனுப்பப் பட்டிருந்தது. சுமார் 18 மாதங்களின் பின்னரே இப்பொழுது பெறுபேறுகள் கிடைத் திருக்கின்றன.

இந்தச் சாதகமான பெறுபேற்றைப் பெறுவதற்கு கடந்த வருடம் பூராவும் இராணுவ ஆட்சியாளர்கள், நாணய நிதியம் காலால் இட்ட கட்டளைகளையெல்லாம் தலையால் ஏற்றுச் செய்து வந்தனர்.

அந்நியச் செலவாணி 3 வாரங்களுக்கே தீனி போடுவதற்குப் போதுமானதாயிருந்தது. இதுவரைகாலமும் பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்களுக்கான தவணைப்பணம் செலுத்த வேண்டிய காலக் கெடுவின் நெருக்குதல்கள் வேறு இருக்கின்றன.

இந்நிலையில் நாணயநிதியத்தின் நிபந்தனைகளை விசுவாசத்துடன் நிறைவேற்றும் நடவடிக்கையில் இராணுவ அரசு உள்நாட்டில் பெரும் பொருளாதாரச் சுமைகளை மக்கள் மீது சுமத்திவிட்டது.

இதுவரைகாலமும் எந்தவொரு அரசாங்கத்தினாலும் இந்த அளவுக்குப் பொருளாதாரக் கட்டுப்பாடுகளை விதிக்க முடியாதிருந்தது.

சகல பொருட்களுக்குமான விற்பனை வரியாக 16 சதவீதம், நாணயம் 11 சதவீதத்தால் பெறுமதி குறைப்பு, விற்பனை நிறுவனங்களின் கணக்குப் புத்தகங்கள் அரசினால் நுணுக்கமாகப் பரிசீலனை என்பன போன்ற பொருளாதாரக் கெடுபிடிகள் இருக்கின்றன.

இவற்றை அமுல் செய்யும் அதிகாரிகள் வர்த்தக நிறுவனங்களுக்குச் சென்றபோது இராணுவ ஆட்சியொன்றில் என்றுமே நடந்திராதபடி அவர்கள் மீது வசைமாரி பொழியப்பட்டது. காறிஉமிழப்பட்ட சம்பவங்கள் நடைபெற்றனவாம்.

சர்வதேச அரங்கும் இராணுவ ஆட்சியாளருக்கு எதிராகவேயுள்ளது. ஜனநாயக ஆட்சிமுறைக்கு நாட்டைக் கொண்டு செல்லுமாறு அழுத்தங்கள் கொடுக்கப்படுகின்றன.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவி பெனாஸிர் பூட்டோ வெளிநாட்டில் அஞ்ஞாத வாசம் செய்கிறார்.

ஜனநாயகக் கட்சிகள் இப்படியிருக்க மூன்று வருடங்களில் 'உண்மையான ஜனநாயகத்தை'க் கொண்டு வருவேன் என்று ஆட்சியாளர் முஷாரப் கூறுகிறார். நாய் வால் நிமிருமா?

வெளியுறவும் நெருக்குதல்களுக்கு உட்பட்டதாகவேயிருக்கிறது. அணுவாயுதத்தடை ஒப்பந்தத்தில் ஒப்பமிடும் பிரச்சினை முக்கியமாகும். அமெரிக்காவினால் சர்வதேசப்பயங்கரவாதி எனநாமம் சூட்டப்பட்டு தேடப்பட்டுவரும் ஒசாமா பின் லேடனை நாடுகடத்துவது அடுத்த பிரச்சினை. காஷ்மீர் பிரச்சினைஎன்றென்றும்தீர்க்கமுடியாதது.

இந்நிலையில் ஆசியாவிலுள்ள அமெரிக்காவின் உற்றநண்பன் பாத்திரம் படிப்படியான முறையில் அற்றுப்போவதை முஷாரப் அரசும் உணர்வது போல் தெரிகிறது.

இருப்பினும் ஜெனரல் முஷாரப்பிற்கு சவாலாக நிற்கக் கூடியவர்கள் எவரும் நாட்டில் உருவாகவில்லை. எனவே எதிர்பார்க்கப்பட்ட காலஎல்லைக்கு மேலாகவே அவருடைய ஆட்சி நீடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

-தர்மலிங்கம்


நவாஸ் ஷெரிப்

# சவூதியில் நவாஸ் ஷெரிப்

பாகிஸ்தானின் நலன்கருதியும், பாகிஸ்தான் மக்களின் நலன்கருதியும் முன்னைநாள் பிரதமர் நவாஸ் ஷெரிப் அவரது குடும்பத்தினருடன் சவூதி அரேபியாவுக்கு நாடுகடத்தப்பட்டார் -இவ்வாறு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த ஷெரிப் தமது பணத்தில் 8.3 மில்லியன் டாலர்களை அரசுக்கு வழங்கினார். அடுத்த 21 வருடங்களுக்கு அரசியலிலிருந்து ஒதுங்கியிருப்பார். -இவ்வாறு ஒப்பந்தமொன்றைச் செய்ததன் பேரில் இந்த நாடுகடத்தல் சாத்தியமாகியுள்ளது.

சவூதி அரச குடும்பத்தினரால் அனுப்பிவைக்கப்பட்டிருந்த விமானமொன்றில் ஷெரிப் குடும்பத்தைச் சேர்ந்த 19 பேர் நாடுகடத்தப்பட்டுள்ளனர். நவாஸ் ஷெரிப்புக்கு நீதிமன்றம் வழங்கிய தண்டனைகளை இனி அவர் அனுபவிக்கத் தேவையில்லை.

நவாஸ் ஷெரிப்பின் முஸ்லிம் லீக்கும், பெனாசிர் பூட்டோவின் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் இணைந்து செயற்படத்தீர்மானித்தன. இதனால் நாட்டுமக்களிடமிருந்து பெரும் எதிர்ப்பை ஜெனரல் முஷாரப் எதிர் நோக்க வேண்டிய நிலைதான் இருக்கின்றது.

பெனாசிர் பூட்டோ ஏற்கனவே வெளிநாட்டில்தான் அஞ்ஞாதவாசம் செய்துவருகிறார். இப்போது ஷெரிப்பும் அஞ்ஞாதவாசம் செய்யச் சென்று விட்டார்.

# நாம் கேட்பது சம உரிமை.......

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

உங்களால் பயங்கரவாதம் என்று சொல்லப்படுபவைகளும் நியாயப்படுத்தப் படலாம்.

பயங்கரவாதத் தடைச் சட்டமும் அவசர காலச் சட்டத்தின் பிரிவுகளும்தான் பொலிஸாருக்கும் படையினருக்கும் அதீதமான அதிகாரங்களை வழங்குகின்றன. அவைதான் இன்று அரச பயங்கரவாதத்தை அதிகரிக்கச் செய்கின்றன.

பயங்கரவாதத் தடைச் சட்டம் சட்டப் புத்தகத்தில் இருந்து நீக்கப்பட வேண்டும் என்றும், அவசர காலச் சட்டம் வாபஸ் பெறப்பட வேண்டும் என்றும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

## பொலிஸ்

பொலிஸார் பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் அவசரகாலச் சட்டத்தையும் நடைமுறைப்படுத்துவதில் இருவேறு தராதரங்களைக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தக் கொடூரமான சட்டங்கள் தமிழ் மக்களுக்கு எதிராக மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. கடந்த பொதுத் தேர்தலில் பல வன்முறைகள் மத்திய மாகாணத்தில் உருவாகின. அந்த வேளை அந்தக் குற்றங்களை இழைத்தவர்கள் என்று சந்தேகத்தில் கைது செய்யப்பட்ட சிங்களவர்கள் சாதாரண சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்கள்.

ஏன் ஒரு பிரதி அமைச்சரின் மகன் கூட அவ்விதமாகச் சாதாரண சட்டத்தின் கீழ் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

நான் நினைக்கிறேன் எமது தலைவர் குமார் பொன்னம்பலத்தினுடைய கொடூரமான கொலைக்காகவும் இந்த நபர் கைது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## மலையகச் சம்பவங்கள்

மலையகத்தில் வன்முறைகள் வெடித்த போது தமிழர்கள் அவசர காலச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டார்கள். ஆனால், தமிழ் மக்களுடைய கடைகளை அழித்துக் கொள்ளையிடுவதற்குக் காரணமாக இருந்த பெரும்பான்மை இனத்தவர்கள் இதுவரை கைது செய்யப்படவில்லை.

தலவாக்கலையில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட வேளை தமிழர்களுடைய கடைகள் இராணுவத்தினரதும் பொலிஸாரினதும் முன்னிலையில் அழிக்கப்பட்டன. இவற்றைச் செய்த பெரும்பான்மை இன சமூகத்தவர்களுக்கு எதிராக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

கினிகத்தேனயிலும் அவர்கள் தாக்கப்பட்டார்கள். பட்டப் பகலில் கினிகத்தேன பொலிஸ் நிலையத்துக்கு முன்னால் இருந்த கடை அழிக்கப்பட்டு சூறையாடப்பட்டது. எந்தவிதமான நடவடிக்கையும் இந்தப் பெரும்பான்மை இனத்தவர்கள் மீது எடுக்கப்படவில்லை.

தமிழ் மக்கள் நாடாளுமன்றத்தினுடைய நேரடி வலுவில்லாத பல பொலிஸ் சட்டங்களுக்கு உள்ளாக்கப்படுகின்றனர்.

## பொலிஸ் பதிவுகள்

பொலிஸ் பதிவுகளைப் பொறுத்தவரையில் தமிழ் மக்கள் தம்மைப் பதிவு செய்ய வேண்டும் என்று ஏதும் சட்டம் கிடையாது.

ஆனால் ஒரு உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தரத்திலுள்ள அதிகாரி வீட்டிலுள்ளவர்களைப் பதிவு செய்ய வேண்டும் என்று கோரினால் மட்டும் பதியப்பட வேண்டும் என்று சில அவசரகாலப் பிரமாணங்கள் கூறகின்றன.

ஆனால் கொழும்பில் நடப்பது என்ன? பொலிஸார் எல்லாத் தமிழர்களும் பதிய வேண்டும் என்று கூறுகிறார்கள். தமிழ் மக்கள் பொலிஸ் நிலையம் சென்றால் சில பொலிஸ் அதிகாரிகள் பதிய மறுக்கிறார்கள். அவர்கள் பதியத் தவறினால் பொலிஸாரால் கைதுசெய்யப்படுகின்றார்கள்.

திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து வரும் ஒருவர் இரண்டு நாட்கள் கொழும்பில் இருக்க வேண்டுமாயினும் அவர் தன்னைப் பதிவு செய்ய வேண்டும்.

## யாழ் பயண அனுமதி

அரசாங்கம் தமது கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறிக்கொள்ளும் யாழ்ப்பாணத்திற்கு ஒரு தமிழர் போக வேண்டுமானால் அவர் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெறவேண்டும். ஏன், நான் இந்த நாடாளுமன்றத்தில் யாழ். மாவட்டப் பிரதிநிதியாக இருந்தும் கூட யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டியதாக இருக்கின்றது. நான் அனுமதி பெற வேண்டுமென எந்தச் சட்டம் குறித்துரைக்கின்றது?

வவுனியாவில் இருந்து ஒருவர் கொழும்பு வர வேண்டுமென்றால் அவர் அங்கே பொலிஸ் அனுமதியைப் பெற வேண்டும். அப்படியாக அவர் நடக்க வேண்டுமென்று எந்தச் சட்டம் குறித்துரைக்கின்றது? ஏன் இப்படியான கௌரவமற்ற சுமைகளைத் தமிழ் மக்கள் மீது திணிக்கின்றீர்கள்? அவர்களும் இந்த நாட்டின் பிரஜைகள் அல்லவா?

## இடைக்காலச் சபை

வடக்கு கிழக்கைப் பரிபாலிக்க ஒரு இடைக்கால அரசை அமைக்க இருப்பது பற்றி ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் இந்த இடைக்கால நிர்வாக சபைக்கான அமைப்பினை இந்தக் கால கட்டத்தில் முற்றாக எதிர்க்கின்றது.

முதற்கண் வடக்குக் கிழக்குப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும். அதன் பின்னர் ஓர் இடைக்கால நிர்வாக சபை ஏற்படுத்தப்படலாம். சில வேளை பிரச்சினைக்கான தீர்வுத் திட்டத்தின் பின் இப்படியான ஒரு சபைக்கு தேவை ஏற்பட மாட்டாது.

## துணைப் படைகள்

சில தமிழ்க் குழுக்கள் துணைப்படைகளாக இயங்குகின்றன. இவை வடக்குக் கிழக்கில் இராணுவத்தினருக்கு உதவி வருகின்றன. இந்தத் துணைப் படைகள் அரசாங்கத்தினால் பேணப்பட்டு வருகின்றன. அந்தப் படைகளில் உள்ளவர்களுக்கு வேதனமும் வழங்கப்படுகின்றது.

அண்மையில் ஒரு செய்தியாளர் மாநாட்டில் ஒரு தமிழ்க் குழுவின் தலைவர் இதனை ஏற்றுக் கொண்டுள்ளார். ஆனால் பாதுகாப்பு அமைச்சினால் இவர்களுக்கு வழங்கப்படும் வேதனங்களின் உண்மையான தொகையைச் சொல்ல அவர் விரும்பவில்லை.

இந்தத் துணைப்படைகள் தமிழ் மக்களுக்கு விரோதமாகவும் பாதகமாகவும் இயங்கி வருகின்றன. இவற்றை உடனடியாகக் கலைத்துவிட வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கின்றேன்.

இந்தத் தமிழ்க் குழுவினரின் சேவை வடக்குக் கிழக்கில் இராணுவத்திற்குத் தேவை என்று அரசாங்கம் கருதினால் அவர்களைப் பிரதான நிரந்தரப் படைகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யலாம். அந்த வகையில் அவர்கள் தாம் செய்பவற்றுக்குப் பொறுப்புள்ளவர்களாக அமைய முடியும்.

அதைச் செய்யாமல் அரசு எல்.ரீ.ரீ.ஈ.யினரைப் பயங்கரவாதிகள் என்று அழைத்துக் கொண்டிருப்பது அரசியல் லாபம் தேடும் முயற்சியாகவன்றி வேறு எதுவாகவும் இருக்கும் என்று நான் கருதவில்லை.

## ஐ.தே.க

ஐக்கிய தேசியக் கட்சி அவசர காலச் சட்ட நீடிப்புக்கான வாக்களிப்பில் இருந்து ஒதுங்கிக் கொள்ளும் நிலையை எம்மால் புரிந்துகொள்ள முடியவில்லை.

வடக்கு கிழக்கிற்கு வெளியே வாழுகின்றன தமிழ் மக்கள் கடந்த பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சி போர் நிறுத்தத்தைக் கொண்டு வரும், அமைதி பிறக்கும் என்ற நம்பிக்கையிலேயே அவர்கள் வாக்களித்தார்கள். ஐக்கிய தேசியக் கட்சி, அவசரகாலப் பிரமாண நீடிப்புக்கு எதிராக வாக்களிக்கும் என்றும் அவர்கள் நம்பினார்கள். தனக்கு வாக்களித்த தமிழர்களை ஐக்கிய தேசிக் கட்சி ஏமாற்றக் கூடாது.

## படையினர்

தமிழ் மக்கள் காலமெல்லாம் அகதிகளாகத் தம் வாழ்வைத் தொடர முடியாது. அவர்கள் தமது பிறந்த மண்ணில் சொந்த வீடுகளில் மீண்டும் குடியேறவே விரும்புகிறார்கள்.

அந்த வகையில் தமிழர்கள் யாழ்ப்பாணம் சென்று உயர் பாதுகாப்புப் பிரதேசம் என்று கூறப்படுகின்ற 51 கிராம சேவகர் பிரிவுகளிலும் தமது சொந்த வீடுகளில் குடியமர அரசு அனுமதிக்க வேண்டும் என்று நான் கோரிக்கை விடுக்கின்றேன். பாதுகாப்பு? அது யாருக்காக? பாதுகாப்பு தமிழர்களுக்கா? அல்லது படையினருக்கா? இராணுவம் வடக்குக் கிழக்கில் இருந்து மீளப் பெறப்பட வேண்டும். அல்லது குறைந்த பட்சம் அவர்கள் படை முகாம்களுக்குத் திருப்பியனுப்பப்பட வேண்டும். இப்படி அப்பாத்துரை விநாயகமூர்த்தி கூறினார்.

# பொலிஸ் முறைப்பாடு பதிவில் தமிழர்-சிங்களவர் பாரபட்சம்

தமது கடமையைச் சரியாகச் செய்யாத பொலிஸார் ''மொழி புரியவில்லை'' என நொண்டிச் சமாதானம் கூறித் தப்பிவிட முடியாது என்கிறார் பிரபல சட்டத்தரணியும் மத்திய மாகாணசபை உறுப்பினருமான இராஜ குலேந்திரா.

தமிழ்மொழி புரியாத பொலிஸ் காரர்களி னால் தமிழ்த் தொழிலாளர்கள் பெரும் அவதி.

சரியான முறையில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்படுவதில்லை. அதனால் நியாயம் பெறமுடியாத நிலை.

சட்டத்தில் உள்ள சில ஓட்டைகளைப் பயன்படுத்திக் குற்றவாளிகள் தப்பிக் கொள் கிறார்கள்.

இவற்றிற்கெல்லாம் பரிகாரம் காண வேண்டுமானால் தமிழர்கள் செறிந்து வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழி பேசும் பொலிஸ் காரர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

இப்படி அவர் நுவரெலியா மாவட்ட நீதிமன்றத்திலேயே கூறினார்.

அண்மையில் தலவாக்கலை, லிந்துல கினிகத் தேன பிரதேசங்களில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்களில் பாதிக்கப்பட்ட தமிழ்த் தொழிலாளர்களும், வர்த்தகர்களும் பொலிஸிற்குச் சென்றனர். தமது இழப்புகள், தம்மைத் தாக்கியவர்கள் மற்றும் கடைகளையும், வீடுகளையும் கொள்ளையடித்துத் தீவைத்துக் கொளுத்தியவர்கள் ஆகியோரின் பெயர்களைப் பொலிஸாருக்குத் தெரிவித்து முறைப்பாடு செய்தனர்.

ஆனால் பொலிஸ் முறைப்பாடுப் புத்தகத்தில் ''இனம் தெரியாத நபர்களினால்'' தாக்குதல் நடத்தி சேதங்கள் விளைவிக்கப்பட்டன என்றே பதியப்பட்டுள்ளது.

அதே வேளை ''இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் கூட்டமாக வந்து தாக்கினார்கள். அவர்களுக்கு இவர், இவர் தான் தலைமை தாங்கினார்கள் என்று தமிழ்த் தொழிலாளர்களின் பெயர்களைக் குறிப் பிட்டு சிங்களவர்கள் செய்த முறைப்பாடுகள் அச்சொட்டாகப் பதியப்பட்டுள்ளன. பெயர் பதியப்பட்ட அந்தத் தமிழர்கள் கைது செய்யப் பட்டனர். அவர்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று இராஜ குலேந்திரா சுட்டிக் காட்டி உள்ளார்.

இது தொடர்பாக, மலையக மக்கள் முன்னணி யின் தேசிய கவுன்சில் உறுப்பினராகவும் இருந்து செயல்படும் சட்டத்தரணி இராஜ குலேந்திராவுடன் தொடர்பு கொண்ட போது அவர் :–

பொலிஸாரின் இந்தப் பாரபட்சமான செயல் பாடுகள் தொடர்பாக நாம் விவரங்களைத் திரட்டுகிறோம். பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் பெற்றுக்கொடுக்கவும் நடவடிக்கை களை மேற்கொண்டு வருகிறோம். கைது செய்யப்பட்ட தோட்ட இளைஞர்கள் சார்பாக இலவசமாகவே ஆஜராகிப் பலரை விடுவித் துள்ளோம் என்றார்.

முன்னாள் ஜனாதிபதி ஆர்.பிரேமதாச ஒவ்வொரு பொலிஸ் பகுதியிலும் ஆகக் குறைந்தது நூறு பொலிஸாராவது கடமையில் ஈடுபடுத்தப்பட வேண்டும். அங்கு வசிக்கும் மக்களின் இன விகிதாசாரப்படி தமிழ் பேசும் பொலிஸாரும் நியமிக்கப்பட வேண்டும் என்று பணிப்புரை விடுத்திருந்தார்.

**மலையகக் கண்ணோட்டம்**

இதன்படி மலையக இளைஞர்களும் பொலிஸ் சேவையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர்.

ஆனால் இன்றைய அரசு ஆட்சிக்கு வந்ததும் மலையகத் தமிழ் பொலிஸாரை வடக்கு கிழக்கு யுத்தப் பிரதேசங்களுக்கும் சிங்களவர்கள் செறிந்து வாழும் தென்பகுதிகளுக்கும் இடமாற்றம் செய்தது.

''மலையகப் பகுதிகளிலேயே கடமைக்கு அமர்த்தப்படுவர்'' என்ற உத்தரவாதத்துடன் நியமனங்கள் கிடைக்கப் பெற்றவர்கள் இவர்கள். இந்த உத்தரவாதம் மீறப்பட்டுள்ளது.

மலையகத்தில் இருந்து இடமாற்றம் செய்யப் பட்ட தமிழ்ப் பொலிஸாரின் வெற்றிடங்களுக்கு இது வரை மாற்று நியமனங்கள் செய்யப்படவில்லை.

இந்த நிலையில் பொலிஸ்மா அதிபர் லக்கி கொடிதுவக்கு நாடெங்கிலும் உள்ள பொலிஸ் நிலையங்களில் பணி புரிவதற்கு உடனடியாகப் பத்தாயிரம் பொலிஸார் நியமிக்கப்பட வேண்டும் என அரசுக்குச் சிபார்சு செய்துள்ளார். இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மலையக அரசியல் வாதிகள் மலையக இளைஞர்களுக்கும் பொலிஸ் நியமனங்களைப் பெற்றுக் கொடுத்தால் மலையகப் பகுதியில் உள்ள பொலிஸ் நிலையங்களில் மொழிப் பிரச்சினையால் ஏற்படும் குளறுபடிகள் நிவர்த்தி செய்யப்பட இடமுண்டு.

மலையக அரசியல்வாதிகளும், தொழிற்சங்கத் தலைவர்களும் இவ்விடயத்திலாவது ஒற்றுமை யுடன் செயல்பட்டால் அவர்கள் மலையக மக்களின் விடிவுக்கு வழி செய்த பெருமைக்கு உரியவர்களாவார்கள்.

– இரா. புத்திரசிகாமணி

# விநோதனின் நினைவு விழா கலை நிகழ்ச்சிகள் பலே!

மனித நேயன் விநோதன் குமாரசுவாமி நினைவாலயத்தின் கலா நிகழ்வு சமீபத்தில் வெள்ளவத்தை இராமகிருஷ்ண மண்டபத்தில் சிறப்பாக நடை பெற்றது.

அமரர் விநோதன் குமார சுவாமியின் நினைவாக வருடந்தோறும் இக்கலைநிகழ்வு மேடையேற்றப்பட்டு வருகின்றது. இது 5ஆவது வருடாந்த நிகழ்வாகும்.

திருமதி ஜெயந்தி விநோதன் மிகக் கவனத் துடன் இதனைத் தொகுத்து நெறிப்படுத்தி வழங்கி வருகின்றார்.

நினைவு நிகழ்வுகள் வெறுமனே தலையிடி சொற்பொழிவுகளாக இல்லாமல் இலைமறை காயாக வாழும் இளங் கலைஞர்களை வளர்த் தெடுக்கும் நிகழ்வுகளாகத் திகழ்வது சிறப்பு டையதாகும்.

இளங்கலைஞர் அறிமுகமும் விருது வழங்கலும் சிறப்புக்குரிய அம்சங்களாகத் திகழ்ந்தன.

'பாரதி கண்ட புதுமைப் பெண்' நடன இசை நிகழ்ச்சி அனைவர் நெஞ்சையும் ஈர்த்துவிட்டது, ஈரப் படுத்தியும் விட்டது.

வரலாற்றுப் பெண் மணிகள் முதல் தமிழ் காவிய நாயகிகள் வரையிலும் மட்டுமல்லாது அண்மைக்கால அன்னை தெரேசா வரையிலும் பாரதி கண்ட புதுமைப் பெண்களாவர் என்பதனை அந்நிகழ்ச்சி வலியுறுத் தியது.

கொழும்பு கலாஷேத்ரா மாணவிகள் இதனை அருமையாக வழங்கினர். திருமதி ஜெயந்தி விநோதன் இதனை நெறிபடுத்தியிருந்தார்.

**கலையமுதம்**

நிகழ் வுகள் அனைத் திலும் இசை முதன் மையானதாகத் திகழ்ந்தது. எம்.ரி.வி. தொழில் நுட்ப மூகாமை யாளரான நடராஜா பாலமுரளி இப்பெருமையைத் தனதாக்கிக் கொண்டார்.

ரசிகர்களால் மண்டபம் நிறைந்து வழிந்தது. அடிக்கடி வெளிச்ச மின்குமிழ்கள் தூங்கி வழியத் தொடங்கியதால் ஏற்பட்ட இருட்டு பெரும் தலையிடியை அவர்களுக்குத் தந்தது. இது பெரும் எரிச்சலாகவே அமைந்தது.

இராமகிருஷ்ண மண்டபத்தில் வாரம் தவறாமல் நடைபெறும் தமிழ் நிகழ்ச்சிகள் பெரும் விருந்தாகவே அமைகின்றன.

ஆனாலும், அடிக்கடி 'பியுஸ்' அடிப்பட்டு இருள் திரை விழும் விளையாட்டு தொடர்ந்து கொண்டே இருப்பது மனக் கஷ்டத்தைத் தருகின்றது. இந்த எரிச்சலூட்டும் தொடர் கதைக்கு முற்றுப்புள்ளி இடப்பட வேண்டும்.

கே. விஜயன்


**இலங்கை வருகிறார் சோதிடர் திருமலைச்சாமி**

மலேசியா–சிங்கப்பூர் புகழ் இந்திய ஜோதிடச் சுடர் எஸ்.திருமலைச்சாமி மீண்டும் விரைவில் இலங்கை வர உள்ளார்.

உங்கள் வாழ்வின் எதிர்காலம், குடும்பப் பிரச்சினை, தொழில் அனைத்திற்கும் ஆலோசனை வழங்கப்படும்.

இந்திய முகவரி:
S. திருமலைச்சாமி
3A, ராகவேந்திரா குடில், 3rd floor,
102, சாந்தோம் நெடுஞ்சாலை
சென்னை-28.
தொலைபேசி: 009144 - 4959055/4617552


## வெறுத்துப் போச்சு

- கவிக்குயிலன்

பேசிப் பேசியே
அமைதிப் பேச்சுவார்த்தை
கேட்டலுத்துப் போச்சு!
சமாதானத்துக்கான
யுத்தம் வந்து
மோதி மோதியே
வளங்கள் போச்சு!
கூடிக் கூடியே
அரசியல் கட்சிகள்
அரசியல் தீர்வின்றி
ஒதுங்கிப் போச்சு!
பாவனைப் பொருட்களின்
விலை
கூட்டிக் கூட்டியே
இங்கு பழகிப் போச்சு
வாழ்க்கை
வெறுத்துப் போச்சு!

## சீதனம்

மங்கையின்
உடல் வருத்தி
உள்ளம் நொந்து
கண்ணீர் சிந்திய
வியர்வைப் பணம்!

பெண்மையின்
மென்மைபுரியாத
பேதையன்
கேட்கும் பிச்சை!

மணமேடையிலமர்ந்து
திருமதிப் பட்டம் பெற
செலுத்தப்படும் காசு!

- ஏ.தாரிக்

## சுவாசம்...!

என் நந்தவனப்
பூக்கள் கூட
தவியாய்த்
தவிக்கின்றன
உன் சுவாசம் கலந்த
காற்றை அவை
சுவாசிக்காததால்...!
எனது சுவாசம்
அடங்கும் முன்
என் நிலையை
அறிய மாட்டாயா?

- சி.விஜி

## உயர் தெய்வம்

- அரசரெத்தினம்

அன்னைக்கு நிகர்
எங்கும் யாருமேயில்லை!
அவளன்புக்கு மேலானது
வேறொன்றுமேயில்லை!
கண்முன்னால் நாம் காணும்
உண்மைத் தெய்வம்!
கருணையே உருவாகி
காக்கும் தெய்வம்!
உதிரத்தைப் பாலாக்கி
ஊட்டி வளர்க்கும் தெய்வம்!
நம் உயர்வுக்கும் வழிகாட்டி
உதவும் உயர் தெய்வம்!

# அளவற்ற அருளாளன்!

ஏ.ஏ.ஜுனைதீன்



அக்கம் பக்கம் எல்லாம் பரபரப்பு! பிள்ளைகள் அங்கும் இங்கும் ஓடித்திரிந்து கலகலப்பூட்டிய சூழல். வீட்டுக்கும் பள்ளிவாசலுக்குமாக சில பிள்ளைகள் ஓடியாடிக் களைத்துப் போயிருந்தன.

கடந்த பல நாட்களாக, மாதங்களாக, ஏன் போன வருடம் நோன்புப் பெருநாளைக்குப் பின்னர் அன்று அஸர் தொழுகைவரை பள்ளிவாசல்பக்கமே எட்டிப்பார்க்காதவர்களும் இருந்தனர்.

ஒரு சிலர் அன்று இஷா தொழுகைக்காக பள்ளிவாசலுக்குச் செல்ல எண்ணி இருந்தனர். மேலும் சிலர் அன்று இரவு நடைபெறும் தராவிஹ் தொழுகையிலிருந்து தமது அன்றாடக் கட்டாயக் கடமையான ஐவேளை தொழுகைகளை ஆரம்பிக்க எண்ணி இருந்தனர்.

பள்ளிவாசலுக்குச் செல்லும் வீதியில் ஓலைக்கிடுகுகளில் மெழுகுசேலை யூரியா பை போன்றவற்றில் சிலர் கடைபரப்பி இருந்தனர். மாங்காயும் மாம்பழமும் இரண்டொரு அப்பிள் பழங்களும் இன்னும் பல வகைகளும் கொள்வனவு செய்வோருக்காகக் காத்துக் கிடந்தன.

வசதியும் வளமும் இருந்தவர்கள் சந்தைக்குப் போய் கோழியும் இறைச்சியும் மரக்கறி வகைகளும் வாழைப்பழங்களும் தயிர், பாணி என்பனவும் கொள்வனவு செய்தனர். வீடுகளில் பெருமிதத்தோடும் குதூகலத்தோடும் காணப் பட்டனர்.

எனினும் ஏனையோர் மனங்களில் இருந்த பெருமிதமும் குதூகலமும் சல்மாவிற்கு இல்லை.

காரணம் விடிந்தால் நோன்பு இருப்பதற்கு வேண்டியதுக்கான சாப்பாடு எதுவுமே அவள் வீட்டில் இல்லை.

குட்டிக் குறுமான்களாக பன்னிரண்டு வயதுக்குட்பட்ட மூத்தவன் பரீதுக்கும் நான்கு வயதுக்குட்பட்ட ரினோஸாவுக்கும் இடையில் இன்னும் இரண்டு பேராக எல்லாம் நான்கு பிள்ளைகள்.

அத்துடன் அவள் விதவை. கணவன் இல்லாத குறையை விட வறுமை அவளது இளமையையும் அழகையும் அழித்து விட்டிருந்தது. ஆண் பிள்ளைகள் மேல் ஆடையில்லாமலேயே பெரும் பொழுதைக் கழித்தனர். பெண்பிள்ளைகள் என்பதால் அவர்கள் ஏனோதானோ என்று ஆடைகள் அணிந்திருந்தனர்.

'பேரீச்சம் பழத்துண்டொன்றினாலாவது பிறர் நோன்பு திறக்க உதவுங்கள்'',

''அண்டை வீட்டான் பசித்திருக்க உண்ணாதீர்கள்'' அயலவருக்காக உங்களது கறியில் சொதியைக் கூட்டி சமையுங்கள் ''இவை போன்ற போதனைகள் காதுகளில் ஒலித்ததுடன் சரி. எத்தனையோ பேரின் இதயங்களைச் சென்றடையவில்லை. நோன்புக்காக என்ன செய்வது என்று தெரியாமல் பலர் தவிக்க வேண்டிய நிலையேற்பட்டு விட்டது.

ஊரில் இவ்வளவுபேர் இருந்தும் தன் குடும்பநிலையுணர்ந்திருந்தும் நாளை நோன்பாச்சே... நீ என்ன செய்யப் போகிறாய்...? என்று ஒருவர் கூடக் கேட்கவில்லை.

அடுத்த வீட்டில் இருக்கும் ஹனிபா ஹாஜியாரோ, அவரது குடும்பத்தினரோ எட்டியும் பார்க்கவில்லையே என்று எண்ணிய போது சல்மாவின் இதயம் கனமானது. அந்தக் கனத்தின் பாரம் தாங்காமல் அவள் இதயத்தின் கசிவு கண்களில் கரைகட்டி நின்றன.

கடந்த வருடம் வரை அவளுக்குப் பொருளாதார நெருக்கடி இருக்கவில்லை. அவள் கணவன் இக்பால் கடந்த வருடம் ஹஜ்பெருநாளுக்குப் பின்னர் திடீர் என்று மரணித்து விட்டான்.

கணவனின் மரணத்துக்குப் பின்னர் சல்மா மீதும் அவளது நான்கு பிள்ளைகள் மீதும் உற்றார் உறவினர் காட்டிய கருணை, காலப்போக்கில் கரைந்து போய்விட்டது.

மாதங்களில் மிகவும் சிறப்பான மாதம் ரமழான் நோன்பு மாதம். தனவந்தர்களிடமுள்ள சொத்துக்களில் ஏழைகளுக்கும் பங்குண்டு என்று எல்லாம் வல்ல அல்லாஹ் '''ஸக்காத்'' என்னும் ஏழைகளின் வரியைக் கட்டாயப் படுத்தியிருந்தான். இந்த ஏழை வரியின் மூலம் தனவந்தர்களின் சொத்துக்களையும் செல்வங்களையும் எல்லாம் வல்ல அல்லாஹ் தூய்மைப்படுத்தினான்.

எனினும் பணமும் செல்வமும் படைத்த பெரும்பான்மையான முஸ்லிம் தனவந்தர்கள் ஏழைகளுக்கு அள்ளிக் கொடுக்கவேண்டிய இடத்தில் சிறிது கிள்ளிக் கொடுத்தனர். ஆனால் பாவக்கறை படிந்த சொத்து செல்வத்துக்கெல்லாம் வருமான வரியாகவும் இலஞ்சமாகவும் லட்சம் லட்சமாக அள்ளிக் கொடுத்துக் கொண்டிருந்தனர்.

இஷா தொழுகைக்குப் பள்ளிவாசலில் இருந்து பாங்கு ஒலி கேட்டது.

''உம்மாநோன்புக்கு என்னும்மா செய்யப்போறீங்க...?'' சற்று விவரம் தெரிந்த மூத்த மகன் பரீத், தாயைக் கேட்டான்.

''பொறு மவேன்' அல்லாஹ் ஏதாவது வழி காட்டுவான்'' - என்றபடி.....

கரைகட்டி நின்ற கண்ணீர்த்துளிகள் தரையில் எகிறி விழ, இஷா தொழுகையை நிறைவேற்ற ஆயத்தமானாள் சல்மா.

சல்மா தொழுகையின் பின் பிரார்த்தனையை நிறைவேற்றிய போது இறைவன் பால் அவளது இன்றைய குடும்ப நிலையை ஏத்தி வைத்த போது சல்மா தன்னையறியாமலேயே அழுது விட்டாள்.

வீட்டு வாசலில் பிள்ளைகளோடு யாரோ ஒரு பெண் உரையாடும் குரல் கேட்கவே பிரார்த்தனையை விரைவாக முடித்துக் கொண்டு, கண்களையும் துடைத்துக் கொண்டு வாசலை நோக்கி விரைந்தாள்.

அங்கே ... நிஷா நின்றிருந்தாள்.

நிஷாவைக் கண்டதும் சல்மா அதிசயித்துப் போனாள். சல்மாவைக் கண்டதும் 'அஸ்ஸலாமு அலைக்கும்' என்றபடியே அவளைத் தழுவிக் கொண்டாள் நிஷா. நிஷாவும் சல்மாவும் சொல்லிப் பெருமைப்படும் அளவுக்குப் பழகியவர்கள் அல்லர். தோழமையுள்ளவர்களும் அல்லர்.

ஸலாத்துக்கு பதில் சொல்லியவாறே ''உட்காருங்க நிஷா!'' என்றாள் சல்மா.

''நிஷா நான் பகல் தான் வந்தேன். வந்ததும் உங்களோட புள்ளையளோட வாப்பா மௌத்தான செய்தியை உம்மா சொன்னாங்க!

சல்மா கண்கலங்கி நின்றாள்...

'சல்மா! எனக்கு வெளிநாட்டுக்குப் போக யாருமே பாஸ்போட் எடுத்துத் தர முன்வரல்ல! உங்கட புள்ளையளோட வாப்பா இக்பால் நானா தான் என்னையைக் கூட்டிப் போய் பாஸ்போட் எடுத்துத் தந்தார். நான் வெளிநாட்டுக்குப் போகிற நேரம் ஏயார்போட்டுக்கும் வந்து ஒதவி செஞ்சார்....'' சொல்லிக் கொண்டுவரும் போது நிசாவின் குரல் கம்மியது.

தொண்டையைக் கனைத்துக் கொண்டு நிஷா கேட்டாள்... ''விடிஞ்சா தலை நோன்பு... என்ன... ஏற்பாடு ஒன்னையும் காணோமே...''

சல்மா ''ஏதாவது செய்யனும்...? என்றாள்.

''ஏதாவது என்றால்...?

''புள்ளையளோட வாப்பாவோட எங்கட செல்வம் எல்லாம் போச்சு!''

''ஊராக்கள் கூட்டம் குடும்பம்...?''

''அவங்கவங்களோட வேலை வெட்டியே பார்க்கவே அவங்கவங்களுக்கு நேரமில்ல!''

''கவலைப்படாதீங்க சல்மா...! இப்போ நான் வெளிநாட்டுல வேலை செய்கிற இடம் நல்ல இடம்... நான் ஒங்களுக்கு மாசா மாசம் உதவி செய்யறேன் என்றவள் தன்முன்னால் நின்று தன்னையே பார்த்துக் கொண்டிருக்கும் மூத்தவன் பரீதைப் பார்த்து ''இவன் தான் ஒங்கட மூத்தவனா...? என்றாள்.

''சல்மா தலையாட்டினாள்

''ஒரு சேர்ட்ட போட்டுக்கொண்டு என்னோட வா மகன்...! என்ற நிசாவைப் பார்த்து ''எங்க போகப் போறீங்க, என்று கேட்டாள் சல்மா.

''நோன்பு மாசம் முழுவதும் நான் உங்களோடயே இருந்து நோன்பு புடிக்கப் போறேன். அதுக்குக் கொஞ்சம் சாமான் வாங்கி வரத்தான்...''

சல்மாவால் எதுவும் பேச முடியவில்லை சட்டையைப் போட்டுக் கொண்டு வந்த பரீத், நிசாவைப் பின் தொடர்ந்தான்.

வீட்டின் முன்னே ஊரில் பெரிய பணக்காரரும் பள்ளிடிரஸ்டியுமான ஜாபீர், தன் மகனை ''ஏன்டா மூதேவி நான் ஒனக்கு ஈரல் தானே கொண்டுவரச் சொன்னேன்... நீ போய் இறைச்சியைக் கொண்டு வந்திருக்கிறாயே!'' என்று திட்டிக் கொண்டிருந்தது சல்மாவின் காதில் மிகவும் தெளிவாக விழுந்தது.

ஏழைகள் நோன்புக்காக ஒரு பேரீச்சம் பழத்துக்கே வசதியின்றிப் போராடும் போது பணக்காரர்கள் ஈரல் தின்பதா இறைச்சியைத் தின்பதா என்று போராடிக் கொண்டிருக்கிறார்கள்.

'ஏழைகளுடனேயே நான் இருக்கின்றேன்' என்ற எல்லாம் வல்ல அல்லாஹ்வின் வாக்கு எவ்வளவு உறுதியானது. திக்குத் திசையின்றி தடுமாறிக் கொண்டிருக்கும் போது எங்கோ வெளிநாடொன்றில் தொழில் பார்த்த நிசா என்ற பெண்ணை ஏவித் தனக்கு உதவி செய்திறனே அதை எண்ணி, அல்லாஹ்வுக்கு இரண்டு நன்றிக்கான தொழுகையை நிறைவேற்ற ஆயத்தமானாள் சல்மா.

# காதல் மன்னன் 80 வயதிலும் தாலி கட்டும் பாக்கியம்!

''சதாபிஷேகம்'' கொண்டாடிய நடிகர் ஜெமினி கணேசனுக்கு முதலமைச்சர் கருணாநிதி நேரில் வாழ்த்துக் கூறினார்.

பட உலகில் ''காதல் மன்னன்'' என்று அழைக்கப்பட்டு வரும் நடிகர் ஜெமினிகணேசனுக்கு 80 வயது. அவருக்கும் மனைவி பாப்ஜிக்கும் திருமணம் ஆகி 60 ஆண்டுகள் ஆகின்றன.



80 வயதில் சதாபிஷேகம்

இந்த இரு நிகழ்வுகளையும் அவரது புதல்விகள் விழாவாக எடுத்தார்கள்.

விழா சென்னை அண்ணா அறிவாலயத்தில் உள்ள கலைஞர் அரங்கில் நடந்தது.

ஜெமினிகணேசனும், அவரது மனைவி பாப்ஜியும் முதலில் சாதாரண உடையில் மண்டபத்துக்கு வந்திருந்தனர்.

அங்கு போடப்பட்டு இருந்த நாற்காலி களில் இருவரும் உட்கார வைக்கப்பட்டனர். பிறகு ஒவ்வொரு மகளாக வந்து, குடத்தில் இருந்த தண்ணீரை எடுத்து ஊற்றி, அவர்களுக்கு அபிஷேகம் செய்தனர்.

அருகே இருந்த அறைக்குள் சென்று உடைமாற்றிக் கொண்டனர். புதுமணத் தம்பதிகள் போல் மேடையில் வந்து நாற்காலியில் அமர்ந்தனர். பின்னர் மாலை மாற்றும் சடங்கு நடந்தது.

அதன்பிறகு புரோகிதர்களின் வேத மந்திரங்கள் சடங்கு நடந்தது. 9 பண்டிதர்கள் வேத மந்திரங்களை ஓதினர்.

''காப்பு'' கட்டப்பட்டு, ஹோமம், கலச அபிஷேகம் நடந்தது. தங்கம், வெள்ளி உள்பட நவரத்தினங்களால் இந்த பூஜை நடைபெற்றது.

ஒரு மணிநேரம் நடந்த இந்தப் பூஜைக்குப் பிறகு ஜெமினிகணேசனுக்கும், பாப்ஜிக்கும் சதாபிஷேக கல்யாணம் நடந்தது. பாப்ஜி நாற் காலியில் உட்கார்ந்திருக்க ஜெமினிகணேசன் எழுந்து நின்றபடி தாலியைக் கட்டினார்.

அப்போது அருகே இருந்த புதல்விகளும், குடும்பத்தினரும் மலர்களைத் தூவினார்கள். அரங்கத்தில் இருந்தவர்கள் அட்சதை தூவினார்கள்.

மைக்கில் ''கல்யாண வைபோகமே'' என்ற பாடல் ஒலிபரப்பப்பட்டது. ''எண்பது வயதாகியும் இளமை குன்றாமல் இருக்கும் மன்னவனுக்கு மணவிழா'' என்ற பாடலும் ஒலித்தது. நடிகை மனோரமா பாடியிருந்த பாட்டு இது.

முதல்- அமைச்சர் கருணாநிதி, மனைவி தயாளு அம்மாள், துணைவியார் ராஜாத்தி அம்மாள், மகன் மேயர் மு.க.ஸ்டாலின், அவர் மனைவி துர்க்கா, மு.க.தமிழரசு ஆகியோரும் வாழ்த்தினார்கள்.

திரைப்பட உலகமே திரண்டிருந்தது.

வந்திருந்தவர்களில் பெரும்பாலானோர் ஜெமினி- பாப்ஜி தம்பதிகளின் கால்களில் விழுந்து ஆசி பெற்றனர்.



20 வயதில் ஜெமினி-பாப்ஜி திருமணம்

நடிகர் சிவகுமார், தன் கையால் வரைந்த ஜெமினிகணேசன் ஓவியம் ஒன்றைப் பரிசாக வழங்கினார்.

ஜெமினிகணேசன் நடித்த பல படங்களை இயக்கிய டைரக்டர் ஸ்ரீதர், பக்கவாத நோயால் பாதிக்கப்பட்டு நடக்க முடியாத நிலையில் இருக்கிறார். விழாவில் அவரும் கலந்து கொண்டார்.

சக்கர நாற்காலியில் ஸ்ரீதர் அமர்ந்திருக்க, சதாபிஷேக திருமணம் முடிந்ததும் ஜெமினிகணேசன் மனைவி சகிதமாக வந்து அவரிடம் ஆசி பெற்றார்.

# ராசி பலன்

பொ.சந்திரன்

17-12-2000 இருந்து 23-12-2000 வரை



### மேடம்:— அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.

இராசிநாதன் செவ்வாய் இராசியை நோக்குவது நல்லது. இதுவரை இருந்த நோய் விலகும். கடன் தீரும். மனச்சஞ்சலம் தீரும். கொடுக்கல் வாங்கல் சீராக இருக்கும். கல்வி முன்னேற்றம் இருக்கும். வெளிநாட்டுத் தொடர்பு, அயல்நாடு செல்ல வாய்ப்பு உருவாகும். சகோதரங்கள் உறவினரின் ஆதரவு பெருகும். நண்பர்களின் உதவி உண்டு. மனதில் ஆரோக்கியமான எண்ணங்கள் உதயமாகும். தெய்வீக எண்ணம் இயல்பாக வரும். குடும்பத்தில் இனிமை இருக்கும். காரமும் இருக்கும். காதலர் கொண்டாடுவர். சிலருக்கு கல்யாண பலன் உண்டு. தொழில் துறையில் வேலை அதிகரிக்கும். புதிய தொழில் அமைய வாய்ப்புண்டு.



### இடபம்:— கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2.

இராசிநாதன் பாக்கியஸ்தானத்தில் குருவின் பார்வை பெற்று இருப்பது யோகமே. கல்வி முன்னேற்றம் உண்டு. பொருளாதாரம் தடைப்பட்டாலும் சமாளிப்பீர்கள். சகோதர உதவியுண்டு. உறவினர் விலகியே இருப்பர். குழந்தைகள் சொற்கேளார். மனச்சஞ்சலம் இருக்கும். கற்பனையில் தீய எண்ணங்கள் உருவாகும். எதிரிகளின் பலம் குறையும். தீங்கு செய்ய மாட்டார்கள். குடும்பத்தில் வாக்குவாதமும் சச்சரவும் இருக்கும். சிலசமயம் சண்டை ஏற்படலாம். பிரிந்துபோகவும் இடம் உண்டு. காதலர் வாழ்வு கசக்கலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். வீடு, வாகனம் செலவை உண்டாக்கும். தொழிலில் வேலைப்பளு அதிகமானாலும் புகழ் உண்டு.



### மிதுனம்:—மிருகசீரிடம் 3,4. திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.

இராசிநாதன் புதன் இன்பஸ்தானமான ஏழாம் இடத்தில் இருப்பது நலம். கேதுவுடன் கூடி சற்றுப் பின்னடைவு ஏற்படலாம். எடுத்த காரியம் எல்லாம் தாமதமாக நடைபெறும். கையில் பணம் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். வீடு, வாகனங்களால் இலாபம் குறைவாக இருக்கும். உறவினர் முகச்சிரிப்புடன் ஒதுங்கிவர் நண்பர்களாலும் பெரிதாக உதவி இல்லை. மனம் தீவிரமாக இயங்கும். கட்டுப்பாடு போட முடியாது. எதிரிகளின் செயலால் மனவருத்தம் ஏற்பட இடம் உண்டு. குடும்பத்தில் சண்டையும் இல்லை சமாதானமும் இல்லை. காதலர் வாழ்வு இன்பமயம். தொழில்துறையில் அலைச்சல் இருந்தாலும் மதிப்பு உண்டு.



### கடகம்:— புனர்பூசம் 4. பூசம், ஆயிலியம்.

இராசிக்கு சுக்கிரபார்வை கிடைப்பதாலும் இராசிநாதன் இரண்டாம் வீட்டில் இருந்து ஐந்தாம் வீடுவரை சஞ்சரிப்பதாலும் நன்மைகள் பல நிகழ வாய்ப்பு உள. பணப்பற்றாக்குறை நிலவும். கல்வியில் ஆர்வம் மத்திமமாக இருக்கும். சகோதர உதவி உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும்.வாகனம் ஓட்டுவது கவனம். சுற்றத்தார் உறவினர் விசுவாசமாக இருப்பர். மனம் அலைபாயும். கற்பனையில் வாழ முற்படும். எதிரிகள் தொல்லை தருவர் ஆனால் உங்களுக்கு நன்மையாய் அமையும். குடும்ப சுகம் உண்டு. காதலர் வாழ்வில் உள்அன்பு இருக்கும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். நண்பர்கள் உதவி செய்வர். தொழில் செய்யும் இடத்தில் பதவிக்கு போட்டி உண்டு. சமாளிப்பீர்.



### சிங்கம்:— மகம், பூரம், உத்தரம் 1.

இராசிநாதன் சூரியன் எதிரியின் வீட்டில் புதனோடு கூடிப் பலம் பெற்றாலும் கேதுவோடு சந்தோஷமடைவதால் பின்னடைவே. பணத் தட்டுப்பாடு நிலவும். கல்வியில் ஆர்வம் இருக்கும். தொண்டை நோ, சளி சம்பந்தமான நோய் வரலாம். வீடு, வாகனங்களால் செலவு ஏற்படும். உறவினருடன் பகை கொள்ள இடம் உண்டு. வாகன ஓட்டிகளுக்குக் கவனம் வேண்டும். மனம் எதிரிடையாக எண்ணும். சஞ்சலம் இருக்கும். எதிரிகளின் சூழ்ச்சி பலிக்காது. உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். பிரயாணம் அமையும். மற்றவருக்குப் புத்தி சொல்லும் ஆற்றல் உண்டு. தொழில் கௌரவம் இருக்கும். பதவி உயர்வு அல்லது புதிய பொறுப்பு அமையும்.



### கன்னி:—உத்தரம் 2,3,4. அத்தம், சித்திரை 1,2.

இராசிநாதன் சுகஸ்தானத்தில் இருந்தாலும் ராகு, கேது சம்பந்தம் பெறுவது நல்லதல்ல. கைப்பொருள் கரைந்தாலும் பணம் வரும். கல்வியில் ஆர்வம் குன்றும். நண்பர்கள், உறவினர்களின் உதவி இருக்கும். வீடு வாகனங்களால் வருவாய் இருக்கும். மனம் கற்பனையில் மிதக்கும். கற்பனையில் சுகம் காணும். எதிரிகள் இல்லாதொழிவர். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். காதலர்கள் உல்லாசமாக பயமின்றித் திரிவர். அதிஷ்டம் கிடைக்கலாம். கோயில் வழிபாடு தல யாத்திரை அமையும். குரு அல்லது பெரியவர்களின் ஆசீர்வாதம் கிடைக்கும். தொழில் செய்யும் இடத்தில் போட்டி பொறாமை நிலவும். உமது பதவியில் வேறு ஆள் அமரப் போட்டி போடலாம்.



### துலாம்:—சித்திரை 3,4. சுவாதி, விசாகம் 1,2,3.

இராசியில் செவ்வாய் சனிபார்வை பெற்று இருப்பது சரியில்லை. இராசிநாதனுக்கு குருவின்பார்வை கிடைப்பது விசேஷம். பணம் ஒரு வழியால்வரும்மறுவழியால்தடைப்படும். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதரங்கள், நண்பர்கள் உதவுவர். உறவினர்கள் பகைகொள்ள இடம் உண்டு. வீடு, வாகனங்களால்இலாபம்இல்லை. மனத்தில் அமைதி, சாந்தம் நிலவும். யதார்த்த நிலையில் அறிவு சார்ந்த கருத்துக்கள் உதயமாகும். குடும்ப உறவில்விரிசல்ஏற்பட இடம் உண்டு. காதலர் வாழ்வில் கஷ்டம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் செய்யும் இடத்தில் அமைதி நிலவும். சம்பளம் அதிகரிக்கலாம். மதிப்பு உண்டு.



### விருச்சிகம்:— விசாகம் 4. அனுஷம், கேட்டை.

இராசிக்கு குருவின் பார்வையும் இராசிநாதனுக்கு சனியின் பார்வையும் கிடைப்பதால்நற்பலனை எதிர்பார்க்கலாம். நீண்டநாள் கனவு பலிதமாகும். பணம் கையில் இருக்கும். கல்வியில் ஆர்வம் இருக்கும். உறவினர் விலகி இருப்பர். வீடு, வாகனங்களால் தொல்லை ஏற்படும். நண்பர்கள் உதவிசெய்வர். மனம் அறிவு நிலையில் செயற்படும். உன்னதமான அறிவு சார்ந்த கருத்துக்கள் தோன்றும். குடும்ப ஐக்கியம் பேணப்படும். காதலர்கள் கூடிக்குலாவுவர். எதிரிகள் செயலற்று ஒதுங்கி இருப்பர். பங்குவர்த்தகம் கூட்டுவியாபாரம்இலாபமடையும். உடல் ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் செய்யும் இடத்தில் சமநிலைதென்படும்.



### தனு:— மூலம், பூராடம், உத்தராடம் 1.

இராசிக்கு சூரியனின் பிரவேசம் ஒரு புதுத் தென்பைக் கொடுக்கும். கையில் பணம் புரளும் இருப்பினும் கடன் இருக்கவே செய்யும். சில சமயம் புதுக் கடன் பட வேண்டியும் வரலாம். கல்வியில் ஆர்வம் இருக்கும். சகோதர உதவி இல்லை. நண்பர்களிடமும் பெரிதாக உதவி இருக்காது. வீடு, வாகனங்களும் செலவை ஏற்படுத்தும். மனம் நாளாந்தக் கடமையில் கவனம் செலுத்தினாலும் வரும் காலத்தைப் பற்றிய வீண் கவலையில் மூழ்கும். எதிரிகளால் பொருள் நஷ்டம் வரலாம். குடும்பத்தில் கலவரத்துடன் கூடிய அமைதி நிலவும். காதலர் வாழ்வும் அக்கினிப் பரீட்சையே! தொழில் துறையில் நீங்கள் அறிய வேண்டியவற்றில் சிலவற்றை அறிவீர்கள்.



### மகரம்:— உத்தராடம் 2,3,4. திருவோணம், அவிட்டம் 1,2.

இராசிநாதன் சுகஸ்தானத்தில் பலவீனமடைந்தாலும் செவ்வாயின் பார்வையால் சற்று ஆறுதல் அடையலாம். பணம் தடைப்பட்டு வரும். கல்வியில் ஆர்வம் வரும். சகோதர உதவியுண்டு. நண்பர்கள் உதவுவர். உற்றார், உறவினரால் பெரிதாக உதவ வாய்ப்பு இல்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தும். வாகன ஓட்டிகள் கவனம். மனம் சுய பிரகாசமடையும். நல்ல கருத்துக்கள் தெய்வீக எண்ணங்கள் தோன்றும். எதிரிகளால் தொல்லை இல்லை. குடும்பத்தில் பூரண அமைதிநிலவும். காதலர்கள் இதய அன்பைப் பரிமாறுவர். உடல் ஆரோக்கியம் சிறு பாதிப்புக்குள்ளாகலாம். வெளிநாட்டுப் பிரயாணம் அமையலாம். தொழிற் துறையில் போட்டி, பொறாமை இருக்கும்.



### கும்பம்:— அவிட்டம் 3, 4. சதயம், பூரட்டாதி 1,2,3.

சூரியன், கேது ஆகிய கிரகங்களின் பார்வை இராசிக்கு கிடைப்பது நன்மை, தீமை கலந்த பலன்களை எதிர்பார்க்கலாம். கல்வியில் இயல்பாக ஆர்வம் இருக்கும். பணம்கையில்இருக்கும் எடுத்தகாரியத்தை இடையில் விடாது முடிப்பீர்கள். வாகனங்களால் பெரிதாக இலாபம் இல்லை. உறவினர், நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மனம் கற்பனையில் கோட்டைகட்டும். யதார்த்த நிலைக்கு வர முடியாமல் தவிக்கும். எதிரிகள் இடம் மாறி அலைந்து திரிவர். குடும்பத்தில் பிரச்சினை தோன்றலாம் சமாளிப்பீர்கள். காதலர்கள் சந்திப்புக்கு இடம் உண்டு. தொழிற்துறையில் அமைதி உண்டு.



### மீனம்:— பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி

இராசி நாதன் வீரியஸ்தானத்தில் வக்கிர கதியில் இருந்தாலும் செவ்வாயின் பார்வை பெறுவதால் ஓர் அளவுக்கு ஆறுதல் உண்டு. பணத் தட்டுப்பாடு நிலவும். கல்வியில் ஆர்வம் குறையலாம் சகோதர உதவியுண்டு. உறவினருக்குள் பிரச்சினை வர வாய்ப்பு உள்ளது. வீடு, வாகனங்கள் செலவை ஏற்படுத்தலாம். மனம் சஞ்சலப்பட்டாலும் அமைதியை நாடும். எதிரிகள் தாங்களாகவே சிக்கலில் மாட்டிக் கொள்வர். குடும்பத்தில் சந்தேகத்துடன் கூடிய அமைதி நிலவும். காதலர் வாழ்வில் தென்றல் வீசும். தேக ஆரோக்கியம் நன்றாக இருக்கும். தொழில் முறையில் புதிய உத்தியைக் கையாண்டு வெற்றி பெறுவீர்கள்.

# துட்டு குடு அப்பா!

"யப்போவ், துட்டு வேணும். குடு!

"துட்டா? எதுக்குடா?

"நான் ஷேவ் பண்ணி, கிராப் வெட்டி ஒரு ஷாம்பு குளியலும் போடணும். அதுக்குத்தான்?

"ஏண்டா வீணா ரிஸ்க் எடுக்கிறே? தாடி இருந்தா நீ ஆள் பரவாயில்லே ஆனால் தாடி இல்லாத உன் மொகரையைப் பார்த்தா சின்னப் பொண்ணுங்களெல்லாம் மலேரியா வந்து பொஸ்க்குனு போயிடப் போகுதுங்க!

"ரொம்பத்தான் கிண்டல் பண்றே நைனா. உம்மவன் அழகா இருக்கணும்னு ஒனக்கு ஆசையே கிடையாதா?

"ஆசைப்பட்டா மட்டும் அழகு வந்திடுமா? டேய், அழகுங்கிறது சட்னு கிடைக்கக் கூடிய விஷயமில்லே. அதுக்கு குடுப்பினை வேணும். உன் அப்பங்காரன் நான் அழகா இருக்கிறது மட்டும் போதாது. உன் ஆத்தாளும் என்ன மாதிரி இல்லாட்டியும் என் ரேஞ்சுக்கு கொஞ்சம் கொறைச்சலா இருந்திருந்தாலும் பரவாயில்லை, நீ என்னை மாதிரி அப்பிடியே சினிமா ஹீரோவாட்டம் பொறந்திருப்பே. ஹூம் என்ன பண்றது எல்லாம் உன் தலையெழுத்து. என் தலையில உன் ஆத்தாளைக் கட்டிப்புட்டாங்களே!



"அச்சச்சோ! சமையல் கட்டில இருக்கிற ஆத்தாவுக்கு நம்ம பேச்சுக் கேட்டிருக்கும்போல. பாத்திரமெல்லாம் தடார் படார்னு உடைபடுற சத்தம் கேட்குது.

"ஆமாடா, இப்ப என்ன பண்ணுறது?"

சூறாவளி இந்தப்பக்கமா வீசறத்துக்குள்ள துட்டக் குடு. நான் அந்தப் பக்கமா ஓடிடறேன். நீ இந்தப்பக்கம் போய் பதுங்கிக்க.

"இந்தா பிடி துட்டு! ஆளவுடு. சீக்கிரம், நீ அந்தப் பக்கம்- நான் இந்தப் பக்கம்- எஸ்கேப் பாயிடணும்!"

- ப்ராடி

(நடிகர்கள் பிரபுதேவா மணிவண்ணன் ஆகியோரை மகன் தந்தையாக உருவகித்து எழுதப்பட்ட உரையாடல்கள்)

# வீரப்பன் இலங்கையிலா? அதிரடிப்படை சந்தேகம்!

சந்தனக் கடத்தல் வீரப்பன் இப்போது தமிழ்நாடு – கர்நாடக எல்லைப் பகுதிக் காட்டிலா அல்லது இலங்கை வன்னிக் காட்டிலா?

வீரப்பனைத் தேடிப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள தமிழ் நாடு கர்நாடக அதிரடிப் படைக் குழுவினருக்கேஇந்தச் சந்தேகம் ஏற்பட்டு விட்டது.


நெடுமாறன்

அவசியமானால் தமக்கு இராணுவ உதவியும் கிடைக்க இருப்பதால், இராணுவம் வருவதற்கு முன்னரே வீரப்பன் இலங்கைக்கு ஓடித் தப்பியிருக்கலாம் என்று அதிரடிப் படையினர் நம்புகிறார்கள்.

தமிழ்நாட்டு அரசியல் வட்டாரங்களிலும் பரவலாக இந்தக் கருத்து நிலவுகிறது.

வீரப்பனுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் தொடர்பு இருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

கன்னட சூப்பர் ஸ்டார் ராஜ்குமாரை 108 நாட்களின் பின்னர் வீரப்பனிடமிருந்து மீட்பதற்குத் தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறனின் தூதும் கொளத்தூர் மணியின் தலையீடும் பெரிதும் உதவியிருக்கின்றன.

இவர்கள் இருவரும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துடனும் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடனும் நெருங்கிய தொடர்பு உடையவர்கள் என்பது பிரசித்தம்.

இவர்கள் இருவரும் தலையிட்டதால்தான் பணயக் கைதி ராஜ்குமாரை விடுவிக்க வீரப்பன் இணங்கியதாகப் பேசப்படுகிறது.

அதுவும் சும்மா அல்ல. பெரும்தொகை பணத்தைப் பெற்றுக் கொண்டுதான் என்று கூறுகிறார்கள்.

அந்தப் பணத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குக் கப்பலில் ஆயுதங்கள் வந்து கொண்டிருக்கின்றன என்று அ.தி.மு.க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா இந்திய, இலங்கை அரசுகளுக்கு முன்னெச்சரிக்கைத் தகவல் கொடுத்தார்.

வீரப்பன் ஆரம்பக்கட்டங்களில் ராஜ்குமாரை விடுதலை செய்வதற்குச் சொந்தப் பிரச்சினைகள் சம்பந்தப்பட்ட கோரிக்கைகளையே விடுவது வழக்கமாக இருந்தது.

காலப்போக்கில் அந்த நிலைமை மாறியது. தன்னை ஒரு தமிழ்த் தேசிய வீரன் என்று காட்டும் வகையிலான கோரிக்கைகள் விடுக்கப்பட்டன.

அவற்றில் ஒன்று தடா கைதிகளை விடுதலை செய்யவேண்டும் என்பதாகும்.

இதற்குக் காரணம் தமிழ் நாட்டின் தமிழ்த் தீவிரவாதிகளான தமிழர் விடுதலைப் படையினர், மற்றும் தமிழ்த் தேசிய மீட்புப் படையினர் ஆகியோரின் உறவும் ஒத்துழைப்பும் கிடைத்ததுதான் என்று ஊகிக்கப்படுகிறது.

இந்தத்தமிழ்த் தீவிரவாத இயக்கங்களுடன் இலங்கையின் தமிழீழ வீடுதலைப் புலிகள் இயக்கத்துக்குத் தொடர்பு உண்டு என்று தமிழ்நாட்டில் பலமான நம்பிக்கை இருக்கிறது.

ஆகவே வீரப்பன் இப்போது தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் தீவிரவாதிகளின் கைப் பொம்மையாக மாறிவிட்ட நிலைமை காணப்படுகிறது என்கிறார்கள்.

தீவிரவாதிகளே வீரப்பனைத் தற்காலிகமாக இலங்கைக் காட்டுக்கு அனுப்பியிருக்கலாம் என்று பேச்சு அடிபடுகிறது. இதில் கொளத்தூர் மணி பெரிதும் சம்பந்தப்படுத்தப் படுகிறார். ஏனெனில் அவர் ஏற்கனவே இலங்கைக்கு வந்துவிட்டுத் திரும்பிப்போய் பழகியவர். பிரபாகரனுடன் நேரடித் தொடர்பு உடையவர்.


வீரப்பன்

மணி திராவிட கழகத்தின் மாநில நகராட்சிகளின் அமைப்புச் செயலாளராக இருந்தவர்.

ராஜ்குமார் விடுதலைக்குப் பின் அந்தப் பதவிக்குச் சாமி திராவிட மணி நியமிக்கப்பட்டார்.


பிரபாகரனுடன் கொளத்தூர் மணி

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஜெயின் கமிஷன் மூலம் விசாரிக்கப்பட வேண்டியவர்கள் என்று பட்டியலிடப்பட்ட 21 பேரில் கொளத்தூர் மணியும் ஒருவர்.

சில வருடங்களுக்கு முன்னரே வீரப்பன், கொளத்தூர் மணியுடன் தொடர்பு வைத்துக் கொள்ள விரும்பியதாகத் தகவல். தனக்கு வேண்டியவர் ஒருவரைத் தூது அனுப்பியும் மணி, வீரப்பனைச் சந்திக்க அப்போது விரும்பவில்லை.

ராஜ்குமார் கடத்தப்பட்டதை அடுத்து தக்க தருணம் வந்துவிட்டதாக மணி எண்ணினார்.

ராஜ்குமாரை விடுவிக்க நக்கீரன் கோபால் அரசின் தூதுவராக நான்கு முறை வீரப்பனிடம் போயும் காரியம் கைகூடவில்லை.

இந்தத் தருணத்தில் கொளத்தூர் மணி வீரப்பனுக்கு முறையான சிக்னல் கொடுத்து விட்டுக் காட்டுக்குச் சென்றார்.

நெடுமாறன் தூது சென்றபோது மணியும் வீரப்பனுடன் இருந்தார்.

ராஜ்குமாரின் விடுதலைக்கு வீரப்பனிடம் நாள் குறித்துக் கொடுத்தவரே கொளத்தூர் மணிதான் என்று கூறப் படுகிறது.

அவர்தான் வீரப்பனைத் தற்காலிகமாக இலங்கைக்கு அனுப்ப ஏற்பாடு செய்தி ருப்பார் என்று ஊகிக்கப்படுகிறது.


நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்



உங்கள் கனவில்
மின்னிய தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால்
மின்னட்டும்

NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellers



நியூ திவ்யா ஜுவல்லர்ஸ்



உங்கள் கனவில்
மின்னிய தங்க நகைகள்
நனவாகும் வேளையில்
உங்கள் அங்கங்கள்
எங்கள் தங்கங்களால்
மின்னட்டும்

NEW DHIVIYA JEWELLERS
42 - C, Galle Road, Wellawatte,
Colombo - 06. Tel: 508501, 505065
Specialist in 22 kt. Gold Jewellers



இப்பத்திரிகை கொழும்பு 06 ... 2000 டிசம்பர் 17 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்படுகிறது.